## கிளி/ சிவபாத கலையகம்

பொன்னகர், கிளிநொச்சி

# மாணிக்கத் தடம்



## நாற்பது வருட கால வழித்தடங்களின் பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கத்தடம்

## கிளி/ சிவபாதகலையகம் அ.த.க. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் விபரம்


| | |
|---|---|
| மவலரின் பெயர் | : மாணிக்கத்தடம் |
| இதழாசிரியர் | : திரு. துரைசிங்கம் கருணாகரன். |
| வெளியீடு | : கிளி/ சிவபாதகலையகம் அ. த. க. பாடசாலை |
| முதற் பதிப்பு | : 2023 |
| அச்சுப் பதிப்பு | : வேழன் பதிப்பகம் |
| பக்கங்கள் | : 90 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழு

**திருமதி. பரமேஸ்வரி சோதிலிங்கம்**
**முதல்வர்**

**திரு. கனேஸ் விஜயசேகரன்**
**பிரதி அதிபர்**

**திரு. துரைசிங்கம் கருணாகரன்**
**இதழாசிரியர்**

**திருமதி. சந்திரவாணி சுரேசன்**
**ஆசிரியர்**

**திருமதி. தவராணி சிவநேசர்**
**ஆசிரியர்**

**திருமதி. புகழ்ச்செல்வி சந்திரமோகன்**
**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!
என்றென்றும் வாழிய வே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!
வளர்மொழி வாழிய வே!
வளர்மொழி வாழிய வே!

–மகாகவி சுப்பிரமணிய பாரதியார்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம்

**"கல்வியே கருந்தனம்"**

## தூரநோக்கு

**"மாற்றங்களை சாதகமாக்கி வெற்றி இலக்கை எட்டும் மாணவர்கள்"**

## பணிக்கூற்று

**"மாறுபட்ட சூழலிலிருந்து வரும் மாணவர்களை சவால்களை எதிர்கொள்ளும் வகையில் அவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்தல்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி அன்னையின் பாதம் தொட்டு...

நற்பிரயை ஆக்கு மெங்கள்
சிவபாதகலையகம்
"வாழ்க நன்று வாழ்க நன்று
வாழ்வளித்து வாழ்க நன்று" – 02

(நற்பிரயை ...........)

ஏற்றம் தரும் நல்லொழுக்கம்
மாற்றம் தரும் கல்வி ஞானம்
உழைப்போடு நல்லன்பு
உவந்தளிக்கும் கலையகம்

(நற்பிரயை ...........)

நல்வழியைக் காட்டி நிற்கும்
அதிபரோடு ஆசிரியர்
புகழ் ஓங்கும் செயல் புரிவோம்
தேசம் வாழ நாம் உழைப்போம்.

(நற்பிரயை ...........)

– திரு. துரைசிங்கம் கருணாகரன். –
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்
கலைமாணி, உளவளத்துணை டிப்ளோமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பள்ளி முதல்வர்



திருமதி. பரமேஸ்வரி சோதிலிங்கம்
(S.L.P.S - I, Tr.COM, BA, P.G.D.M, MEd.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆகமப் பிரவீணா

## சிவஸ்ரீ ஜெக-ஜெகதீஸ்வரக்குருக்கள் J.P

## Sivasri Jeka - Jekatheeswarakkurukkal J.P

குமாரபுரம் ஸ்ரீ முருகன் தேவஸ்தான பிரதம குரு

குமாரபுரம், பரந்தன்

*Kumarapuram, Paranthan.*

### ஆசியுரை

கிளிநொச்சி மாவட்டத்திலே இறைவனின் நாமத்துடன் விளங்கும் ஒரே பாடசாலை இதுவாகும். முழுமுதல் கடவுளாம் சிவனின் பாதம் பணிந்து சிவபாதகலையகம் என்னும் பெயர் கேட்கும் போதும் பாடசாலையின் பெயரை உச்சரிக்கும் போதும் எமது மனதில் எம்மையறியாத ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. அதே போல் இங்கு பயிலும் மாணவர் நல்ல கல்விகலை ஆர்வத்துடன் திகழ்வதற்கும் பாடசாலையின் நாமமே காரணம். எனவே வளர்ந்து வரும் மாணவர் சமூகத்தினர் தான் எமது கிராமத்தின் முதுகெலும்பாகும். அவர்களின் கல்வியை திறம்பட செயலாற்றி வரும் இப்பாடசாலை நான்கு தசாப்தங்களை மிகச் சிறப்பாக கடந்துள்ளது. இது பெருமைக்குரிய விடயமாகும்.

ஒரு பாடசாலையின் வளர்ச்சி அந்த ஊர் மக்களின் சேவையிலும் பயிற்றுவிக்கும் ஆசிரியர், அதிபர் கையிலேயும் உள்ளது. ஆண்கள், பெண்கள் என்று இருபாலாரும் படிக்கும் இக்கல்விக் கூடம் எதிர்காலத்தில் இன்னும் பல முன்னேற்றபாதை செல்ல வேண்டும் என்று கூறுவதுடன் நல்ல எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் மாணவர்கள் திறமையான சித்திகளைப் பெற்று பாடசாலைக்கும் சமூகத்தினருக்கும் பெருமை சேர்க்க வேண்டும்.

இப் பாடசாலையின் நன்மை கருதி சிறப்பான அம்சங்களுடன் வெளிவரும் இந்நூல் கல்வி கலை என சகல அம்சங்களுடன் சிறந்து விளங்குகிறது. இப்படியான முயற்சியைப் பாராட்டுவதுடன் என்றும் இன்னும் பல வளங்கள் கண்டு வளர எனது நல்லாசிகளும் வாழ்த்துக்களும்.

சுபம்

இங்ஙனம்

ஆகமப் பிரிவீனா சிவஸ்ரீ. ஜெக. ஜெகதீஸ்வரக் குருக்கள் J.P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

கிளிநொச்சி சிவபாதகலையகம் அ.த.க.பாடசாலையின் 40வது ஆண்டு நிறைவினையொட்டி வெளியீடு செய்கின்ற மலருக்கு ஆசிச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1983ம் ஆண்டு கியூடெக் நிறுவனத்தின் பங்களிப்புடன் இப்பாடசாலையானது ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பகால பாடசாலை முதல்வராக அருட்தந்தை திரு பயஸ் அடிகளார் பொறுப்பேற்று நடாத்தி வந்தார்.

பின்னர் 01.01.1992 காலப்பகுதியில் அரசினால் இப்பாடசாலையானது உத்தியோகபூர்வமாக கையேற்கப்பட்டது. அதன் பின்னர் பாடசாலையின் முதல்வராக திரு.நடேசன் தம்பிராசா அவர்கள் நியமனம் செய்யப்பட்டார். தற்போது அதிபராக திருமதி பரமேஸ்வரி சோதிலிங்கம் அவர்கள் இப்பாடசாலையினைப் பொறுப்பேற்று திறம்பட கடமையாற்றி வருகின்றார்.

07 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இப்பாடசாலையில் 371 மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். 2018ம் ஆண்டு இப்பாடசாலை மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் மென்பந்துப்போட்டியிலும் தமிழ்த்தினப் போட்டிகளிலும் முதலிடம் பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.

கடந்த வருட தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் இப்பாடசாலை மாணவர்கள் 95% சித்தியினையும், க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் (2021) 65% சித்தியினையும் பெற்று இப்பாடசாலைக்கும். எமது மாவட்டத்திற்கும் பெருமையீட்டித்தந்துள்ளனர். இவ்வெற்றிக்காக உழைத்த அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு இந்நேரத்தில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்பாடசாலையில் கொய்க்கா (KOICA) திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதுடன், உயர்கல்விப் பீடங்களுக்கு அயற்சூழலில் இப்பாடசாலை காணப்படுவதனால் எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் சிறந்த பாடசாலையாக மிளிரும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

இப்பாடசாலைக்கு அதிபர், ஆசிரியர்களுக்கு உறுதுணையாக அப்பிரதேச சமூகமும் இணைந்து செயற்படுவதனால் இப்பாடசாலையின் பலம் இரட்டிப்பாகியுள்ளமை பாராட்டுதற்குரியது.

இப்பாடசாலை மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளுடன் நின்றுவிடாது கலைநிகழ்வுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றியீட்டி பாடசாலைச் சமூகத்திற்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்கவேண்டுமென வாழ்த்துவதோடு, இப்பாடசாலையின் 40வது ஆண்டு நிறையினையொட்டி வெளிவருகின்ற இந்த மலருக்காக அரும்பாடுபட்ட பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மலர் வெளியீட்டுக் குழுவினர் மற்றும் கல்விச் சமூகத்தினருக்கும் எனது ஆசியினையும், மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.கி. கமலராஜன்,
வலயக்கல்வி பணிப்பாளர்,
கிளிநோச்சி தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் 1983 காலப் பகுதியில் தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக இடம் பெயர்ந்து வந்த மக்களின் வாழ்விடமாக மாறிய பல கிராமங்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாகத் தோற்றம் பெற்றன. அந்த வகையில் பொன்னகர், மலையாளபுரம், அம்பாள்குளம், இந்துபுரம், செல்வபுரம், வசந்தநகர், திருமுறிகண்டி என கிளிநொச்சி மாவட்டத்தில் A9 வீதியை மையப்படுத்தியதாக இக் கிராமங்கள் எழுச்சி கண்டன. கிராமங்களில் மக்கள் குடியேற்றப்பட்டதைத் தொடர்ந்து அவர்களின் நலப் பணிகள் செய்வதற்காக தன்னார்வத் தொண்டு அமைப்பாக கியூடெக் நிறுவனம் செயற்பட்டது. மக்களுக்கான மனித நேயப் பணிகளை செய்ததோடு அக் குடும்பங்களில் வாழ்ந்து கொண்டு இருந்த சிறுவர்களின் எதிர்கால நலன் கருதி ஒரு ஆரம்பப் பாடசாலையாக சிங்கள வன்செயலால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்கென சிவபாதகலையகம் என்ற நாமம் கொண்டதாக ஒரு பாடசாலையாக 1983.02.20ஆம்திகதி ஆரம்பித்ததாக பாடசாலை வரலாறு செப்பி நிற்கிறது.

அவ்வகையில் இந்தப் பாடசாலை இவ் வருடம் தனது 40ஆவது அகவையில் கால்பதிக்கிறது. நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையானது தன்னுடைய வராற்றுப் பயணத்தில் பல்வேறு விதமான இட்டல் இடைஞ்சல்களை சாந்தித்து வருகின்றது. அவை எல்லாவற்யையும் சாதனைகளாக்கி இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு பெயர் சொல்லக் கூடிய அளவிற்கு ஒரு பாடசாலையாக மிளிர்ந்து வருகின்றது.

அந்தவகையில் இந்த விழாவினை முன்னெடுப்பதற்கு பாடசாலை தொடக்க காலம் முதல் இன்று வரையும் எம்முடன் நட்புடனும், அன்புரிமையுடனும் எமக்கு உதவிகள் வழங்கிவரும் திரு. வேலாயுதம் சர்வேஸ்வரன் லண்டன் அவர்களுக்கும் எனது மனம்நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இப் பாடசாலையானது மென்மேலும் வளர்ச்சியடைந்து தன்னகத்தே உயர்தர வகுப்புக்களை ஆரம்பித்து எதிர்காலத்தில் ஒரு வித்தியாலயமாக வளர வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கி நிறைவு செய்கின்றேன்.

அதிபர்
கிளி/சிவபாத கலையகம் அ.த.க. பாடசாலை
திருமதி.ப. சோதிலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலையானது நாற்பது வருடங்களைக் கடந்து வந்துள்ளமையை நினைத்து மனம் பேருவகை அடைகின்றது. இதன் பயணப் பாதையில் நான் ஒரு ஆசிரியராக அதிபராக, பிரதி அதிபராக கடமையாற்றி உள்ளமையால் இதன் வளர்ச்சியானது என்னை பிரமிக்க வைக்கின்றது. பல நெருக்கடிகளை இப்பாடசாலை தொடர்ச்சியாக சந்தித்திருந்த போதும் வினைத்திறன் மிக்க செயற்பாட்டின் மூலம் பல்வேறு வகை ஆளுமை மிக்க மாணவர்களை இப்பாடசாலையில் உருவாக்கியுள்ளமை மிகவும் சாதனை மிக்க செயற்பாடாகுமென எண்ணுகின்றேன். பொருளாதாரத்திலும் கல்வி அறிவிலும் நலிவுற்ற இப்பிரதேச சமூகத்தினருக்கு எதிர் கால வாழ்வியலுக்கான வழிகாட்டியாக எமது பாடசாலை சேவையாற்றி நிமிர்ந்து நடைபோட வேண்டும் என மனமுகர்ந்து வாழ்த்துகின் றேன்.

நன்றி

கணேஷ் விஜயசேகரன் - பிரதி அதிபர்
கிளி/சிவபாத கலையகம் அ.த.க.பாடசாலை
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோட்டக் கல்விப் பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து.

"தாயைப்பழித்தால் தாய் தடுத்தால் விடுவேன் - தமிழைப் பழித்தால் தாய் தடுத்தாலும் விடேன்." என்கிற பாரதிதாசனின் கூக்குரல் ஓசைக்கு இடி விழுந்தாற்போல் 1977, 1983ஆம் ஆண்டுகளில் வடக்கு நோக்கி இனவாதத்தில் தள்ளப்பட்ட தமிழர்கள் முறிகண்டியிப் பிரதேசத்தை அண்டி குடியமர்த்தப்பட்டு அப்பகுதியிலே ஓலைக் கொட்டில்களால் அமைக்கப்பட்ட பாடசாலையாகத் திறந்த பள்ளியே சிவபாதம் கலையகம் ஆகும். சிங்கள வன்செயலால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் கலையகம் என்பதே பள்ளியின் பொருளாகும். மேற்படி பாடசாலை 1983ஆம் ஆண்டு திறக்கப்பட்டு இத்துடன் நாற்பது ஆண்டுகள் நிறைவடைகின்றன. இப் பாடசாலையின் வளர்ச்சியில் முன்னாள் அதிபர் திரு. நடேசன் தம்பிராஜா போன்றவர்களின் அளப்பரிய சேவை ஆரம்பக் கட்டுமாணத்திற்கு பெரும் பங்களிப்புச் செய்தது. அதன் பின்னர் அறிவியல் நகர் வளர்ச்சியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீட வருகையும் இப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றியது.

இப் பிரதேசத்தில் இடம் பெயர்ந்த வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களே அதிகமாக வாழ்ந்து வருகின்றனர்.
இப் பகுதியில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீட்டுத்தோட்ட குடியேற்றமும், பொன்னகர் கிராமத்திட்டமும் கொடையாளர் S.K.நாதனின் முதியோர் இல்லமும் அமைக்கப்பட்ட இப் பிரதேசத்தின், ஆடைத்தொழிற்சாலைகளும், ஜேர்மன் தொழிநுட்ப கல்லூரியும், மத்திய வங்கிக் கட்டடத் தொகுதியும் சுற்றாடல் அதிகார சபையும் அமைந்து காணப்படுகின்றது. 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில மூன்று தசாப்த காலமாக இருந்து வந்த போர்ச் சூழலால் இப் பிரதேசம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியமையும் குறிப்பிடதக்கது.

இலங்கையில் யுத்த சூழலை அடுத்து மீண்டும் ஏற்பட்ட அமைதிக்குப் பின்னர். சிவபாதகலையகம் கல்வி செயற்பாடுகளில் பாரிய பின்னடைவைச் சந்தித்திருந்தது. பாடசாலை பௌதிகவளப் பற்றாக்குறை ஆசிரியப் பற்றாக்குறை கல்வியில் நலிவடைந்த மாணவர் சமூகம் பொருளாதார நிலையில் பாதிப்படைந்த மக்கள் என பாரிய பின்னடைவுக்குள் இருந்து பாடசாலையை ஒரு உயிரோட்டம் உள்ள பாடசாலையாக மாற்ற தற்போதைய அதிபர். திருமதி. பரமேஸ்வரி சோதிலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது அர்ப்பணிப்பான சேவையும் சமூகத் தொடர்பாடலும் பள்ளிச் சமூகத்திற்கு உயிரூட்டியது. தற்போதைய அதிபர் அவர்கள் தென்கொரியா அரச உதவியுடன் "கொய்கா" திட்டத்தின் கீழ் பௌதிக வள தேவைகளையும் சமூக நலன் விரும்பிகளை ஒன்றிணைத்து கிளிநொச்சி நகரில் வளர்ந்து வரும் ஒரு பாடசாலையாக மாற்றிய திருமதி. பரமேஸ்வரி சோதிலிங்கம் இப் பாடசாலையின் ஒரு மைற்கல் ஆவார். தற்போது அனைத்து துறைகளிலும் வளர்ச்சி கண்டு பாடசாலை வளர்ந்து வருகின்றது. இதன் நாற்பதாவது ஆண்டில் வாழ்த்துவதுடன் வளர்க சிவபாத கலையகம்.

சு.தர்மரத்தினம்.
கோட்டக் கல்விப் பணிப்பாளர்.
கரைச்சி / அகில இலங்கை
சமாதான நீதவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# From one of the founders heart......

It was in 1982, My batch mates and I were in our 2nd year of engineering degree course at university of Peradeniya in SriLanka. There was flooding in Kilinochchi some time in 1982 and we collected dry rations and went to Kilinochchi to hand over them to flood victims after handing over the rations, we started talking to the villagers, who were predominantly the upcountry to the north following the 1977 riots. The villagers told us that they desperately wanted to educate their children than looking for food. They were struggling to get school admissions to their children because they lost all their certificates during the riots.

They asked whether be could provide them with a building so that they can start teaching their children. We took this as a challenge and raised funds through staging a drama at Veerasingam hall while we were continuing with our degree course. eventually our batch managed to construct a building for a school, which was then handed over to the local priest Fr. Fias. The school was named "Sivapathakalaiyakam", "Sivapatha" has a particular meaning related to the displaced people but I do not want to expand on it. Although, we lost touch with a school following 1983 riots and the civil war afterwards and the displacement of many of our friends,Fr. Fias continued with his services to this school and managed to convert it in to a government school. The school has grown very well over the years and providing education to pupils up to GCE(O/L).

Regards,
Dr V.Sarveswaran
Engineer.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாணிக்கவிழாகாணும் சிவபாதகலையகம் வரலாற்றில் ஓர் அடையாளம் வாழ்த்துச் செய்தி

மாணிக்கவிழாகாணும் கிளிநொச்சி சிவபாதகலையகம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைச் சமூகத்திற்கு முதலில் எனது வாழ்த்துக்களைச் சொல்வதில் பேருவகை அடைகின்றேன். சிலவரலாறுகள் காலம் கடந்தாலும் மிகுந்த மகிழ்வுகளைத் தருவதுண்டு. அந்தவகையில் இந்தப்பாடசாலையின் வரலாற்றினை நான் நன்கு அறிவேன். நாட்டில் ஏற்பட்ட பல்வேறு துயரிய சம்பவங்களில் இனக் கலவரத்தையும் நாங்கள் மறக்கமுடியாது. அவ்வாறான சூழலில் உயிர்த் தஞ்சம் தேடி வடக்கு நோக்கி விரைந்த தமிழ் உறவுகளைக் கிளிநொச்சி மண்ணும் வரவேற்கத் தவறவில்லை. அவ்வாறானக் காலகட்டத்தில் உருவான இந்தபாடசாலை இன்று எம் கண் முன்னால் மாணிக்கமாகத் துலங்குகின்றது.

1983ம் ஆண்டு 04ம் மாதம் 15ம் திகதி அப் பகுதியில் குடியேற்றப்பட்ட மக்களின் கல்விவளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட இந்தப் பள்ளி இன்று சாதாரணதரம் வரை வளர்ச்சியடைந்து மிளிர்கின்றமையையிட்டு மனமுவகையடைகின்றேன். அக் காலகட்டத்தில் குமரபுரம் பரந்தன் திருவையாறு மற்றும் கிளிநொச்சி இளைஞர்களால் காடாகக் கிடந்த பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டமை மற்றொருவரலாறு. இந்தவரலாற்றில் ஓர் அங்கமே குறித்த பாடசாலையின் உருவாக்கமும் அதன் பின்னரான வளர்ச்சியுமாகும்.

மிகுந்த சிரமங்கள் மத்தியில் உருவாக்கப்பட்டகுறித்தபாடசாலைக்கானகட்டடம் ஒன்றைஅமைப்பதற்குபேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடமாணவர்கள் முன்வந்தமையும் அவர்களால் கட்டப்பட்டகட்டடத்தைநான் அப்போது கிளிநொச்சி தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது திறந்துவைத்ததையும் இன்று நினைவு கூருகின்றேன். அதிலும் குறிப்பாக எனது உடன் பிறந்த சகோதரன் ஞானசங்கரி திறப்பினை என்னிடம் கையளிக்க நான் அதனைத் திறந்து வைத்ததும் அவர் மறைவுக்குப் பின்னரும் எனது வாழ்நாளில் என்றும் நினைவுகளாகவே உள்ளன.

இவ்வாறு பல்வேறு அனுபவங்களைப் பகிரக் கூடிய இந்தப் பாடசாலையைப் பற்றி பல எழுத முடியுமானாலும் இரத்தினச் சுருக்கமாக இவற்றைக் கூறுகின்றேன். இன்றுபுலமைப் பரிசில் பரீட்சைகளிலும் சாதாரண தரப் பரீட்சைகளிலும் அதிக சித்திகளைப் பெற்றுவருவதையும் நான் அறிந்து பூரிப்படைந்துள்ளேன். இந்த வளர்ச்சிக்காகப் பாடுபட்ட அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவச் செல்வங்கள் மற்றும் கிராமத்தவர்களிற்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் பல வரலாற்றுச் சாதனைகளுடன் நூற்றாண்டு பல கண்டு சிறப்புடன் பயணிக்க எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்
வீ.ஆனந்தசங்கரி
செயலாளர் நாயகம்
தமிழர் விடுதலைக் கூட்டணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானுயர வளர வாழ்த்துகின்றேன்

நாட்டின் மிகவும் நெருக்கமான காலப்பகுதியான 1983ம் ஆண்டு ஏற்பட்ட இனக்களவரத்தினால் தென் பகுதியில் இருந்து ஏதிலிகளாக இடம் பெயர்ந்த மக்களின் எதிர்கால வாழ்விற்காக அறிவுப்பசியை தீர்க்கும் வகையில் HUDEC நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது 1992ல் அரசினால் உள்வாங்கப்பட்டது. வாழ்வாதாரத்திற்கு பெரும் அவலப்பட்ட மக்களின் ஒளிமுதலாக இப்பாடசாலை தினசரி வளர்ச்சி பெற்று தற்பொழுது வானுயர வளர்ந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதே. பௌதீக வளத்தை பெருக்கிக் கொண்ட அதேவேளை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிலும் பல முத்திரைகளை பதித்து மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு செவ்வனவே தனது பங்களிப்பினை வழங்கியுள்ளமை பாராட்டுக்குரியதே.

தொடர்ச்சியாக ஏற்பட்ட யுத்த நெருக்கடிகள், இடப்பெயர்வுகள் என பல்வேறு வகையான இடர்பாடுகளை சந்தித்த போதிலும் நாற்பது வருட சேவையில் தனது செயற்பாடுகளை முழுமையாக நிறைவேற்றியுள்ளது. அந்த வகையில் இவ்வகைச் செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்பு மிக்க சேவையினை வழங்கிய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களினை பாராட்டுவதுடன் தொடர்ந்தும் இப்பாடசாலை பல சாதனைகளை படைக்க வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

திரு. முருகேசு சந்திரகுமார்,<br>
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,<br>
செயலாளர் நாயகம் - சமத்துவக்கட்சி,<br>
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதழாசிரியனாய்......

பாலமாய் ஓர் பொறுப்பு, பக்குவமாய் கையாள வேண்டும். தாங்க வேண்டும் இணைக்க வேண்டும், தகுதியான பயணத்திற்கு வழிசமைக்க வேண்டும். கிளி/ சிவபாதகலையகத்தின் 40 வருட பயணத்தில் முக்கியமான ஓர் இடத்தினை பிடிக்கப்போகும் இந்நூலின் கனதி பெரிது. அப்பேர்ப்பட்ட இந் நூலின் இதழாசிரியர் என்ற பொறுப்பு எப்பேர்ப்பட்ட கனதியானது என்பதை நன்கு அறிவேன். அணைத்துக் கொண்ட தமிழ் அன்னையின் துணை கொண்டு கற்றுத் தந்த ஆசான்களின் ஆசிகளை பலமாய் நம்பி இப் பணியின்பாற் பயணிக்கத் துணிந்துவிட்டேன்.

இன்று கிளிநொச்சி தெற்கு வலயத்தின் பேர் சொல்லும் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் கிளி/ சிவபாத கலையகம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையானது தன் பயணத்தில் 40 வருடங்களை கடந்து நிமிர்ந்து நிற்பதென்பது மகிழ்ச்சியே. வேரோடிய நிலமிழந்து, ஏதிலிகளாய் வந்த மக்களின் அறிவுப்பசிக்கு தீனி போட்டு, நின்மதியானதும், நிலையானதுமான வாழ்விற்கு வழிகாட்டுவதற்காக ஆரம்பிக்கப்பட்டதே இப் பாடசாலை. வறுமை ஒரு பக்கமும், போர் இன்னொரு பக்கமும் வதைக்க வலி தாங்கி நிமிர்ந்த பெருமை இப் பாடசாலைக்கும் உண்டு. இப்பிரதேசம் சார் மக்களின் வழித்தடம் மாறாத பயணத்திற்கு இப் பள்ளியின் துணை ஒப்பற்றது.

இன்று மானிட வளத்தாலும், பௌதீக வளத்தாலும் பொலிவுற்று விளங்கும் இப் பாடசாலை இந்த நிலையினை அடைவதற்கு கடந்து வந்த பாதை துன்ப துயரங்கள் நிறைந்தது. பல நல்ல உள்ளங்களின் அர்ப்பணிப்பும், தற்துணிவும் போற்றுதற்குரியன தரம் 1 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள், முன்னூற்றைம்பத்தைந்தைக் கடந்த பிள்ளைகள், இருபத்தைந்தைக்கடந்த கல்விசார், கல்வி சாரா ஆளணியினர், பலமான பழைய மாணவர் மற்றும் பெற்றோர் அமைப்புக்கள், அக்கறையுள்ள நலன்விரும்பிகள் நாடிவந்து தோள் கொடுக்கும் தொண்டு நிறுவனங்கள் எனப் பல்வேறு வல்லமைகளின் ஆசிபெற்ற பாடசாலையாக இப்பாடசாலை இன்று திகழ்கின்றது.

இப்பாடசாலை அமையப் பெற்ற கிராமமானது காடுகள் அருகி வீடுகள் முளைக்கும், அனைவரும் நாடும் அறிவியல் நகராகி, கிளிநொச்சி மாவட்டம் கடந்தும் அறிவுப் பசிக்குத் தீனி போடும் நிலையினை அடைந்துள்ளமையானது இப்பாடசாலைக்கு வளமும் பலமும் எனலாம். இப்படிப்பட்ட தருணத்தில் இந்நூல் வெளிவருவதானது மகிழ்வானது என்பதோடு அழியாத ஒரு பதிவும் வழிகாட்டியும் எனலாம் காத்திரமான பல் வேறுபட்ட ஆக்கங்களைத் தாங்கி வரும் இந்நூல் அனைவருக்கும் பயனுள்ளாதாக அமையும் என பெரிதும் நம்புகின்றேன். இது இனி வரும் சந்ததியினருக்கு வழிகாட்டக் கூடிய முயற்சியும் எனலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய தேவை உணர் சேவைக்கு பக்கபலமாய் விளங்கக்கூடிய வகையில் வெளிவரும் மாணிக்க விழா மலரின் இதழாசிரியர் என்னும் தகுதியினை உவந்தளித்த அதிபர், ஆசிரியர்களை நன்றியோடு மனமிருத்திக் கொள்கின்றேன். அத்தோடு இந்நூலானது வெளிவருவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒத்துழைப்பு நல்கிய அனைவரையும் போற்றி மகிழ்கின்றேன் ஏற்ற பணியினை என் வல்லமைக்குள் நின்று ஆற்றியுள்ளேன் என்றும் நம்புகின்றேன். பயனுள்ள படைப்புக்களால் சமூகம் அழகுறும். அந்தவகையில் எங்களது படைப்பும் இடம்பெறும் என இதழாசிரியன் என்ற வகையில் நிறைவடைகின்றேன்.

"மரமெனில் தோப்பாய் - தனி
மரமெனில் ஆலமரமாய்

நன்றி

இதழாசிரியர்
திரு.துரைசிங்கம் கருணாகரன்
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்
(கலைமாணி, உளவளத்துணை டிப்ளோமா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாரெனின்"**

என்ற வள்ளுவர் பெருந்தகையின் வாக்கிற்கு அமைவாகவும் "அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தல் ஆலயம் பதினாறாயிரம் நாட்டல் பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னையாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" உலகிலே ஆற்றப்படும் தருமங்கள் அனைத்திலும் உயர்வானதாகக் கொள்ளப்படுவது ஏழைக்கு எழுத்தறிவித்தல் ஆகும்.

அவ்வகையிலே ஈழமணித் திருநாட்டில் வன்னிப் பெருநிலப் பரப்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் வரலாற்றுத் தடயங்களைப் பதித்துக் கொண்ட கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் A9 வீதிக்கு அருகாமையில் கிளிநொச்சி வலயத்தில் இருந்து 6Km தொலைவிலும் இரணைமடுச் சந்தியில் இருந்து 1.5Km தெற்கு நோக்கியும் கிளிநொச்சி மத்திய வங்கிக்கு மேற்காகவும் கிழக்குப் பக்கமாகப் புகையிரதக் கடவையும் வடக்கே அறிவியல் நகர் வீதிக்குமிடையில் இப் பாடசாலை அமையப் பெற்றுள்ளது.

இப் பாடசாலையின் வரலாறு தொடர்பாக நோக்குகின்றபோது இலங்கையின் தென் பகுதியில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாகப் பெருந்தொகையான மக்கள் அகதிகளாக்கப்பட்டு வடபகுதி நோக்கி அனுப்பிவைக்கப்பட்டனர். இவ்வாறு வருகை தந்த பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் பொன்னகர் மலையாளபுரம், பாரதிபுரம், விவேகானந்தநகர், தொண்டமான் நகர், அமைதிபுரம், ஊற்றுப்புலம், ஆனைவிழுந்தான், ஜெயபுரம் ஆகிய கிராமங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்துபுரம், செல்வபுரம், வசந்தநகர், திருமுறிகண்டி ஆகிய இடங்களிலும் அரசுக்குச் சொந்தமான காணிகள் துப்புரவு செய்யப்பட்டுக் குடியமர்த்தப்பட்டார்கள். இவ்வாறு குடியேறிய மக்களுக்கு அடிப்படையில் பல பிரச்சினைகள் இருந்தன. அவர்களது குழந்தைகள் கல்வி கற்பதற்குப் பாடசாலை இல்லாமையே பெருங்குறையாக இருந்தது.

புதிய குடியிருப்புக்களில் வசித்த மக்களுக்கு அனுசரணையாக கியூடெக் நிறுவனம் செயற்பட்டு வந்தது. இக் காலப்பகுதியில் பெருவெள்ளம் ஏற்பட்டு வெந்த புண்ணிலே வேல் பாய்வது போல மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். இந்த தகவல் அக்காலத்தில் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தது. பத்திரிகைகள் வாயிலாக இதனைத் தெரிந்து கொண்ட 1982 பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்கள் ஒரு குழுவாக இப் பிரதேசத்திற்கு வருகைதந்து மக்களுக்கு மனிதநேய உதவிகளை வழங்கியிருந்தனர். அதன் போது தமது பிள்ளைகளை அயற் பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளவில்லை எனவே தமது குழந்தைகள் கல்வி கற்பதற்கு ஒரு பாடசாலை அமைத்துத் தருமாறு மக்கள் கேட்டுக்கொண்டனர். அவ் வகையில் கியூடெக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பாளர் அருட்தந்தை பஜஸ் அவர்களும் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்களும் இணைந்து இப் பாடசாலையானது 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1983.04.15 அன்று இப் பாடசாலையானது ஒரு ஆரம்ப பாடசாலையாகத் தோற்றம் பெற்றது.

இப் பாடசாலையானது தொடர்ந்து இயங்குவதற்கு ஒரு நிரந்தரமான கட்டடம் தேவை என்பதைனையுணர்ந்து திரு.வே.சர்வேஸ்வரன் அவர்களும் அவரோடு இணைந்த குழுவினரதும் கடின உழைப்பில் பாடசாலைக்கான நிரந்தர கட்டடமானது அமையப்பெற்றது. மேலும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு மேடை நாடகத்தினை அரங்கேற்றி அதன் மூலம் கிடைத்த வருமானத்தினையும் அதற்கு இணையான தொகையினை அருட்தந்தை பஜஸ் அவர்களும் வழங்கி 60X20 அடி நீளமான ஒரு நிரந்தர கட்டடம் கட்டப்பட்டதாக அறியமுடிகிறது. அக் காலத்தில் சூழ்நிலை காரணமாகவும் அரசு பாடசாலையினை கையேற்காத காரணத்தினாலும் மாணவர்களுக்கான கல்வியினை தொண்டர் ஆசிரியர்களே கற்பித்துவந்தார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக செல்விசாந்தா, பெர்னாண்டோ, செல்வி றீற்றா, சின்னத்தம்பி, செல்வி நந்தினி சுப்பிரமணியம் காணப்பட்டனர். 1983 காலப் பகுதியில் இப் பாடசாலையினை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ ஆனந்தசங்கரி அவர்களால் திறந்து வைக்கப்பட்டதென அறியமுடிகிறது. இவ்வாறு தோற்றம் பெற்றபாடசாலையானது 1992.02.01 அன்று அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுதரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்டவகைII பாடசாலையாக வளர்ச்சிகண்டது. அரசு பாடசாலையினைப் பொறுப்பேற்றதனைத் தொடர்ந்து முதலாவது அதிபராக திரு.நடேசன் தம்பிராஜா அவர்கள் கடைமையினைப் பொறுப்பேற்று பாடசாலையினை நடாத்தி வந்தார். அதனைத் தொடர்ந்து உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் இயங்கிவந்த இப் பாடசாலையானது மீண்டும் தனது நிரந்தர இடத்தில் 01.02.2010 காலப் பகுதியில் இயங்கஆரம்பித்தது. புயலுக்கு பின்னரான அமைதியைப் போல யுத்தத்தின் பிடியில் இருந்த மக்கள் மீண்டும் தமது இயல்பு வாழ்க்கைக்குள் நுழைந்து தமது குழந்தைகளை கல்வி கற்பதற்காக இப் பாடசாலைக்கு அனுப்ப ஆரம்பித்தனர். 2007 தொடக்கம் 2016 வரையில் இப்பாடசாலையில் அதிபராக திருமதி இராஜேஸ்வரி விஜயநாதன் அவர்கள் செயற்பட்டுவந்தார். மேலும் பல்வேறுபட்ட மன அழுத்தங்களையும் குடும்ப சுமைகளையும் தாங்கி வந்த சிறுவர்களையும் வழிப்படுத்தி மேம்படுத்துவதில் இந்த அதிபரின் பங்கு அளப்பரியது. இப்பாடசாலையின் வரலாற்றில் முதன் முதலாகதரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வி ம.மதுசா என்ற மாணவி வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றுக்கொண்டமை இவ் அதிபரின் காலத்தில் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதனைத்தொடர்ந்து 2016 ஆம் ஆண்டுதொடக்கம் திருமதி பரமேஸ்வரி சோதிலிங்கம் அவர்கள் இப்பாடசாலையின் அதிபராக தனது கடமைகளைப் பொறுப்பேற்று கடமையாற்றி வருகின்றார். இவரது சேவைக்காலமானது இப் பாடசாலை வரலாற்றில் பொற்காலமாகவே கொள்ள முடியும். பல்துறை ஆற்றலும் துணிவும் கொண்ட இவ் அதிபரின் செயற்பாட்டினால் சிவபாதகலையகம் பாடசாலை கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னிலைப் பாடசாலையாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. அதனைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் தேவைப்பாடுகள் தொடர்பாக சக்திரீவியில் ஒரு செவ்வியினை வழங்கியதன் மூலம் உலகம் முழுவதுமே இப்பாடசாலையினை திரும்பிப்பார்த்தது. இதன் மூலமாக பாடசாலையுடன் விடுபட்டிருந்த தொடர்புகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இதன் மூலம் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தொடர்புகள் மீள ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. மாணவராக இருந்து செயற்பட்ட திரு.வே சர்வேஸ்வரன் அவர்கள் தற்போது லண்டனில் தொழிலதிபராகவும் பொறியியலாளராகவும் பணிபுரிந்துவருகின்றார். இவரும் இவருடன் இணைந்தவகையில் இவரது துணைவியான திருமதிஆனந்தி சர்வேஸ்வரன் அவர்களும் அவர்களது சினேகிதர்களும் எமது பாடசாலையை மீளவும் கட்டியெழுப்புவதற்கு முன்வந்தார்கள். அவ்வகையில் பாடசாலையின் பௌதீகவளத் தேவைப்பாடுகளின் பலவும் நிறைவேற்றப்பட்டது. மாவட்டமட்டத்தில் நாடகத்தில் முதலிடம் பெற்றமையினைப் பாராட்டிஎமக்கு 100×20 அடி மேடையுடன் கூடிய பிரதான மண்டபம் கட்டிதரப்பட்டது. அவ்வாறே மலசலகூடங்கள் நீர்த்தாங்கிகள் மாணவர்களுக்கான தளபாடங்கள் திறன் பலகைகள் (Smart board) மடிக்கணனிகள், விளையாட்டு உபகரணங்கள், பல்லூடகஎறியி (Multi media) என எமது இன்றைய வளர்ச்சிக்கு பெரிதும் அனுசரணையாக செயற்பட்டு வருகின்றார்கள்.

2018ம் ஆண்டு எமக்கு கிடைக்கப் பெற்ற சீர்நிலை வகுப்பறை மூன்றில் ஒரு வகுப்பறை ஆரம்பப் பிரிவுதரம் 1 மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதேமாணவர்களே 2021ஆம்ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றினார்கள். இவர்களில் மூன்று மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்குமேல் பெற்று 95 % சித்திவீதம் எமக்குக் கிடைக்கப்பெற்றது. அதே போன்று க.பொ.தசாதாரணதரம் 2021 சித்தி வீதமானது 65% ஆகஅமைந்திருந்தது. இந்தவளர்ச்சி எல்லாவற்றிற்கும் பாடசாலைச் சமூகத்தின் செயற்பாடுகளுக்கு அப்பால் திருவே.சர்வேஸ்வரன் அவர்களினதும் அவரது குழுவினரதும் ஆதரவு எமக்குப் பேருதவியாக அமைந்திருக்கின்றது.

முன்னையகாலங்களுடன் ஒப்பிடும் போது பாடசாலையானது தற்போது அபரிமிதமான வளர்ச்சியை அடைந்துவருகின்றது. இந்தவகையில் 2019 இல் எமது பாடசாலையில் KOICA செயற்றிட்டத்தினூடாக விஞ்ஞானஆய்வு கூடம் அமைக்கப்பட்டது. அத்துடன் அனைத்து வகுப்பறைகளும் திருத்தம் செய்யப்பட்டது. இச் செயற்றிட்டத்தினூடாக எமது பாடசாலை புதுப்பொலிவுடன் மிளிர்கின்றது.

1983 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சிங்கள வன் செயலால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் கலையகம் என்ற நாமத்தோடு தோற்றம் பெற்ற சிவபாதகலையகம் என்கின்ற இந்தப் பாடசாலையானது இவ் வருடத்தில் தனது 40 வருடங்களை நிறைவு செய்து மாணிக்கவிழாவினைக் கொண்டாடுகின்றது. இந்த 40 வருடகாலத்தில் பல்வேறுபட்ட விதத்தில் வளர்ச்சியடைந்த இப் பாடசாலையில் கற்றமாணவர்கள் இன்று பல இடங்களில் தொழில் புரிவதுடன் பலர் பல்கலைக் கழகங்களிலும் கல்வியியற் கல்லூரிகளிலும் கல்வியினைத் தொடர்ந்து வருகின்றார்கள். இந்தக் கிராமத்தின் வளர்ச்சியே இப் பாடசாலையின் வளர்ச்சியாகவும் கொள்ளமுடிகின்றது. உயர் கல்விப் பீடங்களையும் உயர் தொழிற் பேட்டைகளையும் தனது அயற் பிரதேசங்களில் கொண்டுள்ள இப் பாடசாலையானது எதிர்காலத்தில் உயர்தர வகுப்புக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி முதல்வரோடு ஆசிரியர்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பாடசாலையாக அமைய வேண்டு மென்பதே பெற்றோரின் ஆவலாக உள்ளது. மேலும் இவ் விழாவிற்கும் இம் மலரின் வெளியீட்டிற்கும் ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் வழங்கியதிரு வே. சர்வேஸ்வரன் அவர்களிற்கு பாடசாலை சமூகம் சார்பில் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இப் பாடசாலையில் அகவை 40 ற்கும் திரு வே. சர்வேஸ்வரன் அவர்களின் அகவை 60க்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளது.

"நன்றி"

அதிபர்
கிளி/சிவபாத கலையகம் அ.த.க. பாடசாலை
திருமதி.ப. சோதிலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையில் உள்ளடங்கல் கல்வியாக விசேட கல்வியை நடைமுறைப்படுத்தலில் எதிர்கொள்ளும் சவால்களும், அவற்றைச் சாத்தியமாக்கலும்.

1784இல் பரிஸில் பார்வையற்றோருக்கான பாடசாலை திறக்கப்பட்டதிலிருந்து உலகில் விசேட கல்வி ஆரம்பமாகியது எனலாம். இதனூடாக விசேட தேவைக்குட்பட்டோருக்கு புனர்வாழ்வளிக்க முடியுமென உலகம் நம்பியது. இதன் வெளிப்பாடாக 1912இல் இலங்கையில் இரத்மலானையில் செவிப்புலனற்றோர், விழிப்புலனற்றோருக்கான விசேட பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதுடன் இலங்கையில் விசேட கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

காலப்போக்கில் அனர்த்தங்கள் காரணமாக விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை உலகளவில் அதிகரித்தது. இவர்களுக்கான பாடசாலைகளை எல்லா இடங்களிலும் அமைப்பது நடைமுறைச் சாத்தியமற்றதாகக் காணப்பட்டது. இதனால் எண்ணற்ற விசேட தேவைக்குட்பட்ட சிறார்கள் எவ்வித கல்வியும் அளிக்கப்படாமல் கைவிடப்பட்டனர்.

மனித உரிமைகள் பற்றிய கருத்துகள் முன்னிலை பெறத் தொடங்கியபோது விசேட பாடசாலைகளும் ஒரு வகையில் உரிமைகளை மீறுகின்ற அமைப்பாகக் கருதப்படலாயின. தான் பிறந்த சமூகத்தில் கல்வி மறுக்கப்பட்டு தூரத்திலுள்ள விசேட பாடசாலையில் கல்வி பயில அனுப்புவது அப் பிள்ளைகளுக்கு அச் சமூகத்திலுள்ள உரிமைகள் மறுக்கப்படுவதாகவே பார்க்கப்பட்டது. இதனால் உலகளவில் ஒருங்கிணைக்கப்பட்ட கல்வி முறைமை பற்றிப் பேச ஆரம்பிக்கப்பட்டது.

இதன் வெளிப்பாடாகவே இலங்கையில் பார்வையற்ற மாணவருக்கான ஒருமுகப்படுத்தப்பட்ட கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பார்வையற்ற மாணவர்கள், சாதாரண பாடசாலைகளில், சாதாரண வகுப்பறைகளில், மாணவர்களுடன் பொதுக் கலைத்திட்டத்தைப் பயில வாய்ப்பளிக்கப்பட்டது. இதே வாய்ப்பு ஏனைய விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களுக்கும் சமமாக வழங்குவதற்கான முயற்சிகள் பரீட்சிக்கப்பட்டன. அவ்வகையில் இலங்கைப் பாடசாலைகளில் விசேட கல்வி அலகுகள் உருவாக்கப்பட்டன. இதனூடாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த வெற்றி மற்றும் உலகளவிலான சிந்தனை மாற்றம் அடுத்த கட்டமாக உள்ளடங்கல் கல்வி பற்றி இலங்கைக் கல்விப் புலத்தை சிந்திக்கத் தூண்டியது.

1990ஆம் ஆண்டில் தாய்லாந்தின் ஜோம்தியன் நகரில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில் "சகலருக்கும் கல்வி" என்ற கருப்பொருள் உருவாக்கப்பட்டது. மனித உரிமையின் அடிப்படையாக கல்வி இருப்பதனாலும் சமூக பொருளாதார, அரசியல் விரிவாக்கத்திற்கு கல்வி அத்திவாரமாக இருப்பதனாலும் "சகலருக்கும் கல்வி" என்பது முக்கியத்துவம் பெறுவதாக இம் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. மேலும் எவ்வித வேறுபாடுகளுமின்றி நாட்டிலுள்ள ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கல்வி வழங்கப்படுவதனை "சகலருக்கும் கல்வி" நோக்கமாகக் கொண்டுள்ளது.

சகலருக்கும் கல்வி என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற கல்வி முறையாக விசேட கல்வி காணப்படுகின்றது. அந்த வகையில் உடல், உள, சமூக மனவெழுச்சிப், பாதிப்புக்குள்ளான மாணவர்கள், சாதாரண மாணவர்களை விட பல சிக்கலான நடத்தைகளைக் காட்டுகின்றனர். அத்துடன் அவர்கள் தேர்ச்சி மட்டத்தை அடைய முடியாது தத்தளிக்கின்றனர். இவ்வாறான மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வியே விசேட கல்வி எனப்படுகின்றது.

இவ்வாறான விசேட தேவையுள்ள மாணவர்கள் தோன்றுவதற்கான காரணங்களாக பிறப்பிற்கு முன்னரான காரணிகள், பிறப்பின் போதான காரணிகள், பிறப்பிற்கு பின்னரான காரணிகள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

கற்றலில் இடர்ப்படும் குழந்தைகளும், கற்றலின்பால் கூடிய ஈடுபாடு காட்டும் குழந்தைகளும் விசேட தேவை சார் குழந்தைகள் எனக் கருதப்படுகின்றனர். விசேட தேவையுள்ள குழந்தைகள் பின்வருவனவற்றுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கெண்டிருப்பர்.

- புலன்சார் குறைபாடு
- உடல்சார் மற்றும் உடல்நலக் குறைபாடு
- அறிவுசார் குறைபாடு
- நடத்தைசார் குறைபாடு
- பேச்சு மற்றும் மொழிசார் குறைபாடு
- கற்றலில் குறைபாடு
- மீத்திறன் அல்லது திறமையான மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகிச்சை மற்றும் புனர்வாழ்வின் மூலம் சாதாரண பாடசாலை முறைமைக்குள் விசேட தேவையுள்ள பிள்ளைகளை இணைத்தல் அதன்போது பாடசாலை அவ் விசேட தேவையுள்ள மாணவருக்கு பொருத்தமானதாகவோ அல்லது பொருத்தமற்றதாகவோ இருக்கலாம் இந்நிலையில் பாடசாலை மாணவருக்காக எதுவித மாற்றத்தையும் மேற்கொள்ளாது, மாறாக மாணவர்களே பாடசாலைக்கேற்ப மாறிக்கொள்ளுதல் வேண்டும். இது ஒன்றிணைந்த கல்வி எனப்படுகின்றது.

ஒன்றிணைந்த கல்வியின் அடுத்த கட்டமே உள்ளடங்கல் கல்வியாகக் காணப்படுகின்றது. பிள்ளைகளினதும் கற்றலை உறுதிப்படுத்துகின்ற பொதுவான பணியை ஆற்றுகின்ற பல்வகைப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்ற ஓர் இடமே உள்ளடங்கல் கல்விப் பாடசாலையாகும்.

அதாவது ஒரு விசேட தேவையுள்ள பிள்ளையொன்று தான் வாழும் சூழலில் தனக்கு அண்மையில் உள்ள சாதாரண பாடசாலையிலே, சாதாரண வகுப்பறையில் எல்லா மாணவர்களுடனும் வேறுபாடின்றி கற்பதற்கான சூழமைவைக் கொண்டு காணப்படும் கல்வியே உள்ளடங்கல் கல்வியாகும்.

உள்ளடங்கல் கல்வி வாயிலாக இயலாமையுடைய மாணவர்களும், சாதாரண மாணவர்களும் ஒன்றிணைந்து கொள்வதற்கான வழி ஏற்படுகின்றது. இவ் உள்ளடங்கல் ஒன்றிணைப்பானது நான்கு முறைகளில் நடைபெறுகின்றது.

உடல் தொடர்பான ஒன்றிணைப்பு - விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளுக்கும், சாதாரண பிள்ளைகளுக்குமிடையே உடல் ரீதியான இடைவெளியை இத்தகைய ஒன்றிணைப்பு குறைப்பதற்கு முயலகின்றது.

செயற்பாட்டு ரீதியான ஒன்றிணைப்பு - வகுப்பறைச் செயற்பாடுகளில் இரு சாராரும் இணைந்து பணியாற்றுவதற்கு உள்ளடங்கல் கல்வி மூலம் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. குழுச் செயற்பாடு. விளையாட்டு. வகுப்பறைக் கடமைகளில் இயலாமையுடைய பிள்ளைகள் பங்காற்றும்போது அவர்களுடைய ஆளுமை விருத்தி செய்யப்படுகின்றது.

சமூக ஒன்றிணைப்பு இதன் மூலம் சமூக ரீதியான இடைவெளி குறைக்கப்படுகின்றது. தொடர்பாடற் திறன். ஒருவருக்கொருவர் உதவுதல் போன்ற விழுமியப் பண்புகள் விருத்தி செய்யப்படுகின்றன. இதன் மூலம் சமூகமயமாக்கலுக்கு அத்திவாரம் இடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய ஒன்றிணைப்பு சமூகத்தில் தானும் ஒரு பிரஜை என்ற நம்பிக்கை இதன் மூலம் உருவாகின்றது. சமுதாயப் பொறுப்புக்களை முன்னின்று ஏற்றுக் கொள்வதற்கும், இணைந்து பணியாற்றுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

உள்ளடங்கல் கல்வியூடாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கோட்பாடுகளாக ஏழு கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டுக் காணப்படுகின்றன. அக் கோட்பாடுகளை நோக்குவோம்.

- ❖ அனைத்து மாணவர்களுக்கும் கற்பித்தல்,
- ❖ பல்தர அடையாளங்களை வெளிக்கொணர்தல்.
- ❖ முன்கூட்டியே தீர்மானமெடுத்தலைத் தவிர்த்தல்
- ❖ சமூக நீதியை ஊக்குவித்தல்,
- ❖ பொருத்தமான பொருட்களைத் தெரிவு செய்தல்.
- ❖ பண்பாடு மற்றும் சமயம் பற்றிக் கற்றல்.
- ❖ சரியான பாடங்களைக் கற்பித்தலும், ஒருங்கிணைத்தலும்,

விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களை சாதாரண பாடசாலையில் இணைத்துக் கொள்ளும் அதேவேளையில், அவர்களுள் அவசியமானவர்களை சாதாரண வகுப்பில் இணைத்துக் கொள்ளும் தகுதிக்காக தயார்ப்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலையிலும் விசேட கல்வி அலகு இருத்தல் வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டது. இவ் விசேட கல்வி அலகில் இணைக்கப்படும் மாணவர்கள் பரிகாரக் கற்பித்தலூடாக குறித்த தேர்ச்சி மட்டத்தை அடைந்தவுடன் சாதாரண வகுப்பறைக்கு உள்ளீர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதே உள்ளடங்கல் கல்வியின் குறிக்கோளாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான செயற்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு காணப்படும் உள்ளடங்கல் கல்வியை இலங்கைப் பாடசாலைகளில் அமுல்ப்படுத்தும்போது நடைமுறையில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. அச் சவால்கள் எவையென நோக்குவோம்.

விசேட கல்வி அலகுகளில் தமது பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படுவதை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு பெற்றோர் மத்தியில் கட்டியெழுப்பப்படாமை ஒரு பாரிய பிரச்சினையாகவுள்ளது. சாதாரண பாடசாலைக்கு அனுப்பப்படும் தமது பிள்ளை விசேட கல்விப் பிரிவின் மூலம் சாதாரண பிள்ளைகளிடமிருந்து வேறுபடுத்தி வைக்கப்படுவதை பெற்றோர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இது பாடசாலைகளுக்கும், பெற்றோர்களுக்குமிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து பிள்ளைகளை விசேட கல்வி அலகில்லாத பாடசாலைக்கு மாற்றுவது அல்லது கல்வியிலிருந்து இடைநிறுத்துவது என்ற விளைவில் முடிகிறது.

ஒவ்வொரு பாடசாலையிலும் விசேட கல்வி அலகுகளை ஏற்படுத்துவதிலுள்ள மனிதவளப் பற்றாக்குறை மற்றுமொரு பிரச்சினையாகும். அரசாங்கத்தால் வழங்கப்படும். விசேட கல்வி: ஆசிரியர்களின் நியமனங்கள் எல்லாப் பாடசாலைகளிலும் இவ் அலகுகளை செயற்படுத்த எப்போதும் போதுமானதாக இருந்ததில்லை. நியமிக்கப்படும் விசேட கல்வி ஆசிரியர்கள் அத் துறையில் ஈடுபடத் தயக்கம் காட்டுவதோடு வேறு கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

பல பாடசாலைகளில் இவ் ஆசிரியர்களை ஏனைய கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்கு அதிபர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் பல பாடசாலைகளுக்கு விசேட கல்வி ஆசிரியர் நியமனங்கள் கிட்டியுள்ளபோதும் அங்கு விசேட கல்வி அலகுகள் எதுவுமில்லை.
அத்துடன் நியமிக்கப்படும் விசேட கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் அனைத்துப் பாடசாலைகளிலும் விசேட கல்வியை செயற்படுத்தவும் முடியாதுள்ளது.

தேசிய மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்களால் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் பாரிய பல கூறுகள் முன்னுரிமை பெற்று விடுவதால் உள்ளடங்கல் கல்விக்கான நிதி ஒதுக்கீடுகள் எப்போதும் தாழ்ந்த மட்டத்திலேயேயுள்ளன. அது தளபாடம் மற்றும் கற்றல் கற்பித்தல் உபகரணங்களை வழங்குவதிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடங்கல் கல்வியானது வெற்றி பெற கல்வித்துறையிலே பணியாற்றுகின்ற அனைத்து ஆசிரியர்கள், உயரதிகாரிகள் அனைவரும் அவர்களை இனங்காணல், வழிப்படுத்தும் ஆற்றல் பெற்றிருத்தல் வேண்டும். அத்தோடு அனைத்து பாடத்துறை ஆசிரியர்களுக்கும் விசேட கல்வி பற்றிய அறிவும், அவர்களுக்கு கற்பிக்கும் ஆற்றலும் கொண்டிருத்தலும் அவசியமாகும். தன்மையை சாத்தியமாக்க அனைவரின் ஒத்துழைப்பும் தேவையாகவுள்ளது.

இலங்கையிலுள்ள விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான விசேட கல்வி அலகுகள் இப் பிள்ளைகள் அனைவருக்குமான பொதுவான அலகுகளாகவுள்ளனவேயன்றி அவர்களின் விசேட தேவைகளைக் கருத்திற் கொள்வனவாகக் காணப்படவில்லை.

விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்களை உள்ளடக்கியதான உள்ளடங்கல் கல்விச் செயற்பாட்டை ஏனைய மாணவர்களின் பெற்றோர்களின் மனநிலை ஏற்றுக்கொள்ளக் கூடிய ஏனைய மாணவர்கள், தயார் நிலையிலில்லை.

விசேட தேவையுள்ள பிள்ளைகளை உள்ளடங்கல் கல்விச் செயற்பாட்டிற்குள் உள்வாங்கி கற்பிப்பதற்கான மனப்பாங்கினை பெரும்பாலான ஆசிரியர்கள் கொண்டிருக்கவில்லை. அவர்களிடத்தில் அதற்கான போதுமான பயிற்சிகளுமில்லை.

இப் பிள்ளைகளை உள்ளடங்கல் கல்விச் செயற்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமெதுவும் இலங்கைக் கலைத்திட்டத்திலும் இல்லை. நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை.

விசேட தேவையுள்ள பிள்ளைகள் பாடசாலைக்கு சமூகமளிப்பது ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றது. அத்துடன் இப் பிள்ளைகளை ஏற்றுக் கொள்ளுதல் தொடர்பாக சமூக மனப்பாங்கில் ஏற்பட்டுள்ள மாற்றம் முன்னேற்றம் காணவேண்டிய நிலையிலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு குழந்தைகளும் நாட்டினது வளமாகும். அனைவருக்கும் தேவைகளும், உரிமைகளும் இன்றியமையாதனவாகும். முக்கியமாக சகலருக்கும் கல்வி பொருத்தமான வேளையில், பொருத்தமான வழிகளில் கொடுக்கப்படல் வேண்டும். கல்வி கற்பதனூடாகவே ஒவ்வொருவரும் நிறைவுடன் வாழ முடியும். இனம், மதம், நிறம், ஆற்றல், பால், இயலுமை என்ற வேறுபாடின்றி அனைவரும் கல்வியில் உள்வாங்கப்பட வேண்டும்.

அனைவருக்கும் சமமான கல்வி வழங்கப்பட வேண்டும். விசேட தேவையுள்ளவர், குறைபாடுடையவர், கைவிடப்பட்டவர் என அனைவரையும் ஒன்றிணைக்கும் செயன்முறையே உள்ளடங்கல் கல்வியாகும். இதற்கான ஏற்பாடுகள் கோட்பாடுகள் அனைத்தும் பொருத்தமான வகையில் வகுக்கப்பட்டுள்ளன. இவை செவ்வனே நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அரசு இதற்கான வழிமுறைகளை செய்து கொடுக்க வேண்டும். இதனை நடைமுறைப்படுத்துதல் சமூகத்தின் கைகளிலும் தங்கியுள்ளது. சமூகம் இவர்களுக்கான கௌரவத்தையும், வாய்ப்பையும் வழங்க வேண்டும். பாடசாலை இவர்களை ஏற்றுக்கொண்டு ஊக்குவிக்க வேண்டும்.

உள்ளடங்கல் கல்வி வகுப்பறைக்குச் செல்கின்ற ஆசிரியர் பணி மிகவும் சவாலானது. வகுப்பறையில் உள்ளடக்கப்பட்ட மாணவர்களின் இயல்புகள், பின்னணி, தேவை, இயலுமை என்பவற்றை அறிந்து அதற்குப் பொருத்தமாக கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவது முக்கியமானதாகும். இதற்காக ஆசிரியர் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

விசேட தேவையுள்ள மாணவர்களின் இயல்புகள், அவர்களது தேவைகள், அவர்களுக்கான கற்றல் முறைகள் என்பவற்றை ஆசிரியர் அறிந்துகொள்ள வேண்டியது கட்டாயமானதாகும். வகுப்பறைச் செயற்பாடு வெற்றிகரமாக அமையும்போது மாத்திரமே உள்ளடங்கல் கல்வி உயிரோட்டம் பெறும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைகள்


பௌநந்தி. அ (தை - பங்குனி 2016) உட்படுத்தற் கல்வி சாத்தியப்படுத்தல் சவால்நிலைகள், கடல், பரணீ அச்சகம், நெல்லியடி.

தனபாலன்.பா (2010), உட்படுத்தல் கல்வி, லங்கா பதிப்பகம், டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, கொழும்பு - 12.

சிவகுமார்.த (2010) விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும், கக்ஸ்ரொன் பிறிண்டேர்ஸ். கல்வியங்காடு.

கேதீஸ்வரன்.க (2015) விசேட தேவைகள் சார் கல்விச் செயற்பாட்டில் ஒன்றிணைந்த கல்வியும் உட்படுத்தற் கல்வியும், பார்வை, கல்விப் பீடம், இலங்கை திறந்த பல்கலைக் கழகம், நாவல.

திரு. சோமசேகரம் சிவாஞ்சநேயன்.
(SLTS : I , BA, MA (Geo), TRD Primary, PGDE, M.Ed)
ஆசிரியர், கிளி / சிவபாதகலையகம் அ.த.க. பாடசாலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியே வாழ்வின் ஆதாரம்

மனித இனம் உணர்வுகளையும், கருத்துக்களையும் பகிர்ந்து கொள்வதற்கு ஊடகமாக அமைவதே மொழியாகும். அந்த வகையில் ஆதி மனிதன் ஒலிகளை எழுப்புவதன் மூலமும், அதற்குப் பிற்பட்டவர்கள் சைகை மூலமும் தமது கருத்துக்களைப் பரிமாறினர். கால ஓட்டத்தில் சைகை மொழிக்கு ஒலி வடிவம் கொடுக்கப்பட்டு படிமுறை வளர்ச்சியின் விளைவாக இன்றைய நவீன யுகத்தில் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகள் உலகமெங்கும் பரந்து பேசப்பட்டு வருகின்றன. அவற்றில் காலத்தால் அழியாத தொன்மை மொழிகளான பபிலோனிய மொழி, கிரேக்க மொழி, தமிழ் மொழி என்பன சிறந்து விளங்குகின்றன.

உலகமெங்கும் எத்தனை மொழிகள் பேசப்பட்டாலும் தனித்தன்மை கொண்ட பல சிறப்புக்களை தன்னகத்தே தாங்கிநின்று புகழ் பரப்பும் ஒரே மொழி தமிழ் மொழியே. இத் தமிழ் மொழியானது குமரிக்கண்டத்திலே தோற்றம் பெற்றாலும் காலக்கிரமத்தில் குமரிக்கண்டமானது நீரில் முழ்கி அழிந்து போனாலும் அதன் எஞ்சிய நிலப்பரப்புக்களில் வாழ்ந்த தமிழர்கள் புலம் பெயர்ந்து அயல் நாடுகளுக்கும் சென்று அங்கும் தமிழின் புகழைப் பரப்பினர்.

தமிழ் மொழியின் செழுமையினை அன்று தொட்டு இன்றுவரை இலக்கியங்களை களமாகக் கொண்டு அறிஞர்களும், புலவர்களும் எடுத்தியம்புகின்றனர். மொழிகளுள் மூத்த மொழியான தமிழ் மொழியை போற்றியும் பாடியும் வளர்த்தும் வந்துள்ளனர். புலவர்களாலும், அரசர்களாலும் சங்கம் அமைத்து வளர்க்கப்பட்ட ஒரே மொழி நம் தமிழ் மொழியே ஆகும். முதல், இடை, கடைச் சங்கம் என முச்சங்கங்கள் அமைத்து வளர்த்த நம் தமிழ் மொழியானது இயல் இசை நாடகமென முத்தமிழாக சேர,சோழ, பாண்டியன் என்ற மூவேந்தர்களாலும் உயிரினும் மேலாக போற்றிப் பாதுகாக்கப்பட்ட மொழியே தமிழ் மொழி. நம் தமிழ் மொழியை பழமையான மொழி, பண்பான மொழி நம் பைந்தமிழ் மொழி. தேனிலும் இனியது நம் தீந்தமிழ் மொழி. இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட நம் தமிழ் மொழியைப் போற்றிய புலவர்களில் பாரதியார், பாவேந்தர், திருவள்ளுவர், முதலானோர் குறிப்பிடத் தக்கவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் எழுச்சிக் கவிஞனாகப் போற்றப்படும் பாரதியார் தமிழ் மொழியின் சிறப்பினைக் கூறுமிடத்து "யாமறிந்த மொழிகளாலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கு காணோம்" என்றும் சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா" என்றும் கூறுகின்றார். அதாவது மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிமையான மொழி இவ்வுலகில் இல்லை. அத்தகைய பெருமை வாய்ந்த தமிழைப் போற்றித் தொழுது கற்கும்படி வழிப்படுத்துகின்றார். இவரின் வழித் தோன்றலான பாவேந்தர் பாரதிதாசன் "தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனக் கூறுவது தமிழானது தமிழ் பேசுபவர்களது உயிர் மூச்சு போன்றது என்பதை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது.

கவிச்சக்கர வர்த்தி கம்பர் அவர்கள் தனது கம்பராமாயணத்திலே தமிழ் மொழியானது "மதுரமொழி" எனச் சிறப்பிக்கின்றார். தமிழ் மொழியானது 12 உயிர் எழுத்துக்களையும் 18 மெய் எழுத்துக்களையும் 216 உயிர் மெய்யெழுத்துக்களையும் 1 ஆயுத எழுத்தையும் கொண்டு மொத்தம் 247 எழுத்துக்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வடிவமைக்கப்பட்ட தமிழ்மொழியே படிப்பதற்கும், பேசுவதற்கும் எளிமையானதும் இனிமையானதுமாக இன்றுவரை நிலைத்து நிற்கின்றது.

இவ்வாறு தமிழ்மொழியின் பெருமையானது கூறக்கூற வற்றாத நதி போல தோன்றிக் கொண்டே இருக்கும். கண்களால் காணப்படாத மனத்தால் நினைக்கப்படுகின்ற பொருள்களுக்கும் இலக்கணம் கூறுகின்ற அகப் பொருள் இலக்கணத்தை கொண்டதும் எமது தமிழ் மொழியே இதனாலேயே தமிழை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியில் பிறந்த மொழி - தென்
பொதிகையில் தவழ்ந்த மொழி
கம்பன் கவி வடித்த மொழி - எம்
பாரதி கர்ச்சித்த மொழி - என்றும்
இனிமை கூட்டும் இன்ப மொழி
இளமை காக்கும் அருமை மொழி
துன்பம் போக்கும் துடிப்பு மொழி
நன்மை விளைக்கும் நற் செம் மொழி

என்றெல்லாம் வர்ணிக்கின்றனர்.

இவ்வாறு தமிழ்இனத்தின் உயிராகவும், உயிர் மூச்சாகவும் விளங்கும் தமிழ் ஆனது இன்று தமிழ் பேசுவது அவமானம் எனக் கருதுமளவிற்கு நலிவடைந்து செல்வது வேதனைக்குரியது. பிற நாட்டு மோகமும், கலாசார மாற்றங்களும், இலத்திரனியல் ஊடகங்களின் தேவைப்பாடுகளும் தமிழை இரண்டாம்தர மொழியாகக் கருதுமளவிற்கு பின்னகர்த்தப்பட்டுள்ளது. தமிழர்களின் பாரம்பரிய கலாசாரமானது தமிழ் மொழியை ஆதாரமாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆகவே தமிழ் மொழியின் நலிவானது தமிழ் கலாசாரத்தின் இருப்பையே கேள்விக்குறியாக்கிவிடும். எனவே தமிழ் மொழியைப் பேணிக் காக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு நமக்கே உரியது.

இன்றைய நவீன உலகில் ஆங்கில மொழியின் தேவைப்பாடு அதிகமாகக் காணப்படுகின்றது. ஆங்கில மொழியிலான வேலை வாய்ப்புக்கள். அந்நிய வாழ்க்கை முறையின் மீதான அந்த ஈர்ப்பு போன்றன ஆங்கில மொழியின் நாடலிற்கு உந்து சக்தியாக அமைகின்றன. இதனால் தமிழ் மொழியானது நலிவடையும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகிறது. எனவே இந் நிலை மாற வேண்டுமாயின் தாய் மொழிக் கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டும். அத்தோடு தமிழ் மொழியை சிறுவயது முதலே குழந்தைகளுக்கும் பேசக் கற்றுத் தர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி முதல்வரோடு ஆசிரியர் மற்றும் மாணவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற மொழிகளில் உள்ள அறிவியல் சார் நூல்களை தமிழ் மொழி பெயர்த்து வழங்க வேண்டும். இயன்றளவும் பிற மொழி சொற்களைக் கலக்காது தூய தமிழில் பேசுவதோடு தமிழ் சார் அரிய நூல்களை பொக்கிசமாகப் பேணி இளந்தலைமுறையினர்க்கு ஊடு கடத்துவதுடன் நின்று விடாது அவற்றைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் ஏஙற்படுத்துவது காலத்தின் தேவை ஆகின்றது.

இலத்திரணியல் ஊடகங்களின் அதீத வளர்ச்சியினால் வாசிப்புத் திறன் அருகிக் கொண்டு செல்லும் இவ் வேளையிலே வாசிப்பினை வளர்த்தெடுக்கும் தார்மீகப் பொறுப்பை கல்விக்கூடங்கள் தமதாக்கிக் கொள்வது போற்றுதற்குரியது.

" எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என்று பாவேந்தன் பாரதிதாசன் குறிப்பிட்டதை

" தமிழ் இனிமை தனிமை தராது
தமிழின் பெருமை தற் பெருமை அடையாது
தமிழின் புலமை புகழ்ச்சியில் மயங்காது
தமிழின் புதுமை பழைமை அடையாது
தமிழின் தனித்துவம் என்றும் மறையாது"

எனவே காலத்தை வென்று இன்று நிமிர்ந்து நிற்கும் தமிழ் மொழியை நமது வளமாகக் கருதி அதன் தனித்துவத்தை, மகிமையை, அதன் பெருமையை என்னென்றும் பேணிக் காப்போமாக.

திருமதி தவராணி சிவநேசர்
கலைப்பட்டதாரி
பட்டப்பின் கல்வி டிப்ளோமா
S.L.T.S I





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வி

ஒவ்வொரு பிள்ளையினதும் முதன்மையான அடிப்படையான கல்வியாக ஆரம்பக்கல்வி விளங்குகின்றது. அனைத்துப் பிள்ளைகளுக்கும்! ஆரம்பக்கல்வி பெற்றுக் கொடுப்பது பெற்றோர்களின், பாதுகாவலர்களின் தலையாய கடமையாகும். ஒரு குழந்தை நன்றாகச் செவிமடுக்கவும்,பேசவும், வாசிக்கவும், எழுதவும் ஆரம்பக்கல்விப் பருவத்திலேயே கற்றுக் கொள்கின்றது. ஆரம்பக் கல்விக்கு அடித்தளமாய் அனுபவக் கல்வியை வழங்கும் முன்பள்ளிக் கல்வி தோள்கொடுத்து நிற்கின்றது. பிள்ளைகள் மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரை முன்பள்ளிக் கல்வியைப் பெற்றுக் கொள்கின்றனர். அதன் பிற்பாடு ஆரம்பக் கல்வியில் கால்பதிக்கின்றனர்.

இலங்கையில் ஆரம்பக்கல்வி நிலை தரம் -01 தொடக்கம் தரம்-05 வரை அமையப் பெற்றுள்ளது. ஐந்தாண்டுகளைக் கொண்டமைந்த ஆரம்பக்கல்வியானது முதன்மை நிலை ஒன்று (தரம் -01,தரம் -02 )முதன்மை நிலை இரண்டு (தரம் -03,தரம்-04) முதன்மை நிலை மூன்று (தரம் -05)என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வியின் வளர்ச்சியில் ஆரம்பக்கல்வியின் பங்கு அளப்பரியது. கல்வி கற்ற சமூகத்தை வெளிக்கொண்டு வருவதற்கு அடித்தளமாய் அமைவது ஆரம்பக்கல்வி எனக்கூறினால் மிகையாகாது. ஒரு கட்டடத்தின் உயர்ச்சிக்கு உறுதியான அத்திவாரம் எவ்வளவு முக்கியமோ அவ்வாறே பிள்ளை கற்றலில் உயர்வு பெற ஆரம்பக்கல்வி அவசியம். பிள்ளைகளுக்கு, விருப்புடனும், ஆர்வத்துடனும் கற்கும் வகையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொடுப்போமானால் அப்பிள்ளைகள் சுயமாகவே இடைநிலைக்கல்வி, உயர்கல்வியை ஆர்வத்துடனும் விருப்புடனும் கற்று சிறந்து விளங்குவார்கள்.

ஆரம்ப கல்வி நிலையிலேயே ஒரு பிள்ளை ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும், சமய விழுமியங்களையும் அதிகளவு கற்றுக்கொள்கின்றது. அது மட்டமல்லாது எழுத்துக்களை இனங்காணவும்,வாசிக்கவும், எழுதவும் ஆரம்பக்கல்வி பருவமே ஏதுவாக அமைகின்றது. எனவே பெற்றோர்கள், பாதுகாவலர்கள் ஆரம்பக்கல்வி பருவத்தில் பிள்ளைகள் மீது அதிகளவு அக்கறை செலுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமாகின்றது. பிள்ளைகளை பாடசாலை நாட்களில் பாடசாலை அனுப்புவது பெற்றோர்களின் இன்றியமையாத கடமையாகும்.

இன்றைய பெற்றோர்கள் பெரும்பான்மையானவர்கள் ஆரம்பக் கல்வியில் நடைபெறும் தரம் -05 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைய வைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாகவே விளங்குகின்றனர். முதன்மை நிலை ஒன்று, முதன்மைநிலை இரண்டு ஆகியவற்றில் பிள்ளைகளின் கற்றலை அவதானிக்கத் தவறுகின்றனர். பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்புவதிலும் கவனம் செலுத்துவதுமில்லை. இதனால் ஆரம்பக் கல்வி பல சவால்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

பெற்றோர்கள் ,பிள்ளைகளை பாடசாலை நாட்களில் பாடசாலைக்கு அனுப்பத் தவறும் பட்சத்தில் காலப்போக்கில் பிள்ளைகள் பாடசாலை செல்வதற்கு விருப்பமற்றவர்களாக மாறிவிடுகின்றனர். ஒழுங்கற்ற வரவினால் பிள்ளைகள் எழுத்துக்களை இனங்காண்பதிலும், வாசிப்பதிலும், எழுதுவதிலும் இடர்ப்படுகின்றனர். எனவே மேற்கொண்டு கல்வியைத் தொடர்வதற்கு ஆர்வமும் விருப்பமும் அற்றுப்போகின்றது. “ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?” வகுப்பு அதிகரிக்க அதிகரிக்க கற்றல் செயற்பாடுகளும் அதிகரிக்க இப் பிள்ளைகளுக்கு கற்றல் சுமையாகின்றது. இதனால் பிள்ளைகள் தாமாகவே பாடசாலை செல்வதைத் தவிர்க்கின்றனர். கற்றலை வெறுக்கின்றனர்.

எனவே பெற்றோர்கள், பிள்ளை விருப்பத்துடனும், ஆர்வத்துடனும் கற்றலைத் தொடர்வதற்குத் தட்டிக் கொடுங்கள். ஆரம்பக்கல்விப் பருவத்திலேயே பிள்ளைகளின் கற்றலில் அதிகளவு கவனம் செலுத்துவதுடன் பிள்ளைகளை பாடசாலை நாட்களில் தவறாது பாடசாலைக்கு அனுப்புங்கள். ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுடன் கலந்துரையாடி பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டை அறிந்துக்கொள்ளுங்கள். பிள்ளைகளின் சுயகற்றலை ஊக்குவியுங்கள் பெற்றோர்களின் ஒத்துழைப்பினாலேயே ஆரம்பக் கல்வி உச்சநிலை அடையும். என்பது மறுக்க முடியாத உண்மை ஆரம்பக்கல்வி உச்சத்தை எட்டும் பட்சத்தில் உயர்கல்வியும் உச்ச நிலையை அடையும் எனக் கூறுவதே சாலச்சிறந்தது.

திருமதி டயாழினி மில்டர்
கற்பித்தலில் தேசிய டிப்ளோமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்துள் இணைந்த விஞ்ஞானம்

அறிவு என்பது மனித வளர்ச்சியின் அடிப்படைக்கு முக்கியமான வித்தாகும். அது உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவும் காரணி என்பதில் ஐயமில்லை. விஞ்ஞானிகள் சிலர் அறிவியல் விஞ்ஞானமும் சைவமும் எதிரிகளல்ல நெருங்கிய நண்பர்கள் என்கின்றனர். இதற்கு சான்றாக மிகப்பெரிய அறிவியலாளாலரக ஐன்ஸ்டீன் (Einstan) "சமயம் இல்லாத அறிவியல் முடமானது சமயம் இல்லாத அறிவியல் குருடானது."" என்றார். இவ்வாறு விஞ்ஞான ரீதியான பல உண்மைகளை எம் இந்து சமய பழக்கவழக்கங்களை முன்னோர்களிடம் கடத்தப்படுகின்றன. எமக்குத் தெரியாத விளக்கங்கள் சைவத்துள் ஒளிந்திருப்பதை அறிகையில் ஆச்சரியங்கள் எம்மை ஆட்கொள்ளுகின்றன.

நாம் நாள்தோறும் அணியும் அணிகலங்களில் ஒன்று திருநீறு அதை ஏன் அணிகின்றோம் என்ற உண்மை சிலருக்கு தான் தெரியும் என்பதால் அதை விஞ்ஞான ரீதியாக கூறுகையில் காலையும், மாலையும் நாம் குளிக்கும்போது எமது உடலின் மூட்டுக்களிடையே நீர்க்கட்டுக்கள் உருவாகின்றன. இந் நீர்க்கட்டுக்களை தேங்க வீடுவோமா ஆனால் தசைப்பிடிப்பு ,வாதம் என்பன எம்மில் பாரிய நெருக்கக் கூடியை ஏற்படுத்தி விடும். எனவே இந் நீர்க்கட்டுக்களை இல்லாது செய்யவே உலர்ந்த திருநீறு எம் உடல் முழுவதும் பூசப்பட்டமையால் இந் நீரை, உடைத்து அகத்துறிஞ்சி எம் உடலை குளிரிலிருந்து விடுவிக்கின்றது.

அந்நீறு மகிமையை நாயன்மார்கள் "நீறு இல்லா நெற்றிபாழ்" என அழகாக வருணித்துள்ளார். இந்து சமயத்தில் ஆலய வழிபாடு என்பது எல்லோராலும் புனிதமாய் மதிக்கப்படுகின்றது. இவ்வாலயங்கள் அமையப்பெறுவதையே ஆன்றோர் பல்வேறு காரணங்களாக கூறுகின்றனர் "கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என கூறுவதாவது கோயில் கட்ட எண்ணும் இடத்தில் மூன்று தானியங்களை விதைத்து இரண்டு அல்லது மூன்று தினங்கள் காத்திருக்க வேண்டும். அவை முளைத்து முளைகள் வெளித்தோன்றி இருப்பின் அவ்விடத்தில் கோயிலைக் கட்டுவார்கள். இதன் பொருள் கோயிலின் சுற்றுபபுறப் பகுதிகள் விவசாயத்திற்கு உகந்தது எனின் இவ்விடத்தில் மக்களும் வாழக்கூடிய நிலைமை இறுக்கின்றது. எனவே அவ்வூர் மக்களால் நிரம்பியிருக்கும்.எனவே கோயிலைக் கட்டி அவர்களால் வழிபட முடியும் என்பதாகும்.

ஆலயத்தின் கோபுரத்தின் உச்சியில் எந்தக்கட்டடமும் இருக்கக் கூடாது. என கூறப்படுவது கோபுரத்தின் உச்சியில் தங்கமும், வெள்ளி, செம்பு ,ஆகிய ஐம்பொன்களால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங்களில் நிரப்பப் படும் தானியங்களும் உலோகங்களும் மின் காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியை கலசங்களுக்கு கொடுக்கின்றன. இதனால் தான் முற்காலத்தில் இடிமழை காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கோயிலுக்குள் சென்று அங்கிருப்பதால் பாதுகாப்பை பெறுவதாய் சான்றுகள் உள்ளன. ஆனாலும் இத்தானியங்கள் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கலசத்திலிருந்து நீக்கப்பட்டு புதியவையால் நிரப்பப்படுகின்றன. ஏனெனில் இத்தானியங்களின் சக்தி பன்னிரண்டு வருடங்கள் தான் வலிமையுடையது.

ஆலயத்திற்கு நாம் செல்லும் போது ஆபரணங்களை அணிந்து செல்வது வழக்கம். ஆனால் எம் பெரியவர்கள் கட்டாயம் ஆபரணம் அணிந்து செல் என பெண்களுக்கு கூறுகையில் எமக்கு அழகைத் தரும். என்றே நாமும் அவர்களும் எண்ணியிருக்கின்றோம். ஆனால் உண்மை அதுவல்ல நாம் ஆபரணங்கள் அணிந்திருப்பதால் இறைவனுக்கும் எமக்குமானத் தொடர்பை ஏற்படுத்த ஆபரணங்கள் தூண்டுதலாய் அமையும். ஆபரணங்கள் உலோகத்தால் ஆனவை. இவை இறைவனுக்கும் எமக்குமான காந்த விசை கோடுகளை ஏற்படுத்துவதனால் இறைவனிடம் நாம் கூறும் எண்ண அலைகள் நேரடியாக அவரை அடையும். என்பதே அவ்வுண்மையாகும். ஆனால் ஆண்கள் ஆபரணங்கள் அணியாவிடினும் அவர்கள் தம் மேலாடைகளைக் கழற்றி கோயிலுக்குள் உட்புகுவதால் அவர்களது உடல் நேரடியாக இறைவனுடனான காந்த விசைக் கோடுகளை தொடுகை அடையச் செய்யப்பட்டு அவர்கள் வேண்டுதல்கள் அவரை அடையும் என்பதே ஆகும். ஆனாலும் பலர் ஏனெனத் தெரியாமலயே கோவிலிற்குள் ஆடையை அணிகின்றனர்.

இறைவனானவன் ஏன் கருவறை என்னும் மூலஸ்த்தானத்தில் அமர்த்தப்படுகின்றார். ஏன் அவ்விடம் தனியாகக் கட்டப்படுகிறது என ஆராயின் கோவிலைக் கட்டுகையில் காந்தபுலம் செறிந்துள்ள இடத்திலேயே மூலஸ்தானமாகக் கருதுகின்றனர். அப்போது தான் அங்கிருந்து வெளியல் காந்த சக்தியை மக்கள் தம்மோடு கொண்டுவர முடியும் அவர்களுக்கிடையே காந்த விசைக் கோடுகள் வலம் வரும். என்பதும் அறிவியல் உண்மைகள் மேலும் சுற்றி வர கட்டப்பட்டு ஒரு பகுதி மட்டும் கதவு மூலம் வழிபட வெளிக்காட்டப்படுகின்றது. இதனால் காந்த சக்தி இறைவனிடமிருந்து விரயமாகாது ஒரு வாசலால் மட்டும் வரப்படும் அது எம்மை அடையும் என்பதே நிதர்சனம். எம் இறைவன் எல்லா சக்தியிலும் முதன்மையானவன் என வருணிக்கப்படுகின்றான். இதையே "அவனின்றி அணுவும் அசையாது." என கூறுகின்றார்கள். அணு என்பது மேலும் பிரிக்க முடியாத மிகச்சிறிய துணிக்கையாகும். அவ் அணுதான் எந்தவொரு பொருட்களின் ஆக்கத்திற்கும் அவசியமானது. இறைவன் அணுவினுள் இருக்கின்றான். என்னும் நோக்கமே அவனின்றி அனுவும் அசையாது எனப்பொருள்படுகிறது. அத்துடன் இறைவனே தூண் என்னும் பெரியதிலோ மிகச் சிறிய துரும்பிலோ இருப்பான் எனலாம்.

கோயிலில் மணியோசையுடனான வழிபாடு நடைபெறுகையில் எமக்கு தெய்வீக உணர்வு தோன்றுவதை எம் உடல் உணரும் மணிகள் உருவாக்கப்படும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்,குரோமியம் ,நிக்கல் ,தாமிரம்,மக்னீசியம் போன்ற பல உலோகங்கள் இணைந்து உருவாக்கப்படுகின்றது. எனவே மணியோசையின் போது எதிரொலி, எம் உடலின் ஏழு சக்கரங்களையும் தொடும் அதாவது மூளையை ஒருமுகப்படுத்தி அறிவாற்றல்,உணர்திறனைக் கூட்டுவதால் வழிபாடு நிறைவானதாக மாறும்.

விரதமிருந்து வழிபடுதல் என்பது எம்மை வருத்ததக்கதுஅல்ல. மாறாக எமது வழிபாடு அங்கங்களின் தொழிற்பாட்டைச் சீராக்கும் சித்த மருத்துவமாகும். எனவே தான் இவ்விரத காலத்தில் பானாமிர்தம் என்னும் சர்க்கரை,தேசிக்காய் ,இளநீர் சேர்ந்த நீராகாரம் அருந்த வேண்டும். அவை வெறும் வயிற்றினுள் சென்று வாய்வு,பித்தம்,உடல்வெப்பம்,என்பவற்றை குறைக்கும். இதனால் உடல் சமநிலை பேணப்பட்டு செயற்பாடுகள் ஒழுங்காக்கப்படுகின்றது.

வீடுகளில் அதிகாலையில் சாணம் தெளித்து கோலமிடல் வீட்டிற்கு நன்மையைத் தரும் என எம் பெரியவர்கள் கூறுவதுமுண்டு. உண்மையில் இதன் காரணமாக அமைவது பசுமாட்டு சாணம் என்பது எல்லா கிருமிகொல்லிகளிலும் சிறந்தது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இத்தகு சிறப்பு மிக்க சாணத்தை கரைத்து முற்றத்தில் தெளிக்கையில் சூழலில் காணப்படும். நோயாக்கியான பற்றீரியாக்கள் அழிக்கப்படுகின்றன. எனவே எம்மை நோய்நொடிகள் நெருங்காது என்பது விஞ்ஞானம் கூறும் வெளிப்படை உண்மை. மேலும் துளசிமாடம் அமைத்து வீடுகளில் துளசியை வணங்கும் போது அதிகாலையில் துளசியிலிருந்து வரும் சுவாச வாயுக்கள் மாசற்றவை என்பதால் அதை சுவாசிக்கும் எமக்கும் சுவாச நோய்களற்றுப் போவதுடன் மூச்சுக்கள் இலகுவாக்கப்படுகின்றது. அத்துடன் மார்கழி மாதத்தில் மேற்கொள்ளப்படும் சிறப்பாக அதிகாலையில் எல்லா வழிபாட்டையும் செய்வதுண்டு இம் மாதத்தில் மேற்கொள்ளப்படும் சிறப்பாக அதிகாலையில் எல்லா வழிபாட்டையும் செய்வதுண்டு. இம்மாதத்தில் ஓசோன்படலத்தினூடு காற்று வந்து பூமியில் இறங்குகிறது. இது உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுவதோடு எமது உடலிற்கு தேவையான 80% ஆன ஒட்சிசனையும், காபனீரொட்சைட்டின் அளவை 20% ஆகப்பேணுவதால் எம் சுவாசத் தொகுதியின் தொழிற்பாடு சரியாக அமைவதோடு நோய்கள் எம்மை அணுகாமல் பார்க்கலாம். கோயில்களில் கணபதி வழிபாட்டை செய்யும் போது தோப்புகரணம் போடுதலும் தலையில் மூன்றுமுறை குட்டிக்கும்பிடுதலும் சிறப்பான அம்சங்களாகும். இதனால் நெற்றியின் இருபக்கமும் உள்ள நரம்பு மையங்கள் தூண்டப்பட்டு நினைவாற்றல் அதிகரிக்கின்றது. மூளைக்கான இரத்தஓட்டம் இத்துடன் அதிகரித்து நாம் சுறுசுறுப்பாய் இயங்க முடிகிறது. காதை இருபுறமும் பிடித்து தோப்புகரணம் போட்டு இருந்து எழும்புகையில் மூளையத்தின் இருபுறமும் தொழிற்பட ஏதுவான நரம்புகள் தூண்டி கணத்தாக்கம் கடத்தப்படல் இலகுவாக்கப்படும்.அத்துடன் கால்,கை,தசைகள் சுருங்கி விரிய தசைப்பிடிப்புக்கள் இல்லாது போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில் அரசமர வழிபாடு செய்தால் குழந்தைப்பேறு கிடைக்கும் என வீட்டுப்பெரியோர் சொல்வதுண்டு. அரச மரத்தை சுற்றும்போது அதிலிருந்து வரும் ஒருவித சுத்தமான வளியை சுவாசிக்க நேரிடும். இவ்வளி உடலினுள் புகுந்து பெண்களின் மாதவிடாய் சுழற்சியை ஒழுங்காக்கிறது. அத்துடன் ஓமோன்களின் உற்பத்தி மற்றும் சுரப்பிகளின் தொழிற்பாடுகளை சீர்மயப்படுத்தும். இதனால் குழந்தை உருவாகுதல் இலகுவாக்கப்படும். என்பதே விஞ்ஞான உண்மையாகும்.

அதிகாலையில் மேற்கொள்ளப்படும் சூரிய வழிபாடு மூலம் நமக்கு பல நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றன. சூரியகதிர்கள் எம் கண்ணை அடைகையில் கண்கள் பிரகாசம் அடைவதுடன் பார்வைக் குறைபாடுகள் இல்லாது போகிறது. மேலும் தைரொயிட் சுரப்பிகள் செயற்படும் வீதம் அதிகரிக்கப்படும். எம்முன் ஞாபகசக்தி அதிகரிக்கும்,மன அழுத்தம் குறைக்கப்படும்.உற்சாகத்துடன் இயங்க முடிகின்றமை. என்பன இவ்வாற்றல் கிடைக்கும் பயன்களாகும். சூரியனுக்கு ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம் அதாவது "அட்ட" என்பது எட்டைக் குறிப்பதால் உடலின் எட்டு அம்சங்கள் நிலத்தை தொட செய்யப்படும் நமஸ்காரமாகும். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்வார்கள். "பஞ்சம்" என்றால் "ஐந்து" எனப்பொருள்படும். எனவே உடலின் ஐந்து அங்கங்கள் நிலத்தில்பட நமஸ்காரம் செய்தல் என்பதாகும்.
இவ்வாறு இந்து சமய வழிப்பாட்டு முறைகளை ஆன்மீகமாக பார்ப்பதுடன் அதன் பின்னாலுள்ள விஞ்ஞான விளக்கங்களை பெறுவோமானால் நாம் எதையும் தவிர்க்காது சரியாக செய்வோம். அத்துடன் எம் வாழ்வின் சகல நன்மைகளும் பெறுவோம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

திருமதி நிரோஜினி அரங்கன்
(Bsc,Msc,Dip in Edu (Univrsity of jafna)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் உரிமைகளும் வழிதவறுதல்களும்

சிறுவர் உரிமைகள் - சிறுவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து அவர்கள் அனுபவித்து வாழ்ந்திட வழிவகை செய்ய வேண்டும் என்பது பொதுவான ஏற்பாடாகும். எதிர்காலத்தில் நாட்டை வழி நடத்தவும் மேம்படுத்தவும் தற்பொழுது வாழும் சிறுவர்கள் சிறந்த திறனைகளையும் அறிவு சார்ந்த எண்ணங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

பெரும் மனித சமூகத்தை வழிநடத்துபவர்களாகவும் ஆட்சி நடத்தக்கூடிய நல்லொழுக்க பண்பு மிக்கவர்களாகவும் உடல், உள ஆரோக்கியமிக்கவர்களாகவும் வளர்த்தெடுக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு பெற்றோர்களிடமும், சமூகத்தினரிடமும் உள்ளது.

இவ்விடயத்தில் எங்கு தவிர்ப்பு நிலை ஏற்படுகின்றதோ அங்கு ஆபத்து நிலை ஏற்பட்டு விடும் இலங்கையில் சிறுவர் உரிமைகள் தொடர்பான சட்டம் 1992ம் ஆண்டு முதல் நடைமுறைக்குள்ளாகியது.

அன்று முதல் எமது சிறுவர்களும் உரிய உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர்களாகின்றனர்.

1. உயிர் வாழ்வதற்கும் அபிவிருத்திக்குமான உரிமை.
2. பிறப்பால் பெயரையும் இனத்தையும் பெற்றுக்கொள்வதற்கான உரிமை.
3. பெற்றோரைப்பற்றி அறிந்து கொள்வதற்கும் அவர்களின் பாதுகாப்பைப பெற்றுக்கொள்வதற்குமான உரிமை.
4. பெற்றோர்களிடமிருந்து பிரிக்க முடியாமைக்கான உரிமை.
5. கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை.
6. சிந்திப்பதற்கும் மனச்சாட்சிக்கும் மதத்திற்குமான உரிமை.
7. கூட்டிணைவதற்கான உரிமை.
8. தனித்துவத்திற்கான உரிமை.
9. ஆரோக்கியத்திற்கான உரிமை.
10. பாலியல் துஸ்பிரயோகத்திலிருந்து பாதுகாத்துக்கொற்வதற்கான உரிமை.
11. ஆபத்தான செயல்களில் ஈடுபடுவதிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான உரிமை.
12. குரூர அல்லது சித்திரவதைக்கு உட்படுத்திலிருந்து அல்லது தண்டனைகளிலிருந்து விடுபடுகின்ற உரிமை.
13. சாதாரண வழக்கு விசாரணைகள் உரிமை.
14. சுதந்திரத்திற்கும் தற்காப்பிற்குமான உரிமை.

இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் இருந்த போதிலும் நடைமுறையில் அவை செயற்படும் முறைமை பற்றி பல்வேறு தரப்பினராலும் விமர்சனம் செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டில் தற்போது இடம்பெற்று வரும்

1. போதை வஸ்து பாவனை
2. சகல விதமான துஸ்பிரயோகங்கள்
3. வன்முறை சார்ந்த செயற்பாடுகள்
4. கல்விசார் செயற்பாட்டிற்கான நெருக்கடிகள்

எல்லாவற்றிற்கும் காரணமாக அமைவது இளம் சமுதாயத்திற்கு உரிய உரிமைகளை அனுபவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவில்லை என ஒரு சாரார்கள் வாதிடுகின்றனர்.

அதே வேளை சிறுவர் உரிமை சட்ட விதியின் ஏற்பாடுகள் சகல நாட்டினருக்கும் பொதுமைப்படுத்தி செயல்ப்படுத்த முடியாது எனவும் அவற்றில் மேலதிக விடயங்கள் உட்படுத்தப்பட வேண்டும் எனவும் இவர்கள் கூறுகின்றனர்.

இந்த வகையில் இதே போன்று உரிய சிறுவர் உரிமைகளின் சில சரத்துக்கள் இச்சிறார்களை நல்வழிப்படுத்தும் முயற்சிக்கு எதிராக அதாவது அவர்களுக்கு தீய வழிநடத்தைகளுக்கு அனுகூலமாக, கவசமாக அமைந்து விடுகின்றன. இவற்றை இவர்கள் தமக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தி சட்டச்சிக்கல்களில் இருந்து தப்பித்துக்கொள்கின்றனர். இவற்றை பொருளாதார வளர்ச்சி என்கின்ற நிலையில் வர்த்தக நோக்கத்தை மைய எண்ணமாக கொண்ட அபிவிருத்தி அடைந்த நாடுகள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்கின்றது. இதனால் பொது வெளியில் அவர்கள் குரல் கொடுப்பதில்லை.

Android Phone – பாவனை இவ்வகை தொலைபேசிகளினூடாக சகல வகையிலும் சமூகத்திற்கு ஏற்புடைய ஏற்பில்லாத விடயங்களை சிறுவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். பாலியல் ரீதியான ஆபாசங்களை எவ்வித தடங்கலுமின்றி புலக்காட்சியைப் பெற்றுக்கொள்கின்றனர். இதன் மூலம் உடலில் ஏற்படும் உள்ளிணைந்த கூறுகளின் தூண்டல்கள் அவர்களை நெறிபிறழ்வான நடத்தைளில் ஈடுபட வைக்கின்றன. இவை மனித நடத்தைகளின் இயல்பான செயற்பாடுகளாகும்.) ஆனால் அவ்வகையான பாவனையை கட்டுப்படுத்தக்கூடிய எவ்வகை ஏற்பாடுகளும் சிறுவர் உரிமை சட்டங்களில் காணப்படாமை பெரும் குறைபாடாகவே அமைகின்றது.

தென்னிந்திய சினிமாக்கள் எப்படி கைத்தொலைபேசிப் பாவனை சிறுவர்களது நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றதோ அதேபோலவே தென்னிந்தியாவில் தயார் செய்யப்படும் பல திரைப்படங்களும் தமது பங்கினை சமமாக நிறைவேற்றிக் கொள்கின்றது. வன்முறை சார்ந்த செயற்பாடுகளில் அதிதீவிரமாக நடத்தைக்கோலத்தை காட்டக்கூடிய சிறுவர்களின் உள நிலை வெளிப்பாட்டிற்கு காரணமாக அமைவது அண்மைக்கால திரைப்படங்ளும்தான் என்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. இவ்வாறான உள நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் முரண்நிலை கொண்ட திரைப்படங்கள் திறந்த நிலையில் தமக்கான நிதியீட்டத்தை பெற்றுக்கொள்கின்றது. ஆயினும் இவ்வாறான திரைப்படங்களை சிறுவர்கள் பார்வையிடுவதற்கும் அனுபவிப்பதற்கும் சிறுவர் உரிமை பிரகடனத்தில் எவ்வித மறுதலிப்புக்களும் காணப்படவில்லை என்பது மிக முக்கிய விடயமாகும்.

ஒட்டுமொத்தத்தில் "உலக மயமாதல்" என்கின்ற கோட்பாட்டிற்கு ஏற்ப வர்த்தக நோக்கத்தை மையமாக கொண்ட ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கம் வகித்து ஆளுமை செலுத்தும் நாடுகள் ஒரு போதும் ,க்கருத்து நிலையை ஏற்றுக்கொண்டு சிறுவர் உரிமை பிரகடனத்தில்

1. 18 வயதிற்கு உட்பட்டோர் Android Phone இனை பயன்படுத்த முடியாது என்றும்
2. 18 வயதிற்கு உட்பட்டோர் வரையறை செய்யப்பட்ட திரைப்படங்கள் தவிர வேறு வகை திரைப்படங்களை பார்வையிட முடியாது.

எனவும் உரிய சிறுவர் உரிமைச்சட்ட நிபந்தனைகளுக்குள் உட்படுத்தமாட்டார்கள் ஏனெனில் இவர்கள் தான் அவர்களது பிரதான கொள்வனவாளர்கள்.

கணேசுஷ் விஜயசேகரன் - பிரதி அதிபர்
கிளி/சிவபாத கலையகம்
அ.த.க.பாடசாலை
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி முதல்வரோடு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற் கல்வியின் அவசியம்

உடற்கல்வியானது உடலவளத்தினை மேம்படுத்துவதுடன் உள வளத்தையும் மேம்படுத்துகின்றது. ஊக்கம், கட்டுப்பாடு போன்ற அரியபண்பு நலன்களுக்கு காரணமாய் அமைவது உடற்கல்வியாகும்.

"உடம்பே ஆலயம் உயிரே தெய்வம்" என்பது திருமூலரின் வாக்காகும். உடல் கல்வி என்று எப்போது கூறக்கற்றுக் கொண்டோமோ அப்போதே அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

உடற்கல்வியால் விளையாட்டுக்களின் விதிமுறைகள், நுணுக்கங்கள் என்பவற்றைக் கற்கின்றனர். அவற்றைக் கடைப்பிடிக்கும் பயிற்சியையும் பெறுகின்றனர். உடல் அசைவுகளை ஆராய்ந்து ஒவ்வொரு அசைவும் என்ன என்பதனை உணர்ந்து செயற்படும் ஆற்றலைப் பெறுகின்றனர். இதற்காகவே பாடசாலையில் சுகாதாரமும் உடற்கல்வியும் என்ற பாடமானது புகட்டப்படுகிறது.

உடற்கல்வியானது தனித்திறமைகளை வளர்க்கவும் உடலவளத்தினை உயர்த்திக் கொள்ளவும் ஓய்வுநேரத்தினைப் பயன்பாட்டுடன் கழிக்கவும் துணை நிற்கின்றது. உடற்கல்வியினைப் பெற்று விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுவோர் உலகளாவிய புகழும் பெரும் பொருளும் பெறுகின்றனர். உலக மக்கள் அறிவதற்கான விளம்பரமும் கிடைக்கின்றது. சான்றிதழ்களும் பரிசில்களும் பெறுவதோடு மட்டுமின்றி மேற்படிப்பிற்கான இட ஒதுக்கீடும் பொருளுதவியும் பெறுகின்றனர். வேலை வாய்ப்புக்களிலும் அவர்களுக்கு சிறப்பிடம் வழங்கப்படுகின்றது.

"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்" என்பதனைப் போல சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம். பிள்ளைகளுக்கு உடல் பலம் ஏற்படுத்தாமல் வெறுமனே படிப்பை மட்டுமே கொடுத்தால் நாளுக்கு நாள் அவர்களது ஆரோக்கியம் குறையும். அவர்களால் எந்த ஒரு செயலையும் செய்யமுடியாது போகும். உடல் வலிமையுடன் இருந்தால் தான் நாட்டையும் வீட்டையும் காக்கமுடியும். இதற்கு உடற்கல்வி அவசியமாகின்றது.

பாலினை நல்ல பாத்திரத்தில் வைத்திருந்தால் தான் கெடாமல் சுவைக்கும். உயிரும் நல்ல உடலிற்குள் இருந்தால் தான் வாழ்வு கெடாமல் இருக்கும்.

ஆகவே உடற்கல்வியின் முக்கியத்துவத்தினை அறிந்து உடற்கல்வியால் உடம்பை வளர்ப்போம். அறிவையும் ஆற்றலையும் மேம்படுத்துவோம்.

நன்றி

திருமதி. ஸ்ரீகாந்தன் பிரதீபா
(கற்பித்தலில் தேசிய டிப்ளோமா - A/L)
கிளி/ சிவபாதகலையகம் GTMS - ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையின் மகத்துவம்

மனித வாழ்வில் இசையானது பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிப்பிணைந்துள்ளது. எவ்வாறெனில் மனிதன் பிறந்ததும் அவனுடன் இசையும் பிறக்கிறது. குழந்தை தாய் வயிற்றிலிருந்து உலகை எட்டிப் பார்க்கும் போது "குவாகுவா" என்ற குரல் எழுப்பி பிறக்கிறான். பிறந்ததும் மருத்துவிச்சி அக்குழந்தையை தன்கையில் தூக்கி மருத்துவிச்சி பாடலைப் பாடுகின்றாள் அப்பாடல்

"நெல்லுப் பொதியோடு வந்திரோ தம்பி" எனத் தொடங்கும் பாடலடி உணர்த்துகின்றது. பின் அவன் தன் தாயின் கையில் தவழுகையில் தாலாட்டு எனும் இசை அவனை வருடுகின்றது. தாலாட்டு என்பது "நாவை அசைத்து ஆட்டி பாடும் பாடல் ஆகும்." தன் குழந்தையை நித்திரை செய்விக்க தனது நாவால் அசைத்து தன் இனிய குரலால் இசைக்கும் பாடல் இங்கு தன் குழந்தையுடன் இசை மூலம் தாய் உரையாடுகிறாள். அவ்விசையின் மூலம் குழந்தையின் குலப்பெருமை உறவுகளின் மகிமை பற்றி இசையால் அறியச் செய்கிறார்.

"ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீ அழுதாய்
பாட்டி அடித்தாளோ
பாலூட்டும் கையாலே" எனத் தொடங்கும் பாடலடி

இதனை வெளிப்படுத்துகின்றது. அடுத்த கட்டம் குழந்தை தாயின் மடியிலிருந்து எழுந்து தவழ்ந்து தன் பாதங்களை நிலத்தில் பதித்து "தத்திதத்தி" எழுந்து நடந்து திரிந்து விளையாடும் பருவத்தில் விளையாட்டுப்பாடல்

"ஆலையிலே சோலையிலே
ஆலங்காடி சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுக்கியடிக்க பாலாறு" இப்பாடல்

"ஓடி விளையாடு பாப்பா" என்ற பாரதி பாடலடிகள் போன்றவை இதை புலப்படுத்துகின்றது. மேலும் அக்குழந்தை தன் பாதத்தை பாடசாலையில் பதிக்கும் போது அங்கு அழகியல் எனும் பாடத்தினூடாக இசை மாணவர் எனும் பருவத்தினூடாக தொடர்கின்றது. "உலகமே இசைமயமானது" இதைத்தான் கலைஞர்கள் "இசையால் வசமாகா இதயமெது" என்ற பாடலடி மூலம் உணர்த்தி உள்ளனர். இசை தரும் இன்பத்தை அனுபவிக்காதவர் யாரும் இல்லை. அது மனிதர்கள் மட்டுமல்லாது எல்லா உயிர்களையும் ஈர்க்கவல்லது. எல்லோரையும் இசையவைப்பதால் தான் இசை என்று பெயர் பெற்றது. இவ்வாறான இசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி முதல்வரோடு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்திட்டத்தில் புகுத்தப்பட்டு மாணவப்பருவத்திலுள்ள பிள்ளையை உணர்வு ரீதியாக மகிழ்ச்சிகரமான கற்றலை செயற்படுத்த வழி செய்கிறது.

பல்வேறு சூழ்நிலையில் இடர்பாடுகளில் இருந்து வரும் பிள்ளை மகிழ்ச்சிகரமான கற்றலை விருப்புடன் ஏற்று கற்றலை விருப்புடன் மேற்கொள்கின்றனர். இசை உணர்வை வெளிப்படுத்துவது நாம் கோபமாக கவலையாக இருக்கின்றோமோ அவற்றைக் கட்டுப்படுத்தி சமநிலை அடையச்செய்கிறது. ஆகவே இவ்வாறான இசை மாணவர்தம் வாழ்வில் முன்னேற வழி செய்கின்றது. மேலும் அடுத்த கட்டம் உயர்தர வகுப்பைக் கற்று பல்கலைக்கழகம் முடித்து வேலை வாய்ப்பை எதிர் நோக்கும் போதும் இவ்வுலகில் இசை இல்லாத இடமில்லை எல்லா இடங்களிலும் ஆட்சி செய்கின்றது. இதனை அனுபவிக்கத் தெரிய வேண்டும். உல்லாசமாக இருப்பவர்களுக்கு மட்டுமல்ல உழைத்து களைத்தவருக்கும் கூட இசை ஆறுதல் தருகிறது. அவர்களது வியர்வையை வருடி இன்பம் தருகிறது. அவர்களது வியர்வையை வார்த்தையில்லாத மொழி களால் அவர்களோடு பேசுகிறது. பல இன மொழி இனத்தவரை ஒன்றிணைக்கும் ஆற்றல் கொண்ட இவ்விசை பல தொழில்களில் ஈடுபடும் மக்களிடம் எவ்வாறான வடிவங்களில் உருவாகிறது என பார்ப்போம்.

விவசாயப் பாடலாக

"மண்ணை நம்பி உழுதுவச்சி..."

கப்பல் பாடல்

"ஏலோலோ ஐலசா....."

நெசவுப்பாடல்

"கைத்தறியில் பாடுபடும்..."

இவ்வாறு தொழிற் பாடல்களுக்கு அமைய மக்கள் தம் களிப்பை விழாக்கள் கொண்டாட்டங்களில் இசை வடிவங்களான கும்மி, கோலாட்டம், கரகம், காவடி என பல இசை வடிவங்களில் இசையைக் கேட்டு இன்புறுவதைக் காணலாம். இவ்விசை மனிதர்களை மட்டுமல்ல கொடிய விலங்குகளை நச்சுப்பாம்புகளைக் கூட கனிய வைக்கும். விலங்குகள் தம் பகையை மறந்து மயங்கி நிற்பதைக் காணலாம். மகுடிக்கு பாம்பு மயங்கி நிற்பது கண்ணன் குழலிற்கு பசு, கன்று, மான், மயில் என உயிரினங்கள் மதி மயங்கி நிற்பதை காணலாம். இதை கண்ணூடாக காண்பதிலிருந்து அறிய முடிகிறது.

கல் மனதையும் கரையச் செய்யும், கண்ணீர் விடவைக்கும் மன அழுத்தத்திலிருந்து விடுவித்து மனதை தளர்வடையச் செய்து புத்துயிர் அளிக்க வல்லது. தாவரங்களை வளர செய்யும் சக்தி கூட இசைக்குண்டு. இது விஞ்ஞானிகள் தம் ஆய்வுகள் மூலம் கூறி உள்ளனர். இத்தகைய இனிய ஒலியான இசையை மனிதன் அன்பைப் பரிமாற வெளிப்படுத்துகின்றான். தம் வாழ்வை இசையுடன் தொடங்குகின்றனர். இக்கால சினிமா இலக்கியமாக மறுபடிவம் பெற்று இசை வெளிப்படுகின்றது. இதற்கான பல பாடல் வரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தண்ணீர் கொண்டு போறபுள்ள"

"முழுமதி அவளது முகமாகும்"

"முன்பே வா என் அன்பே வா" இவ் வரிகள் அழகு கொடுக்கும் வரிகளாக மட்டுமன்றி எதுகை, மோனை, சொல்நயம், பொருள் நயம் என இலக்கிய செறிவுடன் இசை புத்துயிர் பெறுகிறது. மேலும் மனித வாழ்வில் எம் உடல் உள ஆரோக்கியத்திற்கு அதிகளவு பங்களிப்பு அளித்து வருகின்றது. எமது மன அழுத்தங்கள் பலரது மன நோய்கள், தனிமை, வெறுப்பு, கோவம் என்பவற்றைக் கூட தணித்து இதமான இசை மெல்லிசையாக வருடி சுமைகளைக் குறைத்து சுகத்தைத் தருவது இசையே. இவ்வாறான இசை "மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாளில் பொழுது புலரும் போதே இசையும் இளம் பனியாய் பொழிகிறது" திருப்பாவை, திருவெம்பாவையும் செவியின் வழியாக மனதைக் குளிர்விக்கிறது. எங்கும் இசையாய், இசைப்பயனாய் அன்பையும், அமைதியையும் புதுப்பிக்கிறது.

"பாட்டினைப்போல் விந்தை பாரின் மிசை இல்லையடா" என்று வியந்து பாரதி "பாட்டினிலே நெஞ்சைப் பறிகொடுத்தேன். பாவியேன்" என்று தம் பரவச நிலையை பாடுகின்றார். அந்த அளவிற்கு உணர்ச்சியுள்ள ஒவ்வொரு உயிரையும் கவர்ந்து இழுக்க வல்ல காந்தம் இசையே" முத்தமிழில் முதல் தமிழ் இசையே ஆகும். இவ்விசையே எம்மை ஆழ்கின்றது. வாழ்வின் இறுதி கட்டமான ஓய்வைக் கழிக்கும் போது இறையடியை சரணடைய தேவார திருவாசங்களாக இசை வடிவம் தொடர்கிறது. இறைவனை அடைய சிறந்த மார்க்கம் இசை இவ்விசையினூடாக உடனடியாக இறைவன் திருவடி அடையலாம். இவ் உலகில் இயற்கை ஒலிகளில் கூட மனிதன் இசையை இரசித்தப்படியே வாழ்ந்து வந்துள்ளான். இம் மனிதன் ஐம்பூதங்களையும் மனதால் எந்த நேரத்திலும் தனித்து மகிழ்ந்து கொண்டதால் இசை மனித உணர்வுகளுடன் பிரிக்க மற்றும் விளக்க இயலாது ஒரு இணைப்பைக் கொண்டுள்ளது. வார்த்தையால் சொல்ல முடியாத அளவுக்கு நம் வாழ்க்கை முழுவதும் நம்முடன் பயணம் செய்வது நம் இசை.

அழுகையில் ஆரம்பித்து அழுகையிலே முடிகிறது வாழ்க்கை" இவ்அழுகை ஒரு வகை இசையே அதனை "ஒப்பாரி" என்ற இசை வடிவில் காண்கிறோம். எமை இவ் உலகை விட்டு கொண்டு செல்லத் துணையாக வருகிறது. அன்றுமுதல் இன்றுவரை பிறப்பு முதல் இறப்பு வரை இசை எம்மோடு எம்மக்களோடு இணைந்து வருவது என்றும் ஐயமில்லை. என்பது தெட்டத்தெளிவாக புலனாகின்றது. இதுவே எம்மை இசையவைக்கும் இசை என கூறி நிறைவு செய்கின்றேன்.

- விஜயலெச்சுமி திருச்செல்வம்.

ஆசிரியை (சங்கீதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பின் முக்கியத்துவமும் நூலகங்களின் பங்களிப்பும்

விந்தை மிகு உலகில் தினம் தினம் கண் இமைக்கும் பொழுதில் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. மனிதனது அறிவாற்றல் விருத்தியானது புதிய விடயங்களை எந்தளவு உள்வாங்கி இருக்கின்றனர் என்பதிலேயே தங்கியுள்ளது. வளர்ந்து வரும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப பல்வேறு விடயங்களையும் சமகால நிகழ்வுகளையும் உள்வாங்கும் திறன்கள் கொண்டவர்களாக ஒவ்வொருவரும் இருத்தல் வேண்டும். இவை அனைத்தும் வாசிப்பதன் மூலமே நிறைவேற்றப்படுகின்றது.ஒரு விடயம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முக்கியமான வழியொன்றாக வாசிப்பு காணப்படுகின்றது. அத்தோடு கல்வி சார் திறன்களை வளர்ப்பதற்கும் ஏனையவர்களுடன் சிறந்த தொடர்பாடலைப் பேணுவதற்கும் வாசிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

"தொட்டனைதூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனை தூறும் அறிவு" என்கிறார் திருவள்ளுவர். அதாவது மண்ணை ஆழமாகத் தோண்டும் போது நல்ல நீரானது ஊற்றெடுப்பதைப் போல நல்ல நூல்களை ஒருவர் வாசிப்பதன் மூலம் அவர்களது அறிவும் பெருகும். அந்த வகையில் ஒரு சமூகத்தினுடைய அறிவுக் கருவூலங்கள் நூலகங்கள் ஆகும். இவை சமூகத்தினரை வழிநடாத்தவும், நிலைநிறுத்தவும் ஆதாரமாய் உள்ளது. இவ் வகையில் மாணவர்கள் எதிர் காலத்தில் சவால்களை எதிர்கொண்டு மிளிரும் ஒரு சமுதாயத்தைப் பிரதிபலிப்பதற்குத் தயாராக வேண்டுமாயின் அது நூலகப்பயன்பாட்டின் ஊடாகவே சாதிக்க முடியும் என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும்.

தற்காலத்தில் வாசிப்பு பழக்கம் மாணவர்களிடையே மிகவும் அருகிச் செல்லும் ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதில் நூலகத்தின் பங்களிப்பு அளவிடமுடியாததாகக் கருதப்படுகின்றது. அந்த வகையில் நூலகத்தை ஒழுங்கான முறையில் பயன்படுத்துகின்ற மாணவர்களின் வாசிப்புத் திறன் உயர்வானதாகக் காணப்படுவதாகப் பல்வேறு ஆய்வுகளினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. பல்வேறு வகையான நூல்களை வாசிப்பதனூடாக சிறந்த சொல்வளத்தினைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைப்பதுடன் அதன் பயனாக வாசிப்புத் திறனையும் மொழி அறிவையும் மேலும் மேம்படுத்தவும் இயலுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு நூலகம் திறக்கப்படும் போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன" என விக்டர் ஹியுகோ கூறுகின்றார்." நல்ல புத்தகங்கள் நல்ல கனவுகளை வளர்க்கும். நல்ல கனவுகள் நல்ல எண்ணங்களை உண்டாக்கும். நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும்." என்று இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாம் நூல்களின் சிறப்புப் பற்றி கூறியுள்ளார்.

"வீட்டிற்கு ஓர் புத்தகசாலை சிறிய அளவிலாவது அமைக்க வேண்டும். பேரறிஞர் அண்ணா நூலகங்களின் அவசியத்தை இவ்வாறு கூறியுள்ளார் "அறிவே ஆயுதமாகிவிட்ட இந் நாளில் வீட்டிற்கு ஓர் புத்தகசாலை அமைக்க வேண்டியது அவசியமாகும்." "புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில் புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்" என கவிஞர் பாரதிதாசன் புத்தகசாலை எனும் கவிதையில் குறிப்பிட்டுள்ளார். இவை மனிதனின் வாழ்வில் நூலகம் மற்றும் வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அறிஞர்களின் வாசகங்களாகும்.

இதனடிப்படையில் நோக்கும் போது பாடசாலை நூலகங்களின் பயன்பாடு தொடர்பாக அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. ஆய்வு அறிக்கைகளினடிப்படையில் ஹொங்கொங் மற்றும் தாய்வான் போன்ற நாடுகளில் மாணவர்கள் வாசிப்பதற்கான வளங்களுக்காக முதலீடு செய்யும் தன்மையானது வாசிப்பு தொடர்பாக நேர் மனப்பாங்கினை வளர்ப்பதுடன் அவர்களது கற்றல் சார்ந்த முன்னேற்றத்திற்கும் உதவுகின்றது என்பது கண்டறியப்பட்டுள்ளது. வாசிப்பு பழக்கத்தைத் தொடர்ச்சியாகப் பேணுகின்ற மாணவர்களை அவதானிக்கும் போது அவர்கள் தங்களுக்கான வாசிப்பு மூலங்களைச் சுயமாகத் தெரிவு செய்கின்ற தன்மையைக் காணக் கூடியதாகவுள்ளது.

பாடசாலை நூலகமானது அனைத்து மாணவர்களுக்கும் சமவாய்ப்பினை வழங்குகின்றது. அந்த வகையில் குறைந்த வருமானம் உடைய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளான மாணவர்களுக்கும் இலகுவான முறையில் நூலகத்தினைப் பயன்படுத்த வாய்ப்பாக அமைகின்றது. இதனூடாகப் பாடசாலை நூலகத்தின் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும் கற்றலில் இடர்படும் மாணவர்களுக்குப் பாடசாலை நூலகமானது ஒரு வழிகாட்டும் களமாக அமைகின்றது. அத்துடன் ஓய்வு நேரத்தில் மாணவர்கள் குழுக்களாக இணைந்து வாசிப்பு செயற்பாடுகளை மேற்கொள்வதனூடாக அவர்களது சுயகற்றல் திறன் நன்கு விருத்தியடையும் மாணவர்களின் ஓய்வு நேரங்களைப் பயனுள்ளதாக்கி அவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தினை அதிகரிக்கச் செய்வதில் நூலாகப் பயன்பாடு மிகப்பெரும் பங்கு வகிக்கின்றது.

**"நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு"**


திருமதி. சுஜீவா சிவகுமார்.
பயிற்றப்பட்ட ஆசிரியர் (வர்த்தகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி முதல்வரோடு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Importance of Learning English

A Language is a System of Communication which Consists of a set of sounds and symbols. Language Interacts with every aspect of human life. It is a tool for Communication. Human language is somehow unique because it is a symbolic Communication System. It is true that we use Language to Communicate with others. People use variety of languages all over the world. English language is one such language which is known as an international Language or global language. English language is becoming more and more common in the world. As a result People dedicate themselves to learn English as their second language. Many Countries encourage their citizens Specially Youngsters to learn English.

Learning English is Important because it is the most used language today. Many People feel difficult to learn English. First of all, we should find Proper ways to learn the language. A number of people like to improve their speaking skill, Some Perfer listening, others tend to learn reading and writing. Actually; people have to become Skillfull at all basic components of the language which are identified as listening speaking, reading and writing.

Learning English will help you to enhance your communication skills. The most important function of a language is to communicate property. English Language also play as a powerful tool in communication. In other words, English becomes an effective instrument to communicate with everyone around the world. When we travel around the world English language is identified as the key factor to communicate with others. It is also an Important tool to communicate with the business people of other countries. Therefore, it is also essential in the world of business.

People need a wide range of knowledge in English in order to create great opportunities in getting jobs I and passing exams. Almost all Jobs require the employees to have good Proficiency in English. Because most of the instructions regarding the jobs are



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Written in English. By using English they could communicate each other in order to manage all their work effectively. English language opens the door for career opportunities to those who speak this language anywhere in the world. It has become an inevitable requirement for various fields like medicine, computing and more.

As it is the official language of many countries, learning English helps to break language barriers Due to the rapid growth of information technology, English is the language choice for internet users. It plays a major role in the field of education. English is being taught as a subject in all the schools, colleges, universities and other educational institutions. People those who wish to study in abroad have to use English language as a medium of communication and learning. Because almost all the educational resources, materials and medium of instructions are in English. The lack of English knowledge makes anyone insufficient in the field of education in today's world.

So it is necessary for everyone to learn English language. A wide knowledge of English language makes an individual to be a successful person in the world.

Miss Mayoori Nagathevan
National Diploma in Teaching (English)
B.A in English (R)
Teacher of English





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்காலக் கல்வியில் பெற்றோரின் வகிபாகம்

COVID 19 தொற்று நோயின் பரவலானது தனியாள், குடும்ப, சமூக மற்றும் தேசிய அளவில் மிகவும் எதிர்பாரததும் மேசமானதுமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. சமூக, பொருளாதார மற்றும் உளவியல் கட்டுமானங்களை ஆட்டங்காணச் செய்துள்ளது. சமூகத்திலுள்ள பல்தரப்பட்ட பராயத்தினர் மத்தியில் சிறுவர்களே இதன்போது மிகவும் பாரதூரமான பாதிப்புகளுக்கு உள்ளான தரப்பினராக அடையாளம் காணப்பட்டுள்ளனர். கற்றல் பின்னடைவு ஏற்படும் அதே வேளை எதிர்காலத்தில் பாடசாலை இடைவிலகலும் அதிகரிப்பதற்கான ஏதுநிலையும் அதிகரித்துள்ளது. வழக்கமான செயற்பாடுகள் தடைப்படும்போது பொருத்தப்பாடற்ற செயற்பாடுகள் மேற்கிளம்புகின்றன. ஏறத்தாள 18 மாதங்களாக பாடசாலைகள் நடைபெறவில்லை. முதலாந் தரத்துக்கு அனுமதி பெற்ற மாணவர்கள் பாடசாலை பற்றிய அடிப்படை விளக்கமே இல்லாமல் இரண்டாந் தரத்துக்கு நுழைந்துள்ளனர். பாடசாலையுடன் தொடர்புடைய வழமையான செயற்பாடுகளில் மாணவர்கள் பரீட்சயமற்றவர்களாகி விடுவதுடன் மாணவர்களிடத்தில் பாடசாலைக் கல்வி தொடர்பாக எதிர்மறைச் சிந்தனைகளும் தோற்றம் பெற நேரிடலாம். வயதில் கூடிய வெளியாட்களுடனான அதிகரித்த தொடர்புகள் மாணவர்களிடத்தில் தவறான பழக்கங்களுக்கும் நடத்தைகளுக்கும் காரணமாகலாம். மறுபுறமாக பெற்றோர் பிள்ளைகள் அனைவரும் தொடர்ச்சியாக வீட்டிலேயே தங்கியிருப்பதனால் பெற்றோர் பிள்ளைகளிடையே கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் தீவிரமடைவதற்கான ஏது நிலையும் ஏற்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையவழிக் கற்பித்தல் நிலைமைகள்

ஆசிரியர்களாயினும் சரி மாணவர்களாயினும் சரி எந்தவிதமான முன்னறிவோ பரீட்சயமோ அற்ற நிலையில் முற்று முழுதான இணையவழிக் கற்றல் கற்பித்தலை தொடர வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளனர். மேலை நாடுகளில் உள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் சாதாரண காலங்களிலேயே கலப்பு முறை (Blended Learning) கற்றல் கற்பித்தலுக்குப் பழக்கப்பட்டவர்கள்.

அதாவது பகுதியளவில் நேரடி வகுப்பறைக் கற்றலாகவும் பயின்றவர்கள். அதனால் அவர்களுக்கு முழுமையான இணையவழிக் கற்றலை எதிர்கொள்வது சவாலாக இருக்கவில்லை. ஆனால் எமது பிள்ளைகளும் ஆசிரியர்களும் கலப்பு முறைக் கற்றல் பற்றிய பயிற்சிகூட இல்லாத நிலையில் ஒரு பாய்ச்சலாக இணையவழிக் கற்றல் கற்பித்தலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஆசிரியர்களுக்கு இணையவழிக் கற்பித்தல் தொடர்பான அடிப்படை அறிவு இருக்கவில்லை. அனேகமானவர்களுக்கு தொழில்நுட்ப கருவிகளைப் சரியாகப் பயன்படுத்தத் தெரிந்திருக்கவில்லை. செயலிகளை சரியாகப் பயன்படுத்தத் தெரிந்திருக்கவில்லை. அதற்கான முறையான பயிற்சிகளும் வழங்கப் பட்டிருக்கவில்லை.

மாணவர்களைப் பொறுத்த வரையில் இணைய வழிக் கற்றல் மீதான பங்குபற்றல் வீதம் மாநகரம், நகரம், கிராமம் மற்றும் பெருந்தோட்டம் என்ற அடிப்படைகளில் வேறுபட்டுக் காணப்படுகிறது. கிராமங்களிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலும் மாணவர் பங்கு பற்றல் வீதம் 20-50% என்ற அளவிலேயே காணப்படுகிறது. பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த வறிய மாணவர்களின் இணையவழிக் கற்றலின் மீதான பங்குபற்றல் தொடர்பான இப் புள்ளிவிபரங்கள் எதிர்காலத்தில் பாரதூரமான கல்வி இடைவெளியை உருவாக்கப் போகிறது என்பதை தெளிவாகக் கோடிட்டுக் காட்டி நிற்கிறது. வசதி குறைந்த குடும்பத்திலுள்ள பிள்ளைகள் கணினி அல்லது திறன் பேசிகள் இல்லாததால் இணைய வகுப்புகளில் பங்குபற்ற முடியாத நிலையில் உள்ளனர். இன்னொரு புறமாக வறிய குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் அவர்களது பொருளாதார வல்லமைக்கேற்ப பெற்றுக்கொண்ட தனியொரு சாதனத்தை வைத்துக் கொண்டு வேறுபட்ட தரங்களில் கற்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் சம நேரத்தில் ஒழுங்கு செய்யப்படும் இணையவழி வகுப்புக்களில் பங்குபற்ற முடியாது திண்டாடுகின்றனர். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புற மற்றும் பெருந்தோட்ட பகுதிகளில் வலுக்குறைந்த இணைய வலைப்பின்னலின் காரணமாக இணையவழிக் கற்றல் தெளிவின்மைக்கும் தொடர்ச்சியான தடங்கல்களுக்கும் உள்ளாகின்றது. இவ்வாறான பின்னணியில் இலங்கையில் இணையவழிக் கற்றல் என்பது பெரு நகரம் மற்றும் நகரங்களில் உள்ள பிள்ளைகளுக்கு ஓரளவு சாத்தியமானதாக காணப்பட்டபோதிலும் கிராம மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள பிள்ளைகளுக்கு பெயரளவிலேயே நடைபெறுகிறது. தற்போது நடைபெறும் இணையவழி வகுப்புக்களில் கூட கற்பித்தலுக்கு பதிலாக மதிப்பீடுகளுக்கே ஆசிரியர்கள் முன்னுரிமையளிக்கின்றனர். இந்த நிலையில் பாடசாலைகள் மீள திறக்கப்படும்போது இணையவழிக் கற்பித்தலின்போது முடிக்கப்பட்ட பாடப் பகுதிகளில் இருந்தே ஆசிரியர்கள் பாடங்களைத் தொடங்கப் போகிறார்கள். இதன்காரணமாக இணையவழிக் கற்பித்தலில் கலந்து கொள்ள முடியாமற்போன பிள்ளைகளுக்கான பரிகாரக் கற்பித்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

கிராம மற்றும் பெருந்தோட்டப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள், இல்பாகவே அங்கு நிலவும் ஆளணி, பௌதிக வளப் பற்றாக்குறை காரணமாக கற்றலில் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில் பாடசாலைகள் மூடப்பட்டதன் காரணமாக அதிகபட்ச பாதிப்பினைச் சந்தித்துள்ளனர். இக் கற்றல் இடைவெளி அவர்களது வாழ்க்கை காலம் முழுவதும் பாதிப்பினை தரப்போவதுடன் சமூக வேறுபாடுகளையும் அதிகரிக்கச் செய்யப் போகிறது. எனவே தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டு பிள்ளைகளின் கற்றல் பாதிப்பினை ஈடு செய்யவேண்டிய பொறுப்பினை பெற்றோரே எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. கணிசமான எண்ணிக்கையுடைய பெற்றோர் மாணவர்களின் கல்வியானது முற்று முழுதாக ஆசிரியர்களின் கைகளில் தங்கியிருக்கின்றது என்ற பிழையான விளக்கத்துடன் செயற்படுகின்றனர். கணிசமான எண்ணிக்கையுடைய பெற்றோர் தமது திறமைகளை குறைத்து எடைபோட்டு தம்மால் தமது பிள்ளைகளின் கல்விக்கு உதவ முடியாது என்ற கருத்துடையவர்களாக உள்ளனர். உண்மையில் சமகால பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு கற்பிக்கக்கூடிய கல்வித் தகைமைகளைக் கொண்டவர்கள். பிள்ளைகளின் கற்றலை ஓரளவேனும் தடையின்றி முன்னெடுத்துச் செல்ல அவர்களால் முடியும். இதற்காக பெற்றோர் பல்வேறுபட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடநூல்களில் உள்ள உள்ளடக்கங்களை பெற்றோர் வாசித்து விளங்கிக் கொள்ளுதல்

மாணவர்களுடைய கற்றலுக்கான சிறந்த வளமாக இலவசப் பாடநூல்கள் விளங்குகின்றன. பாடசாலைகளில் ஆசிரியர்களும் இப் பாடநூலை அடிப்படையாகக் கொண்டே கற்பிக்கின்றனர். முன்பிருந்த பாடநூல்கள் போலன்றி தற்போது பாவனையிலுள்ள பாடநூல்கள் எளிமையான விளக்கங்கள், உதாரணங்கள், செயற்பாடுகள், பயிற்சிகள் என கற்பவருக்கு சார்பான முறையில் (Learner Friendly) உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் சுய கற்றலுக்கு ஏற்ற வகையில் அவை வடிமைக்கப்பட்டுள்ளன. சுய மதிப்பீடுகளுக்கும் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. சாதாரணமான அல்லது குறைந்த கல்வித்தகைமையுடைய பெற்றோராலும் இந்த இலவசப் பாடநூல்களை வாசித்து விளங்கிக் கொள்ள முடியும்.

சமகாலப் பெற்றோரர் சராசரிக்கும் உயர்வான கல்வித்தரங்களைக் கொண்டவர்கள். நவீன தகவல் ஊடகங்ககளை அதிகம் பயன்படுத்தும் திறன் மிக்கவர்களாக இருப்பதனால் அவர்கள் உயர் கிரகித்தற் திறன் கொண்டவர்கள். சமூக இடைவினை மிகுந்தவர்கள். உயர் எண்ம அறிவுடையவர்கள். இவர்களுக்கு பாடநூல்களில் தரப்பட்டுள்ள விடயங்களை விளங்கிக் கொள்வது சவாலான ஒரு விடயமல்ல பாடசாலைகளில் கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் பாடநூல்களை நன்றாக வாசித்து விளங்கிக் கொண்டதன் அடிப்படையிலேயே பிள்ளைகளுக்குக் கற்பிக்கின்றனர். பெற்றோர்களும் பாடநூல்களை வாசித்து நன்றாக விளங்கிக் கொள்வதன் மூலம் தமது பிள்ளைகளுக்கு கற்பிக்க முடியும். அவர்களால் வீடுகளில் மாற்று ஆசிரியர்களாகச் செயற்பட முடியும். தமது பிள்ளைகள் எதனைக் கற்கிறார்கள்? எவ்வாறு கற்கிறார்கள்? கற்ற விடயங்கள் எந்தளவுக்கு அவர்களால் உள்வாங்கப்பட்டுள்ளது?. எந்தப் பகுதியில் அவர்கள் இடர்ப்படுகின்றனர்? என்றதான வினாக்கள் பெற்றேரிடம் எழ வேண்டும். அந்தக் கேள்விகளுக்கான பதிலையும் அவர்களே கண்டறிய வேண்டும். அதற்குத் தீர்வு காணக்கூடிய திட்டங்களையும் உபாயங்களையும் வகுத்துக்கொள்ள வேண்டும். பிள்ளைகளின் கற்றலை, கற்றலில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தை, கற்றல் முன்னேற்றங்களை அளவிடத் தெரிந்திருத்தல் வேண்டும். அவற்றை பகுப்பாய்வு செய்து மாற்றங்களை அறிந்து கொள்ள கூடியவர்களாக தம்மை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இவற்றை தம்மால் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கையும் தைரியத்தையும் பெற்றோர் தமக்குள் வளர்த்துக்கொள்ள வேண்டும். இந்த நடைமுறையில் வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குள் வளர்த்துக்கொள்ள வேண்டும். இந்த நடைமுறையில் வெற்றி பெறும் பெற்றோரின் பிள்ளைகள் சிறந்த, உயர்ந்த அடைவுகளை எப்போதும் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாக விளங்குவார்கள்.

### வீட்டுப் பாடசாலை (Home School) செயற்படுத்துதல்

தற்போதைய நெருக்கடியை எதிர்கொள்வதற்கு மேலை நாடுகளில் காணப்படும் வீட்டுப்பாடசாலை முறை (Home School) ஒரு சிறந்த முன்னுதாரணமாகும். விட்டுப் பாடசாலை என்பது அரச அல்லது தனியார் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்பாமல் அங்கீகரிக்கப்பட்ட கலைத்திட்டத்தை பெற்றோரே தங்கள் குழந்தைகளுக்கு வீட்டில் வைத்துக் கற்பிக்கும் ஒரு வகை பாடசாலையாகும்.

நெருக்கடிகளற்ற சாதாரண காலங்களிலேயே உலகின் முக்கியமான பல நாடுகளில் இவ்வகைப் பாடசாலைகள் பிரபல்யமானவை. குறிப்பாக இங்கிலாந்து, ஐரோப்பா, நியூசிலாந்து, வட அமெரிக்கா, மற்றும் தென்னாபிரிக்கா உள்ளிட்ட முன்னேற்றங்கண்ட நாடுகளில் இது ஒரு சட்டபூர்வமான பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் மட்டும் 90 இலட்சம் மாணவர்கள் வீட்டுப் பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர். (மொத்த எண்ணிக்கையில் இது ஒன்பது சதவீதமாகும் கொவிட் தொற்றுக் காலத்தில் வீட்டுப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர் எண்ணிக்கை இந் நாடுகளில் வெகுவாக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். எமது நாட்டில் தற்போதைய நெருக்கடியான சூழலில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் ஒரு மாற்றுப் பாடசாலையாக நாம் வீட்டுப்பாடசாலை முறையையோ அல்லது அதற்கிணையான ஒரு ஏற்பாட்டையோ பின்பற்ற முடியும். எனவே வீடுகளில் பிள்ளைகளுக்கு பெற்றோரினால் அல்லது வயதுகூடிய சகோதரர்களினால் கல்வியை புகட்ட முடியும். நெகிழ்ச்சியான நேர ஏற்பாடு, பிள்ளைகளுக்குப் பாடங்களைக் கற்பிக்கலாம். நெகிழ்வுப்பாங்கான அணுகுமுறையூடாக மதிப்பீடுகளைச் செய்யலாம். பரிகாரக் கற்பித்தலை திட்டமிடலாம். அதனைச் செயற்படுத்தலாம். எனவே இந்த நெருக்கடியானதும் பாதுகாப்பற்றதுமான கால கட்டத்தில் பாதுகாப்பாக கல்வியை வழங்கும் பாடசாலை வீட்டுப் பாடசாலை முறையை செயற்படுத்தி பிள்ளைகளையும் பிள்ளைகளின் கல்வியையும் பாதுகாக்கும் வகையில் பெற்றோரால் செயற்பட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ ஆசிரிய முறையை நடைமுறைப்படுத்துதல்

மாணவ ஆசிரிய முறையென்பது புதியதொரு அம்சம் அல்ல. நீண்ட காலமாக உலகளாவிய அளவில் இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இலங்கையில் கூட ஐரோப்பியர் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலப் பாடசாலைகளிலேயே இந்த மாணவ ஆசிரிய முறை பின்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது ஆளணிப் பற்றாக்குறை அல்லது செலவைக் குறைக்கும் நோக்கத்துக்காக இவ் மாணவ ஆசிரிய முறை பின்பற்றப்பட்டுள்ளது மாணவ ஆசிரிய முறையென்பது வயது கூடிய மாணவர்களைப் பயன்படுத்தி வயது குறைந்த மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறையாகும். இந்த மாணவ ஆசிரிய முறையை தற்போதைய சூழ்நிலையில் வீடுகளில் செயற்படுத்துவதன் மூலம் பிள்ளைகளின் கற்றலில் ஏற்பட்டுள்ள தொய்வினைக் குறைத்துக்கொள்ள முடியும். வயதில் மூத்த பிள்ளைகளைப் பயன்படுத்தி வயதில் இளைய மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும். இம் மாணவ ஆசிரிய முறையில் கற்றல் கற்பித்தலை வீடுகளில் முன்னெடுப்பதன் மூலம் கற்கின்ற மாணவர் மட்டுமன்றி கற்பிக்கின்ற மாணவரும் அறிவை இற்றைப்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இதன்மூலம் கற்றல் கலாசாரத்தையும் கற்றல் சூழலையும் வீடுகளில் கட்டியெழுப்ப முடியும்.

## நேரசூசிக்கமைய செயற்பாடுகளைத் திட்டமிடுதல்

வீட்டில் முறையான நேரசூசியை தயாரித்து அந் நேர சூசிக்கமைய பிள்ளைகள் உரிய இடத்தில் அமர்ந்திருந்து கற்க வழிப்படுத்த வேண்டும். நேர சூசியைத் தயாரிக்கும் போது நெகிழ்வுப் பாங்கானதாக தயாரிக்க வேண்டும். பிள்ளைகள் தமது அடைவுகளை தாமே சுயமாக மதிப்பீடு செய்வதற்கு அவர்களுக்கு வழிகாட்டவேண்டும். அதே நேரத்தில் பெற்றோரும் அவற்றை மீள் மதிப்பீடு மற்றும் மேற்பார்வை செய்ய வேண்டும். மாணவர்கள் தங்கள் அடைவுகள் தொடர்பாக திருப்தியடையகூடிய வகையில் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். சிறிய இலக்குகளை தீர்மானித்து அதனை வெற்றிகொள்ள வழிப்படுத்துங்கள். ஓய்வு நேரத்தின் போது மிக எளிமையான புத்தாக்க மற்றும் ஆக்கத்திறன் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள். அவர்களது அடைவுகளை அங்கீகரியுங்கள் பாராட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி முதல்வரோடு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுச் சூழலை நட்புணர்வான சூழலாக மாற்றியமைத்தல்

உளவியல் தொடர்பாக அனேகமான பெற்றோருக்குப் போதுமான அறிவு இருப்பதில்லை. தற்போதுள்ள நெருக்கீடுகளும் பாடசாலைகள் மூடப்பட்டமையும் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் நிலைமையும் தனியாட்களிடத்தில் குறிப்பாக, இளையோரிடத்தில் அவநம்பிக்கையையும் உள நெருக்கீடுகளையும் அதிகரிக்கச் செய்துள்ளது. வெளியில் சுதந்திரமாக நடமாட முடியாமை, சகபாடிகளைச் சந்திக்க முடியாமை என்பன மன அழுத்தத்தை தீவிரப்படுத்தியுள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் பெற்றோர் மிகக் கவனமாகப் பிள்ளைகளைக் கையாள வேண்டியுள்ளது. பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். பெற்றோர் என்ற நிலை கடந்து நண்பர்களைப் போன்று நடத்து கொள்ள வேண்டும். நட்புணர்வுடன் இடைவினை கொள்ள வேண்டும். பிள்ளைகளுடன் கூட்டாக விளையாட்டுகளில் ஈடுபட முடியும். அவர்களது கருத்துக்களை அமைதியாகச் செவிமடுக்க வேண்டும். அவர்களது கருத்துக்களுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

மன அழுத்தம், பதற்றம் என்பன கற்றலைப் பாதிக்கும் முக்கிய விடயங்கள் என்பதற்கும் அப்பால் அது உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கச் செய்துவிடும். மன அழுத்தமும் பதற்றமும் மனித மூளையில் கற்றலுக்கு அல்லது ஞாபகத்துக்குப் பொறுப்பான பகுதியான ஹிப்போஹம்பல் (Hippocampus) என்ற பகுதியை பாதிக்கின்றது என்றும் இதனால் எதிர்மறைச் சிந்தனைகள் மேற்கிளம்புவதுடன் பிள்ளைகளின் கற்றல் திறனும் பாதிப்படைய நேரிடுகிறது. ஹவார்ட் பல்கலைக்கழக உளவிய பேராசிரியரகள் Danial Dillon எண்பவர் மன அழுத்தத்துக்கு உட்படாதவர்கள் எப்போதும் சிறந்த ஞாபகசக்தி உடையவர்களாக இருக்கின்றனர். என்று தனது ஆய்வினூடாகக் கண்டறிந்துள்ளார். எனவே பிள்ளைகளின் உளநலத்தின் மீது பெற்றோர் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும், பிள்ளைகளிடத்தில் ஏற்பட்டிருக்கும் கற்றல் தொடர்பான பயத்தை நீக்குவதற்கான பொறுப்பு பெற்றோருடையதாகியுள்ளது. தனியாட்களிடத்தில் காணப்படும் தொடர்ச்சியான கவலை, பதற்றம் என்பன மூளையின் வளர்ச்சியையும், செயற்திறனையும் பாதிக்கச் செய்வதுடன் அது நீடித்த பின்விழைவுகளை ஏற்படுத்துகின்றது என்று ஹாலாரட் பல்கலைக் கழகத்தின் குழந்தை அபிவிருத்தி மையம் தனது ஆய்வுகள் ஊடாகக் கண்டறிந்துள்ளது. இந் நீடித்த கவலை பிள்ளைகளிடத்தில் கற்றற் நிறன்களையும் சமூக தொடர்புகளையும் பாதிக்கின்றது. எனவே இந் நெருக்கடியான சூழ்நிலையில் பிள்ளைகளை மகிழ்ச்சியாக வைத்திருக்கும் பொறுப்பும் பெற்றோருக்குரியதாகும்.

கலாநிதி சபாரட்ணம் அதிரதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்விப்பீடம்.
கொழும்புப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வீட்டுத் தோட்டங்கள் மற்றும் அதன் முக்கியத்துவம்

இலங்கை, ஒரு வெப்பமண்டல சொர்க்கம். பசுமை, ஏராளமான மழைப்பொழிவு. சாதகமான வெப்பநிலை மற்றும் பல்வேறு வகையான தாவரங்களால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. "சமையலறைத் தோட்டங்கள்" அல்லது "கூட்டுத் தோட்டங்கள்" என்றும் அழைக்கப்படும் வீட்டுத் தோட்டங்கள் பல நூற்றாண்டுகளாக இலங்கையின் வாழ்க்கைமுறையில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன. இந்தத் தோட்டங்கள் சிறிய அளவிலான தோட்டங்களாகும். அவை குடும்பங்களால் தங்கள் சொந்த வீடுகளில் பராமரிக்கப்படுகின்றன. அவை பொதுவாக தனிப்பட்ட நுகர்வுக்காக அல்லது குடும்ப வருமானத்திற்கு துணையாக வளர்க்கப்படுகின்றன.

வீட்டுத் தோட்டங்கள் இலங்கையில் பிரபலமடைந்து வருகின்றன. அவை இலங்கையின் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் இன்றியமையாத பகுதியாகும், அவற்றை விரும்புவோருக்கு பல நன்மைகளை வழங்குகின்றன. அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு மற்றும் புதிய, ஆரோக்கியமான உணவுக்கான தேவை அதிகரித்து வருவதால், வீட்டுத் தோட்டங்கள் பலருக்கு கவர்ச்சிகரமான மற்றும் நடைமுறை விருப்பமாக மாறியுள்ளன.

பழங்காலத்திலிருந்தே வீட்டுத்தோட்டம் அமைப்பதில் இலங்கை நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. வரலாற்று ரீதியாக, வீட்டுத் தோட்டக்கலை நடைமுறையானது வீடுகளுக்கு புதிய விளை பொருட்களை தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்வதற்கான ஒரு வழியாகும். இது இன்றும் உண்மையாக உள்ளது, ஏனெனில் வீட்டுத் தோட்டங்கள் குடும்பங்களுக்கு ஆரோக்கியமான மற்றும் மலிவு விலையில் உணவு ஆதாரமாக உள்ளன.

இலங்கையில் வீட்டுத்தோட்டம் என்பது வறுமையைக் குறைப்பதற்கும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் முக்கியமான உத்தியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விதைகள், நாற்றுகள் மற்றும் பிற தோட்டக்கலைப் பொருட்களை வாங்குவதற்கு மானியம் வழங்குவதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுத் தோட்டப் பயிற்சியை அரசாங்கம் ஊக்குவித்துள்ளது. மேலும், பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகம் சார்ந்த நிறுவனங்கள் வீட்டுத் தோட்டத்தின் நன்மைகளை மேம்படுத்தவும். தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கு பயிற்சி மற்றும் ஆதரவை வழங்கவும் செயல்பட்டு வருகின்றன.

## இலங்கையில் வீட்டுத் தோட்டங்களின் முக்கியத்துவம்.

வீட்டுத் தோட்டங்கள் இலங்கை மக்களுக்கு பல நன்மைகளைக் கொண்டுள்ளன. மிகவும் குறிப்பிடத்தக்க நன்மைகள் சில:

### 01. மேம்படுத்தப்பட்ட உணவு பாதுகாப்பு:

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் வீட்டுத் தோட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பாரம்பரியமாக வீட்டுத் தோட்ங்களில் வளர்க்கப்படும் பலவகையான காய்கறிகள் மற்றும் மூலிகைகள் இலங்கையின் சமையலில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்தத் தோட்டங்கள் குடும்பங்களுக்கு ஆண்டு முழுவதும் புதிய விளைபொருட்களை வழங்குகின்றன, இறக்குமதி செய்யப்படும் காய்கறிகள் மற்றும் பழங்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்கின்றன.

வீட்டுத் தோட்டங்கள் குடும்பங்களுக்கு புதிய, ஆரோக்கியமான உணவை வழங்குகின்றன, விலையுயர்ந்த, பதப்படுத்தப்பட்ட உணவுகளை நம்புவதைக் குறைக்கின்றன. சத்தான உணவை வாங்க சிரமப்படும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு இது மிகவும் முக்கியமானது. தங்கள் சொந்த காய்கறிகள், பழங்கள் மற்றும் மூலிகைகளை வளர்ப்பதன் மூலம், குடும்பங்கள் பொருளாதார நெருக்கடி அல்லது உணவு பற்றாக்குறையின் போது கூட, புதிய விளைபொருட்களின் நிலையான விநியோகத்தை உறுதி செய்ய முடியும்.

### 2. வாழ்வாதாரம்:

வீட்டுத் தோட்டங்கள் இலங்கையில் உள்ள பல குடும்பங்களுக்கு கூடுதல் வருமான ஆதாரத்தை வழங்குகின்றன. வீட்டுத் தோட்டங்களில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும் உபரிப் பொருட்களை உள்ளூர் சந்தைகளில் விற்கலாம். குடும்பங்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். கூடுதலாக, வீட்டுத் தோட்டப் பொருட்கள் இயற்கையாக இரசாயன நாசினிகள் இரசாயன உரங்களைப் பயன்படுத்தாமல் செய்யப்படுவதனால் பொதுவாக சந்தைக் காய்கறிகளை விட அதிக விலைக்கு விற்கப்படுகின்றன, இது குடும்பங்களுக்கு அதிக லாபத்தை அளிக்கிறது.

### 3. குறைக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்கம்

வீட்டுத்தோட்டம் நிலையான விவசாய நடைமுறைகளை ஊக்குவிக்கிறது, இது உணவு உற்பத்தியின் சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைக்க உதவுகிறது. வீட்டில் உணவுப் பயிர்களை வளர்ப்பதன் மூலம், குடும்பங்கள் போக்குவரத்து. பேக்கேஜிங் மற்றும் சேமிப்பு ஆகியவற்றின் தேவையைக் குறைக்கலாம். இது சுற்றுச்சூழலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும் வீட்டுத் தோட்டம் இயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கிறது. இது இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளை விட சுற்றுச்சூழலுக்கு குறைவான தீங்கு விளைவிக்கும்.

### 4. மேம்படுத்தப்பட்ட ஆரோக்கியம்

வீட்டுத் தோட்டங்கள் குடும்பங்களுக்கு புதிய, சத்தான உணவை வழங்குகின்றன, இது அவர்களின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் நல் வாழ்வையும் மேம்படுத்தும், பழங்கள் மற்றும் காய்கறிகள் நிறைந்த உணவை உட் கொள்வது இதய நோய், பக்கவாதம் மற்றும் புற்று நோய் போன்ற நாட்பட்ட நோய்களின் அபாயத்தைக் குறைப்பது உட்பட பல ஆரோக்கிய நன்மைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, வீட்டுத் தோட்டம் உடல் செயல்பாடுகளுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது, இது மேம்பட்ட ஆரோக்கியத்திற்கும் பங்களிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5. பொருளாதார பலன்கள்

வீட்டுத்தோட்டம் குடும்பங்களுக்கு வருமான ஆதாரத்தை வழங்க முடியும், குறிப்பாக அவர்கள் விற்க வேண்டிய உபரி விளைபொருட்கள் இருந்தால். இது வறுமையைக் குறைக்கவும், சமூகங்களின் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்தவும் உதவும். கூடுதலாக, வீட்டுத் தோட்டம், சந்தையில் இருந்து வாங்குவதை விட மலிவான உணவை வழங்குவதன் மூலம் வீட்டுச் செலவுகளைக் குறைக்க உதவும்.

### 6. பல்லுயிர் பாதுகாப்பு

இலங்கையில் பல்லுயிர் பாதுகாப்பிற்கு வீட்டுத் தோட்டங்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றன. இந்த தோட்டங்கள் பொதுவாக வேறுபட்டவை. மற்றும் பழ மரங்கள், மருத்துவ தாவரங்கள் மற்றும் காய்கறிகள் உட்பட பல்வேறு தாவரங்களை உள்ளடக்கியது. இந்த பன்முகத்தன்மை இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தாவர இனங்களைப் பாதுகாக்க உதவுகிறது. இது நாட்டின் வளமான பல்லுயிர் பெருக்கத்திற்கு பங்களிக்கிறது. வர்த்தக நோக்கிலான விவசாயம் பல மேம்படுத்தப்பட்ட விதைகளை அறிமுகப்படுத்திய பொழுதிலும் அவை மீள விதைத்து மீள பயன்படுத்த முடியாமல் இருப்பது விதை இறையாண்மையில் இருந்து விவசாயியை அப்புறப்படுத்துகின்றது .இவ்வாறான சூழ்நிலையில் வீட்டுத் தோட்டங்கள் பாரம்பரிய விதைகளை பாதுகாக்க மிகப்பெரிய பங்களிப்பு செய்கின்றன

### 7. கலாசார பாரம்பரிய முக்கியத்துவம்

வீட்டுத்தோட்டங்கள் இலங்கை கலாசாரத்தின் இன்றியமையாத பகுதியாகும். அவர்கள் பல நூற்றாண்டுகளாக இலங்கை குடும்பங்களில் அங்கம் வகித்து பெருமை மற்றும் கலாசார அடையாளமாக உள்ளனர். வீட்டுத் தோட்ட விதைகள் மரக்கன்றுகள் திருமணங்கள் மற்றும் இறுதிச் சடங்குகள் போன்ற பாரம்பரிய விழாக்களிலும் வழங்கப்படுகின்றன. இலங்கை வாழ் மக்களின் விழாக்கள் கொண்டாட்டங்கள் பெரும்பாலனவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்துடனும் அவர்களது வீட்டுத் தோட்டத்துடனும் பின்னிப்பிணைந்துள்ளன. உதாரணம் தைப்பொங்கல் தைப்பூசம் ஆடிபிறப்பு.

வீட்டுத்தோட்டம் என்பது இலங்கையின் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். மேலும் இது பெரும்பாலும் தலை முறையிலிருந்து தலை முறைக்கு அனுப்பப்படுகிறது. பாரம்பரிய அறிவு மற்றும் நடைமுறைகளைப் பாதுகாப்பதன் மூலம், வீட்டுத்தோட்டம் சமூகங்களின் கலாசார அடையாளத்தைப் பராமரிக்க உதவுகிறது.

## இலங்கையில் வீட்டுத் தோட்டங்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

வீட்டுத் தோட்டம் பல நன்மைகளைக் கொண்டிருக்கும் அதே வேளையில் சில சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கையில் வீட்டுத்தோட்டத்தை எதிர்கொள்ளும் சில முக்கிய சவால்கள் பின்வருமாறு:

### 1. நிலத்திற்கான அணுகல் இல்லாமை

இலங்கையில் பலருக்கு வீட்டுத்தோட்டம் அமைக்க நிலம் இல்லை. நிலம் பற்றாக்குறை மற்றும் விலையுயர்ந்த நகர்ப்புறங்களில் வசிப்பவர்களுக்கு இது குறிப்பாக சவாலாக இருக்கலாம்.

### 2. அறிவு மற்றும் திறன்கள் இல்லாமை

வீட்டுத்தோட்டத்திற்கு அறிவும் திறமையும் தேவை, அது அனைவருக்கும். எளிதில் கிடைக்காது. தோட்டக்கலைக்கு புதியவர்கள் அல்லது பயிற்சி அல்லது ஆதரவை அணுகாதவர்களுக்கு இது குறிப்பாக சவாலாக இருக்கலாம்.

### 3. பருவநிலை மாற்றம்

காலநிலை மாற்றம் கணிக்க முடியாத மழைப்பொழிவு முறைகள் மற்றும் வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற தீவிர வானிலை நிகழ்வுகளின் எண்ணிக்கையை அதிகரித்தது. இது வீட்டுத் தோட்டங்களின் உற்பத்தித்திறனை எதிர்மறையாகப் பாதித்துள்ளது. இதனால் குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பு மற்றும் வருமானம் ஈட்டுவதற்கு அவற்றைச் சார்ந்திருப்பதை கடினமாக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி முதல்வரோடு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக நோக்கில் ஆன விவசாயம் தற்பொழுது காலநிலைக்கு சீரமைவான விவசாயமாக மாற்றப்படுகிறது. கால நிலைக்கு சீரமைவான பல்வேறு தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அதேபோன்று வீட்டுத் தோட்டங்களிலும் காலநிலைக்கு சீரமைவான தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

4. வனவிலங்குகள்

இலங்கையில் யானை, மயில், முள்ளம்பன்றி, அணில் போன்ற விலங்குகளின் அட்டகாசம் சமீபத்திய காலங்களில் அதிகரித்துள்ளது . தரவுகளின் படி விவசாய உற்பத்தியில் 30 தொடக்கம் 40 வீதம் வனவிலங்குகளால் அழிவடைவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கம் வன விலங்குகளைக் கட்டுப்படுத்த சரியான முடிவுகளை எடுக்காத பட்சத்தில் இலங்கையில் விவசாயம் மற்றும் வீட்டுத் தோட்டம் சாத்தியமற்றதாக போக சந்தர்ப்பம் உள்ளது.

## முடிவுரை

இலங்கையின் பொருளாதாரம், சூழல் மற்றும் சமூக வாழ்வில் வீட்டுத்தோட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை உணவுப் பாதுகாப்பு. பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்கின்றன. காலநிலை மாற்றம் இலங்கையில் விவசாயத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மாறிவரும் மழைப்பொழிவு முறை மற்றும் வெப்பநிலை பயிர் விளைச்சலைப் பாதிக்கிறது. இது வீட்டுத்தோட்டத்தை மிகவும் சவாலானதாக மாற்றலாம். கால நிலைக்கு சீரமைவான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் வீட்டுத்தோட்ட விவசாயிகளுக்கும் உள்ளன.

மகேஸ்வரன் ரஜிதன் (BSc Agri, MSc Agri)
நிறுவனர் & இயக்குனர்,
விரிவுரையாளர், வேளாண் ஆலோசகர், வேளாண் பொறியியலாளர்.
இந்திரா குழுமம்.
94777906383.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகளும், அணுகுவதற்கான வழிமுறைகளும்

இன்றைய சிக்கலான சமூகத்தில் பிள்ளைகள் எப்போதும் அச்சுறுத்தலான நிலைக்கு ஆளாவதுடன், பிள்ளைகளின் இயல்பு வாழ்க்கை பெரும் சவால்கள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. இந்த சவால்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையினால் உரிமைகள் சமவாயம் பிரகடனப்படுத்தப்பட்டது. சிறுவர் உரிமைகள் சமவாயம் ஐக்கிய நாடுகள் சிறுவர் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டது. சிறுவர் உரிமைகள் சமவாயம் 1989ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. இலங்கையானது 1990ம் ஆண்டு ஏற்றுக்கொண்டு 1991ஆம் ஆண்டு கையொப்பமிட்டு உறுதிப்படுத்திக் கொண்டது. இச்சமவாயம் 54 உறுப்புரைகளைக் கொண்டுள்ளது. 1 - 41 வரையான உறுப்புரைகள் சிறுவர்களின் உரிமைகள் பற்றியும், 42 - 54வரையான உறுப்புரைகள் சமவாயத்தை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல். அறிக்கையிடுதலைப் பற்றியும் கூறுகின்றது. பாதுகாப்பு. பங்களிப்பு. மேம்பாடு. உயிர்வாழ்தல் போன்ற 04 பிரதான கொள்கைகளை இந்த சமவாயம் கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் வரைவிலக்கணத்தின்படி 18வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர்களாகும். இவர்கள் பெற்றோரில், பாதுகாவலரில் தங்கி வாழ்கின்றனர். தனித்து முடிவெடுக்கத் தெரியாதவர்களாவும் இலகுவில் பாதிப்படையக் கூடியவர்களாவும் காணப்படுகின்றனர். அடிப்படையிலேயே பிள்ளைகளுக்குள்ள சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக அரசானது பல்வேறு வேலைத்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.

அந்தவகையில் பின்வரும் கட்டமைப்பில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகின்றது.

மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகசேவைகள் அமைச்சு

- நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் (Probation and Child Care Services)
- சிறுவர் செயலகம் (Children Secretariat)
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ( National Child Protection /Authority)
- பெண்கள் பணியகம் (Women's Bureau)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திணைக்களகங்களின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

01. நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் (PCCS)
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள்
Child Rights Promotion Officers (CRPO)

02. சிறுவர் செயலகம்
முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
Early Childhood Development Officers (ECDO)

03. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA)
சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்
Child Protection Officers (CPO)

04. பெண்கள் பணியகம்
பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உளவளத்துணை உத்தியோகத்தர்கள்
Women Development Officers (WDO), Counselors

மாவட்டச்செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் சிறுவர் பெண்கள் பிரிவு (Women and Child Unit) ஸ்தாபிக்கப்பட்டு மேற்படி உத்தியோகத்தர்கள் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். சிறுவர்கள் மற்றும் பாதிப்புக்குள்ளான பெண்களின் பிரச்சினைகளைக் கையாளுதல் மற்றும் அவர்களது மேம்பாடு தொடர்பில் இப்பிரிவைச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களும் இணைந்தே தீர்மானங்களை முன்னெடுப்பர்.

சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் செயற்பணி

ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சமவாயத்தின்படி சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் உயரியநலன் கருதிய செயற்பாட்டினை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுவருகின்றனர். அதனடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. சிறுவர் கழகங்கள் (Children clubs)

சிறுவர்களின் பங்கேற்பு உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் கிராம மட்டங்களில் உருவாக்கப்பட்டு அவர்களை வலுப்படுத்துவதற்காக இயங்கிவருவதே சிறுவர்கழகங்கள் (Children Clubs) ஆகும்.
இக்கழகங்களில் 6-18 வயது வரையான சிறுவர்கள் அங்கத்துவம் பெறுகின்றனர். சிறுவர்களது திறன்களை வெளிக்கொணர்தல், கூட்டுணர்வு மனப்பாங்கை வளர்த்தல், பிறழ்வு நடத்தைகள் மற்றும் துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களை பாதுகாத்தல், நாட்டிற்கு நற்பிரஜைகளை உருவாக்குதல் இதன் நோக்கமாகும். இக்கட்டமைப்பானது பிரதேச சிறுவர்சபை, மாவட்ட சிறுவர்சபை, தேசிய சிறுவர்சபை என விரிவடைந்து காணப்படுகின்றது.

## 2. சிறுவர் அபிவிருத்திக்குழு (Child Development committee)

அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலையிலுள்ள சிறுவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றினைத் தீர்ப்பதற்காக உருவாக்கி நடை முறைப் படுத்தப் பட்டுவரும் மிகப்பெரிய கட்டமைப்பே சிறுவர் அபிவிருத்திக் குழுக்களாகும்.

சிறுவர் அபிவிருத்திக்குழு கட்டமைப்பானது பின்வரும் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது.

| கிராமமட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு (villageChild Development Commitee) VCDC | பிரதேச சிறுவர் அபிவிருத்திக் குழு (Divisional child Development Commitee DCDC | மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு (District Child Development Commitee) DCCD |
|---|---|---|
| கிராம அலுவலர் (தலைமை) | பிரதேச செயலாளர் (தலைமை) | மாவட்டச் செயலாளர் (தலைமை) |
| பாடசாலை அதிபர்கள் | கோட்டக்கல்வி அதிகாரி | வலயக்கல்வி பணிப்பாளர். |
| குடும்ப நல ஊத்தியோகத்தர்கள் பொது சுகாதார பரிசோதகர்கள். | சுகாதார வைத்திய அதிகாரி | பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர். |
| பிரிவு பொலிஸ் அதிகாரி | பொலிஸ் பொறுப்பதிகாரி (OIC) | சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர் பொலிஸ்மா அதிபர் (SSP.DIG) |
| முன்பள்ளி ஆசிரியர்கள் | முன்பள்ளி இணைப்பாளர் | உதவிக் கல்வி பணிப்பாளர் |
| அரசார்பற்ற நிறுவனங்கள் | அரசார்பற்ற நிறுவனங்கள் | அரசார்பற்ற நிறுவனங்கள் |
| பொருளாதார அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அலுவலர், மதகுருமார்கள். | சமூகசேவை உத், கிராம அபிவிருத்தி உத், கலாசார உத், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக உத், விளையாட்டு உத், | மாவட்ட சமூகசேவை உத், கிராம அபிவிருத்தி உத், கலாசார உத், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக உத், விளையாட்டு உத், |
| தனியார்கல்வி நிலைய பிரதிநிதி | பிரதேச மட்டத்தில் தனியார்க் கல்வி நிலைய பிரதிநிதி ஒருவர். | தனியார் கல்வி நிலைய ஒன்றியத் தலைவர். |
| மதுவரி திணைக்கள அலுவலர் | மதுவரி திணைக்கள அலுவலர் | மதுவரி திணைக்கள பணிப்பாளர் |
| தொழில்துறை திணைக்கள அலுவலர் | தொழில்துறை திணைக்கள அலுவலர் | தொழில்துறை திணைக்கள பொறுப்பதிகாரி |
| | | தொழிற்பயிற்சி அதிகார சபை, சட்ட உதவி ஆணைக்குழு, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.வழங்கப்படும் உதவித்திட்டங்கள் (Aid Programmes)

மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள சிறுவர்களை இனங்கண்டு பின்வரும் உதவித்திட்டங்கள் வழங்கப்படும்.

- கல்விக்கான கொடுப்பனவு மற்றும் பாடசாலை உபகரணங்கள்.
- மருத்துவ கொடுப்பனவு
- போசாக்கு கொடுப்பனவு
- இரட்டைக் குழந்தைகளுக்கான கொடுப்பனவு
- திடீர் அனர்த்தக் கொடுப்பனவு

### 4. விழிப்புணர்வு நிகழ்வுகள் (Awareness programmes)

சிறுவர்களது பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டினைக் கவனத்திற்கொண்டு பின்வரும் தலைப்புகளின் கீழ் பெற்றோர். சிறுவர்கள், ஆசிரியர்கள். அமைப்புகள். பொது மக்களுக்கான விழிப்பணர்வு நிகழ்வுகள் மேற் கொள்ளப்படும்.

- சிறுவர் உரிமைகள் சமவாயம் மற்றும் சிறுவர்களுக்கான கடமைகள்
- சிறுவர் பாதுகாப்பு
- சிறுவர் துஷ்பிரயோகம்
- மகிழ்ச்சியான குடும்பம்
- நவீன தொழில்நுட்ப சாதனங்களின் சரியான பயன்பாடு
- சிறந்த பெற்றோராயிருத்தல்.
- நன்னடத்தைகள்
- சிறுவர்மைய திடீர் அனர்த்த பாதுகாப்பு

### 5. பராமரிப்புத் திட்டங்கள் (Care plan)

பின்தங்கிய பொருளாதார நிலை காரணமாக மிகவும் அச்சுறுத்தலுக்குள்ளான அதாவது வரவொழுங்கின்மை மற்றும் பாடசாலைக் கல்வியை தொடர்ந்து பெற முடியாமல் இடை விலகியுள்ள சிறுவர்களை இனங்கண்டு அவர்களின் நலன் கருதி குடும்பத்திற்கான தொழில், பெற்றுக் கொடுத்தல், பாடசாலையின் தூரத்தினைக் கருத்திற்கொண்டு துவிச்சக்கர வண்டி மற்றும் பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், மேலும் சிறுவர்களின் பாதுகாப்பு கருதி மலசலகூடம், வீட்டுக்கான கதவு, ஜன்னல் என்பனவும் இத்திட்டம் மூலம் பெற்றுக்கொடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மாதிரிக்கிராம நிகழ்ச்சித்திட்டங்கள்,
(Modal Village Programme)

7. சிறுவர்மைய ஆய்வுகள் (Child led Research)

8. சிறுவர் இல்ல மேற்பார்வை நடவடிக்கைகள்
(Children Home Monitoring)

9. சட்டச் சிக்கலுக்குள்ளான சிறுவர்களின் பாதுகாப்பு
(Protection of Facing Legal Problems)

10. சம்பவ மாநாடுகள் (Case Conference)

பிரச்சினைக்குட்பட்ட சிறுவர்களுக்கு சரியான தீர்வை பெற்றுக் கொள்ளும் வகையில் துறைசார் உத்தியோகத்தர்கள் இணைந்து குடும்ப கலந்துரையாடல் மற்றும் சம்பவ மாநாடுகளை நடாத்தி உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல், மேலதிக நடவடிக்கைக்காக துறைசார் உத்தியோகத்தர்களிடம் முன்னளித்தல். சிறுவர் உரிமைகள் சமவாயத்தின்படி மேற்படி வேலைத்திட்டங்கள் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருமதி. விஜோஸ்வரி ஆறுமுகம்.
மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்.
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

"படிக்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே மேல்" என்றார். பேரறிஞர் பிளேட்டோ. "கால் வயிற்றுக் கஞ்சியிலார் இதன் காரணம் இன்னதென்று அறிவுமிலார்" என்றார் பாரதி. "காலுக்கு செருப்புமில்லை, கால் வயிற்றுக் கூழுமில்லை, பாருக்கு உழைத்தோமடா தோழா, பசையற்றுப்போனோமடா",என்றார் பெரியார் ஜீவானந்தம் " இளமையில் கல்வி சிலையில் எழுத்து " "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்கிறது பழமொழி கைப் பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி" என்கிறது.கொன்றைவேந்தன்.

"கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்கிறார் ஔவையார். "கற்கை நன்றே" கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிறது குறுந்தொகை. "வெள்ளத்தால் போகாது வெந்தழலால் வேகாது வேந்தராலும் கொள்ளத்தான் இயலாது கொடுத்தாலும் நிறைவின்றி குறையாது." என்கின்றது விவேக சிந்தாமணி. "அரும்பரிசு பிள்ளைக்குஆயிரம் ஈதல் எனினும் பெரும் பரிசு கல்வி என பேசு" என்கின்றது. "மன்னரும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின் மன்னரில் மாசறக் கற்றோன் சிறப்புடையோன்" "மன்னருக்கு தன் தேசமல்லால் சிறப்பில்லை, கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு".எல்லா நலனும் ஈய்ந்திடும் கல்வி இல்லா வீடு இருண்ட வீடென்பர் படிப்பில்லார் நிறைந்த குடித்தனம், நிறைவில் துடிப்பில்லார். நிறைந்த சுடுகாடென்பார். "பெற்றபிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கை விடாது" என்கிறார் மகாத்மா காந்தி. "அறிவே கல்வியாம் அறிவிலார் குடும்பம் நெறி காணாது நின்றபடி விழுமாம்"

என்றவாறெல்லாம் சிறப்புப் பெறும் கல்வி மனித வாழ்விற்கு மகத்தானதொன்றே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் கல்வி கற்க வேண்டும்

சிறு வயதிலேயே கிடைக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி மாணவர்கள் படிக்கவில்லையெனில் காலம் முழுவதும் உடல் உழைப்பை மட்டுமே நம்பி மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்து போவதைத் தவிர வேறு வழியில்லை.

பணக்காரரின் மாளிகையில் பிறக்கின்ற குழந்தைகளின் கால்களைக் கூட தாங்குவதற்கு தோள்கள் காத்திருக்கும் ஆனால் ஏழைகளின் குடிசையிலே பிறக்கின்ற குழந்தைகளின் தோள்களுக்கு சுமைகள் காத்திருக்கும். பணக்கார வீட்டிலே பிள்ளைகள் வளர்ந்து பிறக்கின்றார்கள். ஏழைகளின் குடிசையிலே பிள்ளைகள் பிறந்து வளர்கின்றார்கள். வளர்ந்து பிறப்பது வாரிசு உரிமை. பிறந்து வளர்வதே பிறப்பின் பெருமை எனவே தான் கற்க வேண்டும்.

பணக்கார பிள்ளைகள் பணத்தால் பிறரை ஆளும் போது, ஏழைப்பிள்ளைகள் கல்வியால் மட்டுமே பிறரை (உலகை )ஆழ முடியும் எனவே தான் கற்க வேண்டும்.

"கற்கை நன்றே ! கற்கை நன்றே !
பிச்சை புகினும் கற்கை நன்றே!"

"நன்றி"

திருமதி.சுமிதா விக்டர்
(பெற்றோர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளிப் பயணம்

உலகின் முதல் மனித விண்கலம் வோஸ்டாக் -01 ஆகும் . இது கூம்பு வடிவம் கொண்டது. இதில் ஒருவர் மட்டுமே பயணம் செய்ய முடியும். இதை முதன் முதலில் தயாரித்தது ரஷிய நாடாகும். முதன் முதன்லில் விண்வெளிக்குச் சென்ற வீரர் யூரிககாரின் (Yarigagarin) ஆவார். இவர் ரஷிய நாட்டைச் சேர்ந்தவர் ஆவார். விண்வெளியில் வாழ முடியும் என்பதை நிரூபித்தார். இதனால் இவரை Numbeone வீரர் என அழைக்கப்படுகின்றார். ஏப்ரல் 12.1961இல் வோஸ்டாக் 01 விண்கலம் மூலம் விண்வெளிக்குச் சென்று பூமியை ஒரு சுற்று சுற்றி 27400Km வேகத்தில் பூமியைச் சுற்றி வெற்றிகரமாக பயணத்தை முடித்துக் கொண்டார். உலகில் முதன் முதலில் விண்வெளிக்குச் சென்ற பெண்வீரர் வாலண்டீனா தெரஸ்கோவா ஆவார். இவர் விண்வெளிக்குச் சென்று பல ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டுள்ளார். விண்வெளிப் பயணத்தை மேற்கொண்ட 12 வது வீரராவார். அதே சமயத்தில் ரஷியாவின் 6வது வீரர் ஆவார்.

உலகில் முதன்முதலில் ஒரு பெண்ணை விண்வெளிக்கு அனுப்பிய நாடாகவும் ரஷியா புகழ்பெற்றுள்ளது. வாலண்டீனா ஜூன் 16,1963 இல் வெற்றி பெற்று உலகத்திற்கு சாதனைப் படைத்துள்ளார். இதுவரை காலமும் விண்வெளியில் பயணம் செய்து பல ஆராய்ச்சிகளின் பின் மனிதர்கள் சந்திரனையும் ஆய்வு செய்ய மனிதர்களின் ஆய்வு சந்திர மண்டலத்திலும் தொடர்ந்து முதன்முதலில் சந்திரனில் காலடி வைத்தவர். நீல் ஆம்ஸ்ராங் ஆவார்.

இவர் அமெரிக்காவை சேர்ந்தவர். இவர் சந்திரனில் தனது இடது காலை வைத்தவர். இதனால் வேறு பூமியில்லாத நிலப்பகுதியில் முதன்முதலில் காலைப்பதித்து வரலாற்றில் அழியா சாதனை படைத்தவர். That's one small of a man ,one giant leap for mankind பொன் மொழியாகும்.

தொலைநோக்கியை வானியலுக்காக முதன்முதலில் பயன்படுத்தியவர் கலிலியோகலிலி ஆவார். இவரின் கண்டுப்படிப்புகளின் பின் பல உண்மைகளை வெளிக்கொண்டு வந்தார். “பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது” என்பார்கள் அது ஏன் கண்ணால் காணக்கூடிய 5 கிரகங்களில் புதனை அவ்வளவு எளிதாகக் காண முடியாது. சூரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயத்திலிருந்து அல்லது அதற்கு முன்போ அல்லது அல்லது அதன் பின்னரோ காண முடியும். வருடத்தின் ஒரு சில நாட்கள் மட்டுமே காண முடியும். புவியின் நகர்வின் அடிப்படையில் காலம் நேரங்களை நம்மால் கணித்துக்கொள்ளமுடியும். நேரம் என்பது இலவசமானது. தொட்டுப் பார்க்க முடிவதில்லை. இதனால் தான் அதைக் கண்டு கொள்வதில்லை.

ஒவ்வொரு நாளும் 1440 நிமிடங்கள் 86400 செக்கன்கள் உங்களுக்கும் இறைவன் வழங்கியுள்ளான். இதை அடுத்த நாளுக்காக சேமித்து வைக்க முடியாது. ஆனால் செலவு செய்ய முடியும். ஒரு நாள் உங்களிடம் உள்ள பணம்,பொருள்,செல்வம் எல்லாம் உங்களிடமிருந்து இழக்கப்படலாம். ஆனால் அவற்றைத் திரும்பிப் பெற்றுக் கொள்ளலாம் நேரத்தை விலை கொடுத்து வாங்கக் கூடிய பணக்காரர்கள் உலகில் இன்னும் பிறக்கவில்லை. நாம் நேரத்தை கடிகாரத்தில் பார்க்கின்றோம்.

ஆனால் ஜப்பானியர்களும்,ஐரோப்பியர்களும் நேரத்தை நிமிடத்தோடு செக்கனையும் பார்க்கின்றார்கள். 155 வினாடிகள் மாத்திரம் ஓடி 199 மில்லியன் டொலர் சம்பாதித்த உசேன் வோல்ட்டுக்குத் தெரியும் நேரத்தின் அருமை. உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள். 90% மேற்பட்ட மனிதர்கள் தமது இலக்கை அடையாமைக்கான காரணம்? நேரத்தைப் பயன்படுத்தத் தெரியாதவர்கள் என்று பல வித்துவான்கள் கூறியுள்ளார்கள். "காலையில் விழித்தெழும் போது கடிகாரத்தைப்பார் ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை" என்றார் விவேகானந்தர். "நம்மிடம் அதிக நேரம் இருப்பதாக நினைப்பது தான் தவறு என்றார் புத்தர். "உங்களுக்கு வழங்கப்பட்ட கால நேரத்தில் இறைவனின் நன்கொடைகள் இருக்கின்றன. அதை தேடி எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் முகமட் -நேரம் உங்களுக்காக கொடுக்கப்பட்ட மிகப்பெரிய செல்வம் உங்கள் நேரம் உங்களுக்கே அதை செலவு செய்யும் உரிமையும் உங்களுக்கே ஆகும் திட்டமிட்டு செய்யுங்கள் நாளை நாளை என்று செயல்களை தள்ளிப்போடாதே அதுவே உன் வாழ்க்கையை தள்ளிப்போடும் . உன் இலக்குகளை அடைவதற்காக நேரத்தை செலவு செய்யுங்கள். வாழ்க்கை என்ற கடிகாரத்திற்கு ஒருமுறைதான் சாவி வழங்கப்படும். நீ பிறந்தவுடன் உனது நேரம் ஆரம்பமாகிவிடும் நிகழ்காலமே உன் சிறப்பான காலம். அழகாக பயண்படுத்து, நீ வெற்றி பெறுவாயாக நேரம் கடவுள் தந்த அருங்கொடையாகும் விரயமாணால் மீண்டும் கிடைக்காது...

ம. பரிதிநிதி
தரம் 09A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தையான மனித உடல்

✱ ஒரு தலைமுறை 33 ஆண்டுகளைக் கொணடது.

✱ மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.

✱ உடலின் நரம்புகள் 72m நீளம் உடையது

✱ ஒரு நாளில் இரத்தம் 30km. தூரம் பயணம் செய்யும்

✱ நுரையீரல் ஒரு நாளில் 23040 முறை சுவாசத்தை உள்ளெடுத்து வெளிவிடுகின்றது.

✱ இதயம் ஒருநாளில் 103689 தடவைகள் துடிக்கும்

✱ மனித நாக்கில் உள்ள சுவையறியும் கலங்களின் எண்ணிக்கை 3000 ஆகும்.

✱ உடலில் உள்ள மின்சாரத்தினை உற்பத்தி செய்ய தேவையான அழுத்தம் 25V ஆகும்

✱ சராசரி மனித இரத்தத்தின் அளவு 5l ஆகும்.

✱ மனித உடலில் தசை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு ஆகும்.

✱ கண்தானத்தில் விழி வெண்படலம் மட்டும் அடுத்தவருக்குப் பொருத்தப்படும்.

✱ மனித உடலில் பலமான பகுதி நகம் ஆகும்.

✱ மனித உடலில் எடையில் 14% எலும்புகளும் 7% இரத்தமும் காணப்படும்

✱ நுரையீரலில் 30,000 மில்லியன் இரத்த நாளங்கள் உள்ளன..

✱ உடலில் உள்ள இரத்த குழாய்களின் நீளம் 600,000 மைல்கள் ஆகும்.

✱ மனித மூளையில் சுமார் 100 மில்லியன் நரம்புக் கலங்கள் காணப்படுகின்றன.

✱ மனித மூளை 80% நீரால் ஆனது.

✱ மூளையின் செயற்திறன் பகலை விட இரவில் அதிகமாகும்.

✱ கைரேகை போலவே நாக்கின் வரிகளும் வேறுபடும்.

மாணவன் :- விஜயகுமார் தர்மிலன்
தரம் 10A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் காணும் விஞ்ஞான விளக்கங்கள்

01) இரவு நேரங்களில் மரங்களின் கீழ் படுப்பது ஏன் ஆபத்து?

இரவில் ஒளித் தொகுப்பு நிகழ்வதில்லை. சுவாசம் மட்டுமே நிகழ்கின்றது. சுவாசத்தின் பொழுது காபனீ ரொட்சைட்டு வெளிவிடப் படுகின்றது. ஒளித்தொகுப்பு நடைபெறாததால் அடர்த்தி கூடிய காபனீரொட்சைட்டின் செறிவு மரங்களின் கீழ் அதிகளவில் காணப்படும்.

இரவில் புளிய மரத்தின் கீழ் படுத்தால் பேய் பிடிக்கும் என்று இன்றும் அச்சமூட்டி வருகின்றனர்.

2.) தாவரங்களின் பச்சையிலைகளில் விழும் சூரிய ஒளியின் செறிவு அதிகரித்துக் கொண்டு போனாலும் ஒளித்தொகுப்பு வீதம் ஒரு எல்லைக்கு மேல் ஏன் அதிகரிப்பதில்லை?

ஒளித்தொகுப்பு நிகழ்வதற்கு ஒளிமட்டும் ஒரு காரணியல்ல காபனீரொட்சைட்டு ஒரு எல்லைப் படுத்தும் காரணியாகக் இருப்பதால் ஒளித்தொகுப்பு வீதம் ஒரு எல்லைக்கு மேல் அதிகரிப்பதில்லை.

3) சூரிய ஒளியிலிருந்து உதிரும் இலைகள் மஞ்சள் நிறமாகக் காணப்படுவதேன்?

இலைகளின் பச்சையத்தில் குளோரபில் A. குளோரபில் B காற்றின், சாந்தோபிள் உண்டு.

குளொரபில் AAம் ,BAம் குறுகிய வாழ்நாள் உடையவை. அவை மறைய அவற்றால் மறைக்கப்பட்டிருந்த காற்றின் ,சந்தோபில் ஆகியவை தமது நிறத்தை வெளிகாட்டுகின்றன.

4) ஒரு மனிதன் ஓடும் போது அவனின் இதயம் அவன் நடக்கும் போது அடிக்கும் வீதத்திலும் பார்க்க கூடிய வீதத்துடன் அடிக்கின்றது ஏன்?

ஓடும் போது இழையங்களுக்குத் தொடர்ச்சியாகச் சக்தி விநியோகம் தேவை. இதனால் கூடியளவு குருதி இழையங்களுக்குப் பாய்ச்சப்படுகின்றது. குருதியினூடாகக் கூடியளவு உணவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்சிசனும் கொண்டு செல்லப்படுகின்றன. அதனால் சுவாச விகிதம் கூடி, அதிகளவு சக்தி பிறப்பிக்கப்படும்.
சுவாச விகிதம் அதிகரிக்கும் பொழுது சுற்றோட்டம் அதிகரிக்க இதயத்துடிப்பும் அதிகரிக்கும்.

5) ஈரல் நோயினால் பிடிக்கப்பட்டவர்கள் ஏன் கொழுப்புணவைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்?
ஈரல் பித்தத்தைச் சுரக்கின்றது. பித்தம் கொழுப்பின் சமிபாட்டைத் தூண்டும். ஈரல் பாதிக்கப்பட்டால் பித்தம் சுரப்பது குறைவடையும் இதனால் கொழுப்பின் சமிபாடு பாதிக்கப்படும்.

6) ஒரு பசுவின் சதையக்கணை, சதையச்சாறு குடலை அடையா வண்ணம் கட்டிய பொழுது இப் பசு சுகயீனமடையக் கூடும், ஆனாலும் ஏன் அதற்கு நீரிழிவு உண்டாகாது.
சிறு நீரில் வெல்லத்தின் அளவு அதிகரிக்கும் பொழுது நீரிழிவு நோய் உண்டாகும்.
குருதியில் வெல்ல அளவை இன்சுலின் சீராக்குகின்றது.
சதையத்தில் உள்ள இலங்ககான்சுக் சிறு தீவு என்னும் கானில் சுரப்பியினால் சுரக்கப்படும். ஒரு ஓமோன். எனவே சதையச் சுரப்பியின் கானைக் கட்டிய போதும் இன்சுலின் சுரப்பு குருதியின் மூலம் அனுப்பப்டுகின்றது.

விக்டர் கலையன்பன்
தரம் 10A






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# One Line Thoughts of the Day

Every Moment is a fresh beginning
Whatever You do, do it well
Take one step at a time
Say yes to your dreams
You must be the change you wish to see in the world.
If you can't do great things, do small things in a great way
Aim for the moon If you miss you may hit a star
Apprise education reprise innovation
Success is the sum of small efforts, repeated day in and out
Never let your fear decide what your future will be
Never wait for tomorrow if you can do today.
Celebrate the small things
Love your self frist and every thing else falls into place.
Problems are not stop signs, they are guidelines.
Lost time is never found again.
Confusion is the biggest enemy of good thinking.
Die with memories ,not dreams.

**I think I Can.**
**I know I Can**



P.Kinthusha
09 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

முயற்சி செய்தால் நாம் எதையும்
வெற்றி கொள்ள முடியும்.
முயற்சி என்பது விதை போல் அதை
விதைத்துக் கொண்டே இரு
முளைத்தால் மரம்
இல்லையென்றால் அது மண்ணுக்கு உரம்

முயற்சியே செய்யாதவன் தோல்வியை
மட்டும் சந்திக்கிறான் முயற்சியில்
தோற்றவன் வெற்றியை சந்திக்கிறான்.
மழை வருவது விதி; ஆனால்
குடை பிடிப்பது முயற்சி அது உன்
கையில் தான் இருக்கிறது.

விடியும் என்று காத்திருக்காதே. முடியும்
என்று முயற்சி செய், வெற்றி உனதே
முயற்சி செய்ய சிறு நொடி கூட தயங்காதே
முயற்சி செய்யும் போது தடைகளும்
உன்னைத் தலை வணங்கும்
நீ வெற்றி பெறுவாய்.

முடியும் வரை முயற்சி செய் உன்னால்
முடியும் வரை அல்ல நீ
நினைத்ததை முடிக்கும் வரை
எல்லாம் தெரியும் என்பவர்களை விட
என்னால் முடியும் என்பவர்களே
வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றனர்.

முயற்சிக்கு எல்லை இருக்கக் கூடாது
முன்னேறும் வரை முயற்சியை இழக்கக்கூடாது
எட்டிப் போனாலும் தொடலாம்.
பட்டுப் போனாலும் நடலாம்
தட்டிப் போனாலும் எழலாம்
முயற்சி இருந்தால்

தரம் -11
பி. கனிகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய தோழியே!

முதலில் நான் அனைவருக்கும்
அறிமுகமாகும் போது
அப்பாவியான முகத்துடன்
அமைதியாய் நின்றிருந்தாய்
அப்போது உனக்கு என்னைத் தெரியாது
எனக்கும் உன்னைத் தெரியாது.

வகுப்பறையில் தொடங்கியது
நம் அறிமுகப் படலம்
வழித்துணையாய் வாழ்நாள்
முழுவதும் தொடர்வது நம் நட்பு.

பேருந்து பிடிப்பதிலும்
இறக்கத்தில் மணி அடிப்பதிலும் பயம்!
எதிர்த்து கேள்வி கேட்பதிலும் பயம்!
கேள்விக்கு பதில் அளிப்பதிலும் பயம்!
பார்வைக்கு என்னைவிட நீ குள்ளம்
ஆனால் உண்மையில் உன்னைவிட
நான் குள்ளம்!

ஒட்டி உரசியபடி
ஒன்றாய் நடப்பாய்
நான் "ஓம்" என்று கூறும் வரை
ஓராயிரம் முறை அழைப்பாய்
ஒரு நிமிடம் பேசவில்லை என்றால் நீ துடிப்பாய்
உன் மழலைக் குரல் கேட்க நான் துடிப்பேன்.

ஒரு "டிப்பன்" புட்டெடுத்து வந்து
ஊட்டி விட நீ கேட்பாய்
ஓயாமல் ஏதேனும் கதை
சொல்லியபடியே இருப்பாய்.
கோபத்தில் நான் இருந்தால்
கொஞ்சும் மொழியால் குளிர்விப்பாய்
குறும்புத் தனம் நான் செய்தால்
குழந்தை போல் குதூகலிப்பாய்.

சோகங்கள் எனக்கில்லை என்பது
போல் இருக்கும் உன் வதனம்
அதுவே எனக்குத் தந்தது
பெரும் வசந்தம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு அணியினர்



பாடசாலை மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கல கல” வெனச் சிரித்த நீ
அமைதியாய் இருப்பதென்ன?
கண்ணீர் சொரியா விட்டாலும்
கவலையைக் கொட்டுவதென்ன?

தோழி!
என் வாழ்வில் கிடைத்த பேறு நீ
உன்னோடு நான் வாழும் நாட்கள்
இனி பள்ளிப்பருவ நினைவுதனை
மீட்டிப்பார்ப்பது எப்போது?

நான் ஏதும் தவறு செய்தால்
மன்னித்து விடு என்னை
எதற்காகவேனும் என்னைத்
தண்டித்து விடாதே!
ஏனெனில் உன்னை இழக்கும்
துணிவு எனக்கு இல்லை!

நமக்குச் சொந்தமான சோதனைகளையும்
வேதனைகளையும் உள்வாங்கும்
போதெல்லாம் சோர்ந்து போகவில்லை
நம் மனம்
சற்று பொறுத்திருப்போம் - தோழி
நமக்கென ஓர் நாள் வரும் - அந்த நாளில்
எம்மை இமயத்தின் சிகரத்திற்கு
உயர்த்திவிடப் போகிறது - இந்த
சோதனைகளும், வேதனைகளும்.

அதுவரை
எந்தவொரு சோதனையிலும்...
ஐந்து நிமிடம் முட்டாளாக
இருந்து விடுவோம் என் தோழியே.....
ஆயுள் முழுவதும் அகிலத்தின்
வெளிச்சமாக நாமிருப்போம்.

லஜபதிராஜ் தீபிகா
தரம் 10A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் பொறுப்பு?– சிறுகதை

அன்று சனிக்கிழமை. காலைப்பொழுது அனுவிற்கு மிகவும் இனிமையாகப் புலர்ந்தது. வழமையாக அதிகாலை நான்கு மணிக்கு ஆரம்பித்து சுனாமியாக சுழன்று கடக்கும் நாட்களில் இந்த சனி,ஞாயிறு பொழுதுகள் தான் அவள் உடலுக்கும், உள்ளத்திற்கும் ஆறுதலைக் கொடுக்கும். காலைப்பனியின் குளிருக்கு கழுத்துவரை இழுத்து மூடிய கம்பளியும், மகனின் பிஞ்சுக் கரங்களின் இதமான அணைப்புமாக தூரத்திலிருந்து குரலெடுத்துக் கூவும் ஒற்றைக் குயிலிசையை அனுபவித்தவாறு அவள் விழிமூடிக் கிடந்தாள்.

வழமையாக வேளைக்கே பாலாற்றித்தரும் அம்மா. ஏன் சில நாட்களில் மட்டும் இப்படித் தூங்குகின்றாள் என்று நினைத்து கட்டிலருகே வந்து நின்று பரிதாபமாக "மியாவ்" என்று பலமுறை கத்தி அன்புத் தொல்லை செய்யும் அவளது குட்டிப் பூனயை செல்லமாக கடிந்தபடி மகனின் கையைப் பக்குவமாக எடுத்துவிட்டு, தன் கம்பளியாலும் மகனை நன்றாகப் போர்த்திவிட்டு கண்களை மூடி கடவுளைப் பிரார்த்தித்துவிட்டு கட்டிலை விட்டு இறங்கிய அனு தன் குட்டிப் பூனையின் முன் வழமைப்போல் காலை வைக்க அது குர்ர்ர்ர்.............. என்று செல்லமாய் சத்தமிட்டு தன் தலையால் அவளின் கால்களைத்தடவ அந்த பாசமான உணர்வுடன் அடுக்களைக்குள் நுழைகின்றாள்.

சமையலறையின் சாளரத்தை திறந்து நிறுத்தியுடன் பிணைத்து விட்டாள். சில்லென்று தழுவிய பூங்காற்றில் றோஜா, பாரிஜாதம், பவளமல்லியின் சுகந்தம் இணைந்து ஒரு கதம்பமாக சுவாசத்தை நெருங்க மெதுவாக மூச்சை உள்ளே இழுத்து அந்த அற்புதமான உணர்வை அனுபவித்தபடி தேநீர் தயாரிப்பதற்கான வேலைகளைத் தொடங்கினாள். மேசையிலிருந்த அலைபேசி கண்ணம்மா கண்ணம்மா அழகுப் பூஞ்சிலை... என்று அவளை அழைக்க ... யார் இந்நேரத்தில் என்று எண்ணியவாறே சென்று அழைத்தவர் பெயரைப் பார்த்ததும் சற்று யோசித்தவாறே பேசத்தொடங்கினாள். வணக்கம் கலை என்ன இந்த நேரம் என்ன விசயம்? பதற்றத்தோடு கேள்விக் கணை தொடுக்க அங்கிருந்து வந்த பதிலில் அசைவற்று நின்று விட்டாள்.

கடவுளே!........ இது என்ன கொடுமை?.......... யாரை நோவது ....... யார்க்கெடுத்துரைப்பது? அவள் இதயம் வேதனையால் துடித்தது. இதுபோல் இன்னும் எத்தனை செய்திகளைக் கேட்கப் போகின்றோம்.? கடவுளே! இனியும்இந்த நிலை வராமல் எப்படித்தடுப்பது?? அனுவின் கைகள் இயந்திரத்தனத்தோடு வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தது. அவளது மனம் இருபது வருடங்கள் பின்னோக்கி தாராபுரத்திற்கு பறந்து சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாராபுரம்" ஒரு அழகிய கிராமம். அழகிய வனிதைக்கு நேர்வகிடு எடுத்தது போல் A35 பாதை நீண்டு விரிந்திருந்தது. பாதையின் இருபுறமும் கிழக்கு, மேற்காகப் பிரிக்கப்பட இரு பிரிவிற்கும் பொதுவாக கிழக்குத் தாராபுரத்தில் மிடுக்கோடு நிமிர்ந்து நின்றது அனுவிற்கு இந்த வாழ்க்கையைத் தந்தது அந்த அறிவாலயம். அரிச்சுவடியுடன் ஆரம்பமான அவளது உறவு. பல்கலைக்குத் தெரிவானதுடன் நின்றுவிடவில்லை. அவள் செய்த புண்ணியம் தனது முதல் நியமனத்தையும் அங்கேயே பெற்றுக் கொண்டாள். எத்தனை பேருக்குக் கிடைக்கும் இந்த பாக்கியம். முதல் நியமனத்தைப் பெற்றுக் கொண்ட அவள் மிக்க மகிழ்வோடும், பொறுப்போடும் தன் கடைமைகளைச் செய்து வந்தாள்.

அனுவிற்கு தரம் எட்டு வகுப்பாசிரியராக பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. அன்பான பிள்ளைகள் அவளுக்குத் தன் பிள்ளைகளிடத்தே மிகுந்த பாசமுண்டு. அவர்கள் பண்பானவர்களாக இருக்க வேண்டும், வளர வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருப்பாள். "கரன்" இவனைப்பற்றி சொல்லியே ஆக வேண்டும். ஏனென்றால் இன்றைய கதாநாயகனே இவன்தான். இரண்டு பெண் பிள்ளைகளுக்குப் பின் பிறந்த ஒரே செல்ல மகன். இதனால் வீட்டில் அளவு கடந்த செல்லம். வீட்டின் செல்ல மகன் கரன் அனுவின் வகுப்பில் தனித்துவமாய்த் தெரியும் சுட்டிப்பையன். வசீகரமான தோற்றமும் பேச்சும் குழப்படியில் இருக்கும் சுட்டித்தனம் படிப்பில் கிடையாது. ஆனால் வெளிப்புற வேலையென்றால் விழுந்தடித்துக் கொண்டு எல்லாம் சிறப்பாக செய்வான்.

அதிபர் அனுவை அலுவலகத்திற்கு அழைத்தால். அதற்கு கரன் காரணமாக இருப்பான். அனு அடிக்கடி அலுவலகத்திற்கு அழைக்கபடுவாள் அறுபது பக்க கொப்பி ஒன்று அதிபரால் அனுவிற்கு வழங்கப்பட்டிருந்தது. அது கரனின் குழப்படிகளைப் பதிவு செய்வதற்காக மட்டுமே. இதனால் கரன் பாடசாலைக்கு வரவில்லை என்றால் அப்பாடா என்பது போல் அனு வகுப்பிற்குள் நுழைவாள். கரன் குழப்படியைப் போலவே அவன் வகுப்பறை மற்றும் அயற் சூழலின் சுத்தம், அழகுபடுத்தலிலும் அக்கறையாக முன்னின்று உழைப்பான் என்பதால் சில வேளைகளில் அவனது வரவின்மை வகுப்பில் ஒரு வெறுமையைக் கொடுக்கும். நன்றாகப் படிக்கும் மாணவர்கள் என இனம்காணப்பட்டோரிடம் சொல்லியும் செய்யப்படாது கிடக்கும் வேலைகளை இவன் சொல்லாமலே செய்து முடிப்பான். அப்படியென்றால் கரன் நல்லவனா இல்ல கெட்டவனா??

அன்றொரு நாள் வழமைபோல் அனு பாடசாலைக்குச் சென்ற போது பாடசாலை முன்றலில் பெருங்கூட்டமும் சத்தமுமாக இருந்தது. என்னவாக இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என யோசித்தபடி மெதுவாக தன் ஈருருளியை உருட்டிக்கொண்டு உள்ளே நுழைந்தபோது கரனின் குடும்பமே கோபாவேசத்தோடு கெட்ட வார்த்தைகளால் அதிபருக்குத் திட்டிக் கொண்டிருக்க பாதியூரே நின்று வேடிக்கை பார்த்தபடி இருந்தது. அதிபரும் ஆசிரியர்களும் குற்றவாளிகளைப்போல் கூனிக்குறுகிக் கொண்டிருந்தார்கள்.

அனுவிற்கு ஒன்றும் புரியவில்லை. விசாரித்த போது நேற்றைய பரீட்சையின் போது மேசையில் மேளம் தட்டிக் கொண்டிருந்ததாகவும், ஆசிரியர்கள் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை என்றும், அதிபர் வந்து பார்த்தபோது பார்த்து எழுதுவதற்காக குறிப்புக் கொப்பியைக் கிழித்துக் கொண்டு வந்திருந்ததாகவும், எனவே அதிபர் பரீட்சை மண்டபத்தை விட்டு அடிபோட்டு கலைத்து விட்டதாகவும் அதன் பிரதிபலன் தான் இந்த கோரத் தாண்டவம் என்பதையும் அறிய முடிந்தது.

இந்த சம்பவத்தின் பின் அதிபர் உட்பட ஆசிரியர்கள் அனைவருமே எமக்கு ஏன் வீண் வம்பு என்று பயத்துடன் ஒதுங்கிக் கொள்ள ஆரம்பித்தார்கள். அண்மைக்காலமாக "ரௌடிதான் கெத்து மத்தவங்க வெத்து" என்று ரௌடிகளை Hero வாகக் காட்டும் சினிமாக் கலாசாரம், மாணவர்களைத் தண்டிக்கும் ஆசிரியர்களுக்கு தண்டனை வழங்கும் சட்டங்கள் வர்த்தக நலன் கருதி துரும்பையும் தூணாகச்சித்திரிக்கும் ஊடக தர்மங்கள் இவற்றுக்கு மத்தியில் ஆசிரியர் ( ஆசு + இரியர் =ஆசிரியர் குற்றங்களைக் களைபவர்) என்ன செய்ய முடியும்?? இதன்பின் கரனின் துடுக்கு வரம்பின்றிப்போனது காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லையே. நாட்கள் நகர்ந்தன. கரன் க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ் சமயம் இரு பாடங்களில் மட்டும் சாதாரண சித்தியைப் பெற்று பாடசாலையை விட்டு வெளியேறினான்.

இருபது வருட இடைவெளியில் இடையிடையே இவனது திருமணங்கள் பற்றி அனு அறிந்திருந்தாள். அனுவின் மாணவி மாலதி தனது மூன்று வயது மகனுடன் அவளைச் சந்தித்த போது தானும் பிள்ளையும் தனித்திருப்பதாகவும் கரன் வேறு திருமணம் செய்துவிட்டான் என்றும். சொல்லி கண்கலங்கினாள். காலம் கடந்தபின் கலங்கி என்ன பயன்? "பட்டபின் தானே தெரியும் தொட்டால் சுடுவது நெருப்பென்று" அவளை அன்று தேற்றியது மனதில் வந்து வலியைத் தந்ததாக உணர்ந்தாள். அது மற்றும்படி அனேகமாக கரனை மறந்துவிட்ட நிலையில் தான் இன்று கலை சொன்ன செய்தி அனுவின் மனதில் கேள்விக் கணைகளாக....

அப்படி என்ன செய்தி என்று தானே கேட்கிறீர்கள்? இது தான் அந்த துயரச் செய்தி. குளத்தருகே துண்டு துண்டுகளாக வெட்டப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் சாக்கு மூடைக்குள் கட்டப்பட்டு இளைஞனின் சடலம். அதுவேறுயாருமல்ல. "எங்களுடைய கரன்" அவன் செய்த குழப்படிகளெல்லாம் மேலாக அவன் விரும்பி வந்து செய்யும் பாடசாலைப் பணிகள் கண்களுக்குள் நிழலாட கன்னங்கள் கடந்து தரைதொட்டது கண்ணீர்த்துளிகள். கடவுளே! இந்த நிலைக்கு யார் பொறுப்பு? அவனால் நிர்க்கதியாக்கப்பட்ட மூன்று பெண்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் இனி யார் பொறுப்பு? யார்? யார்? அதிகம் செல்லம் கொடுத்து கெடுத்து வைத்த பெற்றோரோ? பிள்ளைகளைத் திருத்தவேண்டிய தார்மீகப் பொறுப்பை சட்டத்திற்கும் பெற்றோருக்கும் பயந்து கைவிட்ட பாடசாலைச் சமூகமா? பிள்ளைகளைத் தண்டித்து விட்டார்கள் என்று தன் எழுத்துக்களால் அலங்கரித்து இலாபத்தை ஈட்டும் ஊடகங்களாக? யார்? இன்றும் ஊடகங்கள் தன் பக்கங்களை அலங்கரித்திருக்கும் இளைஞன் துண்டு துண்டாக வெட்டிக் கொலை "கட்டப்பட்ட சாக்கில் சடலம் கண்டுபிடிப்பு" அன்று போல் இன்றும் ஊர்திரண்டு வந்து வேடிக்கை பார்த்திருக்கும். இருந்தும் என்ன பயன்? இழந்தவை எல்லாம் இழந்தவை தானே?

கடவுளே! ஏனிந்தக் கொடுமை? அனுவின் மனதில் இப்போது சாக்கு மூட்டைக்குள் பல முகங்கள் வந்து போனது. கடவுளே! இந்தப் பிள்ளைகளைக் காப்பாற்று. அவர்களுக்கு நல்ல புத்தியைக்கொடு. உளியின் வலியின்றி சிற்பம் என்றும் பிறந்ததில்லை. மண்ணைக் கீறாமல் பயிர்கள் முளைப்பதில்லை பட்டை தீட்டினால் தானே வைரமே ஜொலிக்கிறது? அபாயமான நிலையில் இன்று எம் சமூகம் போய்க் கொண்டிருக்கும் போது எம் பிள்ளைகளை எப்படி நாம் காப்பாற்றப் போகின்றோம். அனுவின் மனதில் பல்வேறு ஆதங்கம் மனதுள்ளேயொரு பட்டிமன்றம்.

மனிதனுக்கு ஒழுக்கம் என்பது மிக மிக அவசியம் என்பதனை பலர் ஏன் உணர்வதில்லை? கல்வியை இழந்தவன் கல்வியை மாத்திரமே இழக்கிறான். ஒழுக்கத்தை இழந்தவனோ யாவற்றையும் இழந்தவன் ஆகின்றான். பிள்ளைகள் அடிப்படையான ஒழுக்கத்தை பெற்றோரிடமிருந்தே பெற்றுக் கொள்கிறார்கள். அதனால்தான் ரஸ்யநாட்டு அறிஞர் மாக்ஸிம் கோர்க்கி "பெற்றோர்களே குழந்தையின் நிரந்தரமான ஆசிரியர்கள் அவர்களுக்கு விடுமுறையே கிடையாது" என்கிறார். இடையில் பொறுப்பேற்கும் ஆசிரியர்கள் இடையிலேயே சென்று விடுவதனால் பிள்ளையின் ஒழுக்கம் தொடர்பாக அதிகம் விழிப்பாக பெற்றோர்கள் அல்லவா இருக்க வேண்டும்?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இன்றைய எமது பொருண்மிய நிலை எம் இளைய சமுதாயத்திற்கு பெரிய சவாலாக உள்ள போது பல பெற்றோர்கள் தம் வறுமையைப் போக்குவதாக நினைத்து சட்ட விரோத தொழில்களில் ஈடுபடுகின்றார்கள். இது வறுமைக்குத் தற்காலிகத் தீர்வாகலாம். ஆனால் எம் சந்ததியை வேரோடு பிடுங்கி எறியும் ஈனச்செயல் என்று ஏன் அவர்கள் சிந்திப்பதில்லை? உண்மையிலேயே மனிதனுக்கு பகுத்தறிவு ஒன்று உள்ளதா? ஏற்றத்தாழ்வு எதுவுமின்றி இன்று அனைவரையும் இந்த போதை புகுந்து புரட்டிப்போடுகிறதே! எல்லாமே கைமீறிப் போய்விட்டதா? இல்லை அவ்வாறு சொல்லிச் சொல்லியே நாம் கைதவற விட்டு விட்டோமா?

முடியவில்லை. அனுஷாவால் மூச்சுவிட முடியாதபடி ஒரு உணர்வு. கேள்வி மேல் கேள்வியாக உள்ளத்தைத் துளைக்கின்றது. பதிலேதும் காணமுடியாத வலியில் நெஞ்சம் தாழ்ந்து எழ உஸ்ணமான நெடுமூச்சொன்று வெளியேறுகிறது. கனத்த இதயத்துடன் இயந்திரத்தனமாய் இயங்கிய அனுவை "பசிக்குதம்மா" என்ற மகனின் குரல் இயல்பு நிலைக்குக் கொண்டுவர ஈரவிழிகளூடே மகனைப்பார்த்து முறுவல் செய்து "சாப்பிடலாம் செல்லம் கையைக் கழுவிக் கொண்டு ஓடி வாங்கோ அப்பாவையும் அண்ணாவையும் கூப்பிடுங்கோ சேர்ந்தே சாப்பிடலாம்" என்று கூறி காலை உணவைப் பரிமாற ஆயத்தமானாள்.

முற்றும்

யாவும் கற்பனை ............... அல்ல.................

திருமதி. சந்திரவாணி சுரேசன்.
ஆசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றித் தந்த புகையிரத வண்டி

அந்தரங்கமாக அவிந்து கொண்டிருந்த அதிகாலைப் பொழுதில் அவள் பம்பரமாயச் சுழன்று கொண்டிருந்தாள். அந்தப் பொழுதிலும் வியர்வை ஆறாகப் பெருக்கெடுத்து வழிந்தோட துடைத்தெறிந்ததப்படியே மும்முரமாகச் சமையல் செய்து கொண்டிருந்தாள். இன்னும் அரைமணி நேரத்தில் அவள் வேலைகளை நிறைவு செய்தால் மட்டுமே உரிய நேரத்தில் பாடசாலைக்குக் கிளம்ப முடியும்.

ஒற்றையாளாக வீட்டு வேலைகளையும் பார்த்து பிள்ளைகள் மூவரையும் தயார்ப்படுத்தி பாடசாலைக்கு அனுப்பிய பின்னர் வீட்டுக் கதவுகளைப் பூட்டி அவள் தெருமுனையைத் தாண்டும் பொழுது நேரம் காலை ஏழு மணியைத் தொட்டு விடும். ஆனால் இன்று அவள் நெஞ்சில் ஒரு படபடப்பு. மாற்றலாகிப் புதிய பாடசாலைக்குச் செல்லப் போகின்றாள். புதிய சூழல், அறிமுகம் இல்லாத முகங்கள் என்ற நினைவில் இதயம் வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது.

பம்பரமாகச் சுழன்று வேலைகளை முடித்து, சேலையைச் சுற்றி பையைத்தோளில் மாற்றி, பாதங்களைப் பத்திரமாகக் காலணிக்குள் புகுத்திக் கொண்டவள் தெரு முனையை நோக்கி நடையை வேகமாக்கிக் கொண்டாள். பள்ளியை நெருங்க நெருங்க அவள் இதயம் இன்னும் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. அலுவலகத்தை அண்மித்தவளின் கால்கள் முன்னோக்கி நகர மறுக்க புன்னகை பூத்த முதல்வரின்? "வாங்கோ ரீச்சர்" என்ற வரவேற்பில் அகம் மகிழ்ந்து அலுவலகத்திற்குள் வலது காலைப் பவ்வியமாக எடுத்து வைத்தாள் நிறஞ்ஜெனி ரீச்சர். உங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அமருங்கோ சந்தோசமாக உங்கள் பணியை ஆரம்பிக்கலாம். இங்குள்ளவர்கள் அனைவரும் ஒரே குடும்பம் என்ற நினைவுடன் செயற்படுங்கள். எந்தத் துன்பமும் வராது என்ற அவரின் இதமான வார்த்தைகள் அவளுக்குள் இருந்த தயக்கத்தைக் களைத்தெறிந்த படியே வரவுப் புத்தகத்தில் கையொப்பத்தை இட்டு விட்டு நிமிர்ந்த போது முதல்வரின் அன்பும்,கண்டிப்பும் கலந்த தொனியில் "ரீச்சர் தரம் எட்டு வகுப்பாசிரியர் சுகவீன லீவில் இருக்கின்றார். அந்த வகுப்பிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போங்கோ" என்றார்.

வகுப்பினுள் காலடி எடுத்து வைத்தவளுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. அவள் இதுவரை சந்தித்திராத வித்தியாசமான சூழல் மாணவர் ஒவ்வொருவரும் தமக்கு விரும்பிய செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் . சண்டையும், சச்சரவும், கூச்சலும், கும்மாளமும், பாட்டும், கதையும் என அவளின் வரவை அவர்கள் கருத்தில் எடுத்ததாகவே தெரியவில்லை. சற்று உரத்த குரலில் "வணக்கம் பிள்ளைகள்" என்றாள். யார் காதிலும் விழுந்ததாகவே தெரியவில்லை. மீண்டுமொருமுறை குரலை சற்று உயர்த்தி "பிள்ளைகள் இடங்களில் இருங்கோ" என்றாள். அப்பொழுது தான் ஓரிருவர் திரும்பிப் பார்க்க துருதுருவென்ற அகன்ற விழிகளையுடையவன் நுதலைச் சுருக்கி கலப்படமில்லாச் சிரிப்புடன் "புது ரீச்சர்" என்றவன் "டேய் கத்தாம இடத்தில் இருங்கடா புது ரீச்சர் வந்திருக்கின்றா" என்றான்.

ஆர்ப்பரித்த அலைகள் பெட்டிப் பாம்பாகி தத்தம் இடங்களில் அமர வகுப்பறை நிசப்தமாகியது. மீண்டும் "வணக்கம் பிள்ளைகள் நான் உங்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க வந்திருக்கிறன்" என்றவளைத் தொடர விடாமல் ஒருவனின் குரல் "இங்க பாருங்கடா, நாம தமிழே படிக்கிறேலே. இந்த புது ரீச்சர் எங்களுக்கு இங்கிலிசு படிப்பிக்க வந்திருக்கிறாவாம் என்றதோடு மீண்டும் வகுப்பறையை கலவரமாகியது. பொங்கி வந்த அழுகையை அடக்க முடியாமல் வகுப்பறையை விட்டு வெளியேறினாள். கலங்கிய கண்களுடன் அவளைக் கண்ட சக ஆசிரியர் ஒருவர் "என்ன ரீச்சர்? தரம் எட்டு வகுப்பிற்கோ போய் வாறீங்கள் போகப் போக பழகிரும் யோசிக்காதிங்கோ" என்று சர்வ சாதாரணமாக கூறி விட்டு அவளைக் கடந்து சென்றார்.

அவளுக்கோ என்ன செய்வதென்றே புரியவில்லை. தொடர்ந்து சென்ற வகுப்புக்களில் அவளால் நிம்மதியாகப் படிப்பிக்கமுடியவில்லை. எப்படி இந்தப் பிள்ளைகளைச் சமாளிக்கப் போகின்றேனே கடவுளே! இதென்ன சோதனை எனக்கு என்று சோர்ந்தே போனாள். அடுத்து வந்த ஓரிரு நாட்களிலும் இதே நிலவரம் தொடர் கதையாகிப் போக சக ஆசிரியர்களுடன் என்ன செய்யலாம் என ஆலோசித்த போது வெவ்வேறு கருத்துக்கள் வந்து சேர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலோனோர் "உதுகள திருத்தேலாது ரீச்சர். நீங்க எங்கட கடமைக்கு படிப்பிச்சிற்று கொப்பியைத் திருத்திப் போட்டு வாங்கோ சீர்த்திருத்த வெளிக்கிட்டு தேவையில்லாத பிரச்சினையில மாட்டுப் பட்டிராதிங்கோ" என்றார்.

அவர்கள் கூறியது போல் செயற்பட அவளுக்கு மனம் ஒப்பவில்லை. நிசப்தமான நிலவொளி. இரவில் முற்றத்தில் அமர்ந்திருந்தவளின் நினைவெல்லாம் சிதறிக் கிடக்கின்ற தன் வகுப்பின் நட்சத்திர மணிகளை எவ்வாறு தன் வசப்படுத்தி கற்பித்தலை மேற்கொள்ளலாம் என்பதிலேயே மூழ்கிக் கிடந்தது, ஒரு தீர்மானத்திற்கு வந்தவளாய் படுக்கையில் சரிந்தாள்.

மறுநாள் வெள்ளிக்கிழமை வகுப்பறைக்குள் உற்சாகமாக நுழைந்தாள். "வணக்கம் பிள்ளைகள்" ஓரிரு குரல்கள் மட்டுமே பதிலாகக் கிடைத்தன. புன்னகைத்தவாறே "இண்டைக்கு நாங்கள் மைதானத்திற்குப் போவோமா? யாருக்கெல்லாம் விளையாட விருப்பம்" என்றதும் ஏகோபித்த குரலில் "எல்லோருக்கும் விளையாட விருப்பம் ரீச்சர் "என்றவாறே ஓடி வந்து அவளின் இரு கரங்களையும் இறுகப் பற்றிக் கொண்டு அவளை மைதானத்தை நோக்கி இழுத்தபடியே அனைவரும் தயாராகிக் கொண்டார்கள். "வரிசையாக வாங்கோ, புகைவண்டியில் போவம், நான் தான் என்ஜின்" என்றாள் ஆசிரியை நிரஞ்ஜெனி. "பெட்டியள கொழுவுங்கோடா" என ஆசிரிய இயந்திரத்துடன் இழுப்பட்ட படியே ஒரு புகையிரதம் முப்பத்து நான்கு மாணவர்களுடன் மைதானத்தை நோக்கி நகரத் தொடங்கியது.

புகையிரதப் பயணம் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரப் போவதை உணராமலே அவள் இயந்திரமாகி இழுத்துக் கொண்டு போனாள். அவர்களுடன் தானும் ஒருவராகி கிளித்தட்டு விளையாட்டில் இணைந்துகொண்டாள். அவளின் கலகலப்பும் தங்களுடன் இணைந்து விளையாடியதும் அவர்களுக்குப் பிடித்துப் போக குட்டிப்பூனையாக அவளைச் சுற்றிச்சுற்றி வரத் தொடங்கினார்கள். ஒரு நாள் மைதானம் மறுநாள் வகுப்பறை என அவளும் அவர்களுடன் ஒன்றித்துப் போனதைக் கண்டு வியந்து பாராட்டியவர்களுமுண்டு, விசனப்பட்டுக கொண்டவர்களுமுண்டு. எதையும் கருத்திற் கொள்ளாமல் அவளது பயணம் மகிழ்ச்சிகரமாக நகரத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் கண்பட்டதோ இசையரசன் விபத்தொன்றில் அகப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றான் என்ற செய்தி பேரிடியாக அவள் காதுகளை வந்தடைந்த போது இதயம் நொருங்கிப் போக வைத்தியசாலையை நோக்கி வேகமாகத் துவிசக்கர வண்டியை மிதிக்கத் தொடங்கினாள். அவனது முகம் மிகவும் பிரகாசமாக சற்றும் மங்காமல் அவள் விழிகளில் வந்து நின்றது. வகுப்பினுள் கால் பதித்த அன்று புது ரீச்சரோ என்று சிறிது நேரம் வகுப்பறையை அமைதியாக்கியவன் இசையரசனே.

கடவுளே! அவனது வாழ்க்கையில் விளையாடி விடாதே. வாழ வேண்டிய பிஞ்சினை உன் பாதங்களிற்கு காணிக்கையாக்கி விடாதேயப்பா, என மன்றாடியபடியே I.C.U வை நெருங்கினாள். அங்கு பரபரப்புடன் நினற அவனுடைய உறவினர்களிடம் விடயத்தை வினாவினாள். குருதி அதிகமாக வெளியேறியுள்ளதால் உடனடியாக இரத்தம் ஏற்ற வேண்டியுள்ளதாகவும் இரத்த வங்கியில் O குருதி வகை இல்லை. எனவும் அந்தரித்துக் கொண்டிருந்தார்கள் எனது குருதி O வகை தான் என்று கூறியபடியே இரத்த வங்கியை நோக்கி வேகமாக ஓடியவள். மலர்ந்த வதனமாய் வெளியே வந்தாள் நிறஞ்ஜெனி. தன் பிள்ளை ஆபத்துக் கட்டத்தைத் தாண்டி விட்டான். என்ற செய்தியும் தான் உதிரம் கொடுத்துத் தன் பிள்ளையைக் காப்பாற்றி விட்டேன் என்ற பெருமிதமும் ஒன்று சேர நிமிர்ந்து நடக்கத் தொடங்கினாள் ஆசிரியத்தாயாக.

திருமதி.த.யசோதரன்
ஆசிரியர் (ஆங்கிலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நன்றியோடு"


"பாறையில் விழுந்த சிறு விதையென"
வேரோடத் துடித்து இன்று நிழல் தரும் விருட்சமாக
வளர்ந்து வரும்
**கிளி/ சிவபாதகலையகம் அ.த.க பாடசாலையின்**
40வது நிறைவையொட்டி வெளிவரும்
**"மாணிக்கத்தடம்"**
என்னும் மலர் ஆக்கத்திற்கு எல்லாமாய் நின்று உதவி புரிந்து கொண்டு இருக்கின்ற திரு.வே.சர்வேஸ்வரன் ஐயா அவர்களை நன்றி உணர்வோடு மனமிருத்திக் கொள்வதோடு, ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தந்த பெரியவர்களையும் நன்றியோடு நோக்கும் அதேவேளை, ஆக்கங்களைத் தந்தவர்களையும் ஊக்கமளித்து உறுதுணையாய் நின்றவர்களையும், இம் மலர் வெளிவர அனைத்து வழிகளிலும் உதவிய நல் உள்ளங்கள் அனைவரையும் நன்றி உணர்வோடு மனமிருத்தி நிறைவடைகின்றோம்.

"நன்றியென்றும் மறப்பதல்ல
மனமிருத்திக் கொள்வது"

மலர்க்குழு
கிளி/ சிவபாதகலையகம் அ.த.க.
பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org